
# திருக்கோயில்

"என்கடன் பணி செய்து கிடப்பதே"

CONNEMARA ... LIBRARY
11 JAN 1969
MADRAS



ஸ்ரீ இராமாநுஜர், ஸ்ரீ பெரும்பூதூர்

மாலை 9] பிலவங்க-வைகாசி-ஜூன், 1967 [மணி 9

சென்னை அரசாங்க அறநிலையப்



தஞ்சாவூரில், ஹரிகதா காலட்சேபப் பயிற்சி நிலையத்தின், முதற் பயிற்சித் திட்ட நிறைவு விழாவில், நமது **அறநிலை ஆணையர்** அவர்கள் தலைமை தாங்கிப், பரிசுகளும் நற்சான்றிதழ்களும் வழங்கி, உரை நிகழ்த்துதல் (22.4.67)

## பொருளடக்கம்


1. இராமலிங்கரின் இலக்கியக் கடிதம்
2. பாம்பன் சுவாமிகள்
3. திருவள்ளுவரின் உவமைத்திறன்
4. சிவஞான போதச் சூத்திரங்கள்
5. திருச் சந்த விருத்தம்
6. விடை தெரியுமா ?
7. விடை விளக்கம்
8. ஸ்ரீ ராமாயண ரஸப்ரவாஹம்
9. சமரசம்
10. சைவ சமயம்
11. வேதத்தின் பிரிவுகள்
12. ஞானசித்தர்களும் சித்த மருந்தும்
13. மதிப்புரைகள்



## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

ஆண்டுச் சநதா ரூ. 10/-

தனி இதழ் விலை ரூ. ஒன்று

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் "திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34" என்னும் முகவரிக்கு ரூபா பத்து அனுப்பி, எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்கள் ஆகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார அறநிலைய உதவி ஆணையாளர்களின் அலுவலகங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவறுமற் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது.

திருக்கோயில்
திங்கள் வெளியீடு

மாலே 9] பிலவங்க-வைகாசி-ஜூன், 1967 [மணி 9

# இராமலிங்கரின் இலக்கியக் கடிதம்

முன்னுரை :

திருவருட் பிரகாச வள்ளலார் ஆகிய இராமலிங்க அடிகளே, ஒரு சிறந்த அடியார், சான்ருேர், அருளாளர், சித்தர், ஞானி என்றே பெரும்பாலும் நம்மனேர் பலரும் கருதிப் போற்றுவது வழக்கம். அடிகளார், வேறு பிற எத்தனேயோ வகைகளிலும் கூடக் கருதியுணர்ந்து போற்றத்தக்கவராக விளங்குகின்ருர்.

அடிகளார் ஒரு சிறந்த பெரும் கவிஞர்; நல்ல இலக்கியப் படைப்பாளர், தத்துவப் பேரறிஞர், என்றெல்லாம் கருதிப் போற்றுதற்கும் கூடப் பல வகைகளில் தகுதியும் சிறப்பும் உடையவராவர்.

கடிதக்கலே :

இலக்கியக் கூறுகளில், கடிதக் கலேயும் ஒரு கூருகும். எல்லோருமே கடிதம் எழுதுகின்றனராயினும், கலேத்திறம் அமைந்து, இலக்கியச் சிறப்பு வாய்ந்த கடிதங்களே, ஒருசிலரே எழுத இயலும். சிவபிரான், சேரமான் பெருமாளுக்கும், கொற்றவன்குடி உமாபதி சிவத்திற்கும் கடிதம் எழுதியருளிய செய்தியை, இலக்கிய அறிஞர்கள் அனேவரும் உணர்வர். மாதவி கோவலனுக்கு எழுதியனவாக, இரண்டு கடிதங்களேச் சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறே காளிதாசரும், சகுந்தலே துஷ்யந்தனுக்கு எழுதிய கடிதமாக ஓர் அழகிய சுலோகத்தினேப் பாடியுள்ளார். சுவைமிக்க அழகிய கடிதங்களே எழுதுவதென்பது, ஓர் அரும்பெரும் கலேத் திறமையாகும். ஆங்கில மொழியில் 'லார்டு செஸ்டர்பீல்டு' (Lord Chesterfield) 'வில்லியம் கூப்பர்' (William Cowper) 'ராபர்ட் வால்போல்' (Robert Walpole) முதலிய பேரறிஞர்கள் பலர் எழுதியுள்ள கடிதங்கள், சிறந்த இலக்கியங்களாக மதித்துப் போற்றப் பெறுகின்றன.

திருமழிசை அன்பர் :

இத்தகைய நிலேயில், இராமலிங்க அடிகளாரும் இலக்கியச் சுவை மிகுந்து, தத்துவக் கருத்துக்கள் நிறைந்த இனிய கடிதங்கள் எழுதும் கலேத்திறம் அமைந்தவராகத் திகழ்கின்ருர். சென்னேக்கு அணித்தாக உள்ள திருமழிசை என்னும் ஊரில் வைத்தியலிங்கதேவ முதலியார் என்பவர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் நமது அடிகளார்பால் பேரன்பு கொண்டு விளங்கினர். அவருக்கு முத்துச்சாமி என்னும் மைந்தர் ஒருவர் இருந்தார். அவரும் அடிகளார்பால் அன்பு மிக்கவர். சிவபிரான் மீது அவர்பாடிய பாக்களேப் பார்வையிட்டு அடிகளார் அவருக்கு ஒரு பாராட்டுரைக் கவியும் பாடியருளியுள்ளார். அடிகளார் வடலூர்ப் பெருவெளியில் எழுந்தருளியிருந்த காலத்தில், முத்துச்சாமி முதலியாருக்குத் திருமணம் நடைபெற்றது. அது போது வள்ளலாரின் 'திருக்கையால் திருநீறு அளிக்கப் பெற்றிலேனே' என்று

முத்துச்சாமி மனம்வருந்தினர். அச்செய்தியைக் கேள்வியுற்ற அருளே உருவான அடிகளார், முத்துச்சாமியின் திருமணத்திற்குத் தாம் வடலூரினின்று வர இயலாது போயினமைக்குரிய காரணத்தைத் தெரிவித்து, அவர்தம் உள்ளத்தை மகிழ்விக்கும் முறையில், ஒரு கவிதைக் கடிதம் தீட்டித் தக்கவர் ஒருவர் மூலம் கொடுத்தனுப்பினர்.

கவிதைக் கடிதம் :

கவிதைச் சிறப்பும், இலக்கிய நயமும், தத்துவக் கருத்துக்களும், உலகியல் வாழ்க்கை உண்மைகளும் ஒருங்கே கலந்து நிறைந்து, கற்பார் உள்ளமெல்லாம் கொள்ளை கொள்ளும் வகையில், ஈடும் எடுப்புமற்று அக்கடிதம் மிகச் சிறந்த தொன்ருக விளங்குகின்றது. அதன் கருத்துச் சுருக்கத்தை மட்டும் ஈண்டு ஒரு சிறிது கண்டு அமைவோம்:—

"சிவபெருமான் திருவடிகளில் அன்பு மிக்கவன்; அடியவர்களுக்கு அடியவன்; தூய்மை என்னும் நீரில் மூழ்கி, வாய்மை என்னும் துகில் உடுத்து, திருநீருகிய கவசம் தரித்து, இறைவனை அகத்தும் புறத்தும் அருச்சனை புரிந்து, சிவபோகம் என்னும் திருஅமுதை உண்டு, சீலம் என்னும் தாம்பூலம் தரித்து, அளவிலா இன்பம் அனுபவிக்கின்ற மூதறிவாளனுகிய முத்துச்சாமி என்னும் திருவாளனுக்கு, இராமலிங்கம் எழுதிவிடுத்த வாழ்த்துரைக் கடிதமாவது:-

ஐய! நின் திருமணத்திற்கு வர இயலாமல் தடைகள் பல நேர்ந்தன. அத்தடைகளை அளவிட்டுக்கூற ஆயிரம்கோடி நாக்குகள் இருப்பினும் இயலாது; அவற்றை எண்ணிச் சொல்லுவதற்கு உடம்பெல்லாம் உள்ளமாகக் கொள்ளினும் போதா; எழுத முயன்ருல் ஏட்டுக்கடங்காது. என்ருலும் அன்புமிக்க நின்பொருட்டு யான் சிறிது எழுதத் துணிந்தேன். யான் ஓர் ஏழை; சிறியரில் சிறியேன்; எனக்கு அறிவே இல்லை என்பது நீ அறிந்ததே யாகும்.

ஆணவம் :

செம்பிற் களிம்பு செறிந்தது போல, ஆணவம் என்பவள் ஒருத்தி அநாதி காலத்திலேயே பிரம்மராட்சசிபோல் என்னைப் பிடித்துக் கொண்டு எனக்கு மனைவியாகி விட்டாள். அவள் கடவுளையும் உலகத்தையும் யான் காண வொட்டாள்; எங்கும் எதுவும் இருள் வடிவமேயாகக் காட்டுவாள். கொடியவள் ஆகிய அவள், இரவு பகல் இன்பம் துன்பம் ஒளி வெளி என்பவற்றை, உள்ளவாறு எனக்கு உணர்த்தாமல், ஒன்றை மற்ருென்ருக மாற்றிப் பிறழவே காட்டுவாள். அரக்கியாகிய அவளிடமிருந்து தப்ப முடியாமல் எளியேன் மிகவும் இடர்ப்படுகின்றேன்.

அஞ்ஞானம் :

அவள்பால் எனக்குப் பிறந்த பிள்ளை ஒருவன். அவன் அறிவு சிறிதும் இல்லாத மூடப்பிள்ளை. பெயர் அஞ்ஞானம். அவன் என் அகக் கண்ணையும் புறக்கண்ணையும் மூடி என்னைப் பெரிதும் அல்லற்படுத்துவான். தன்னை இன்னுன் எனத் தானும் காட்டான். என்னை இன்னுன் என்று எண்ணவும் ஒட்டான். தன் தாயினும் கொடியவன். ஆயினும் என் விதியை நொந்து அவனை விரும்பி வளர்த்தேன். பொல்லாத மனைவியும் அறிவில்லாத பிள்ளையும் வாய்த்ததனுல், உலகில் என்னை மதிப்பவர் ஒருவருமில்லை. அவன் வளர வளர, என் உற்ருர் உறவினர் என்னை விட்டுப் பிரிந்தனர். யானும் அறிவு கெட்டு அலைகின்றேன். இந்த இரண்டு தொடக்குகள் போதா என்று மற்றும் பற்பல தொடக்குகளும் அடுக்கடுக்காக வந்து என்னைப் பற்றிக் கொண்டன.

மாயை :

மாயை என்னும் மாது ஒருத்தி எனக்கு இரண்டாம் மனைவியாக வந்து வாய்த்தாள். சிறிய காக்கையின் கழுத்தில் பெரிய பனங்காயைக் கட்டியது போல, அவள் என்னுடைய கழுத்தைக் கட்டிக் கொண்டாள். அவள் செய்யும் மாயச் செயல்களுக்கு அளவேயில்லை. கொள்ளிவாய்ப் பேய்கள் கோடி சேர்ந்து ஒரு சிறு குழந்தையைப் பிடித்துக்கொண்டாற் போல, அவள் என்னை மணந்துகொண்டாள். அவளுடைய நடத்தையைப் பற்றிச் சொல்லத் தொடங்கினுல், அஃது ஒருபெருங்கதையாகி விடும். பிடாரியைப் பெண்டாகப் பெற்ருற் போல, இக்கொடும்பாவி எனக்கு மனைவியாயினுள். அடிமடி பிடித்தும், அரிய வம்பு இழுத்தும், மடிமாங்காய் இட்டும், அவள் செய்யும் கொடுமைகள் அளவுக்கு அடங்கா. என்னை உறங்கவிடாள்; உறங்கு பாய் சுருட்டாள். இரவும் பகலும் என்னை இழுத்து அலைப்பாள். இவளால்யான் படும் இடர்கட்கு ஓர் எல்லையே இல்லை.

மனம் :

பெருந்தவம் புரிந்தும் குரங்கையே பெற்றது போல, மனம் எனும் ஒரு புதல்வன் உலக்கைக் கொழுந்தென அவளிடம் எனக்கு உதித்தான். அவன் செய்யும் சேட்டைகள் அருவருப்பே விளைக்கும். அவன் விதிவிலக்கு அறியான், மிகவும் சிறியவன். ஆயினும் விண்ணும் மண்ணும் நடுங்க வினைகள் இயற்றுவான். காமக் குழியில் கடுகி விழுந்து திகைப்பான். கோப வெங்கனலில் குதித்து வெதும்புவான். உலோபச் சிறையில் உழன்று அலைவான். கோபக் கடலில் மூழ்கி மயங்குவான். சொல்வழி நில்லான்; நல்வழி செல்லான். எலும்பைச் சுரண்டும் எரிநாய் போல்வான். என்னைத் தந்தை என்று எண்ணான். இவன்செயலெலாம் சொல்லில் கற்களும் நெகிழ்ந்து கசியும். மரங்களும் கண்ணீர் பொழியும். இமையாத் தேவரும் கண்களை இமைத்திடுவர். பிறந்த அப்பாவி இறந்தான் இல்லை!

புத்தி :

காசிபன் மனைவி கடுந்தவம் புரிந்து பாம்புகள் தம்மையே பயந்தமை போல, புத்தி என்னும் மற்றொரு புல்லிய புதல்வன் அடுத்து எனக்குத் தோன்றினன். அவன் எளியரில் எளியன்; வாய்மையும், தூய்மையும் வாய்ந்தவன். தாயுடன் பழகான்; தமையனோடு அணையான்; தறுகணாளரைச் சாரான்; பாவம் என்னில் பதறி அயர்வான்; எப்பாடும் படான்; எவருடனும் சேரான்! கங்குலும் பகலும் எங்கும் உலவுவான்; ஒரு நொடிப் பொழுதும் வறிதே இரான்.

சித்தம் :

நாடிநாடி நாயை ஈன்றது போல, மாயை என்னும் என் மனைவி, சித்தம் என்னும் ஒரு சிறிய குழந்தையைப் பின்னரும் பெற்றாள். உணர்விலி என்றே உலகோர் அவனைக் கூறுவர். அவன் வானமே குளமாய், உடுக்களே மீனாய், மதியமே தாமரை மலராய் நினைத்து, அதில் மூழ்கவும், பிடிக்கவும் கொய்யவும் எண்ணுவான். எழுவான், எட்டுவான்! இயலாது இளைத்து இடர்ப்படுவான், என்னையும் இடர்ப்படுத்துவான்!

அகங்காரம் :

இவன்போல் மற்றொரு புதல்வன், அகங்காரம் என்னும் அடங்காக்காளை, எனக்குப் பிறந்தான். அவன் செயல் பேசவும் வாய் கூசும். அவன் கூற்றுவர் கோடி கூடினாற் போலக் கொடியனாய் முளைத்து வளர்ந்தான். 'மூத்தவன் மூழை; இளையவன் காளை' என்னும் பழமொழிக்கு ஏற்ப, முன்னுள்ள மூவரையும் முடுகி இழுத்து, அவன் எண்ணிலாக் குறும்புகள் இயற்றுவான்! எல்லா ஆற்றலும் என்பால் உண்டெனத் தருக்குவான், செருக்குவான். தன்னைத்தானே தகைமையில் மதிப்பான். தானே பிறந்த தன்மையிற் பேசுவான். வீண் வாதிடுவான். துரியோதனன் போன்ற வணங்கா முடியன். முன்செய் பாவம் முற்றும் திரண்டாற் போல், இயம்பொணாக் கொடுமைகள் இயற்றுவான். பிள்ளையும் அல்லன், கொள்ளியும் அல்லன். இவன் செய்யும் இடர்களை எவர்பாற் சொல்லி என் துயர் ஆற்றுவேன்?

கான்மியம் :

மாயை என்னும் மனைவியின் சூழ்ச்சியால், 'மாற்று காலுக்கு மறுகால்' ஆக, கான்மியம் என்னும் கபட வஞ்சகி, மூன்றாம் மனைவியாய் வந்து எனைச் சேர்ந்தாள். பேயின் மேலும் பெரியதோர் பூதமும்பிடித்தது போன்றது என்நிலை. கான்மியம் என்னும் கபட வஞ்சகி செய்யும் வீரம், யான் செப்பும் தகைய்தோ? ஒருத்தி அவளே உருவம் இரண்டு கொள்வாள். ஒன்றில் கரும்பும் அமுதமும் காட்டுவாள். மற்றொன்றில் காஞ்சி(எட்டி)யும் நஞ்சமும் தோற்றி வாட்டுவாள். இன்பமும் துன்பமும் கலந்து கலந்து ஈவாள். இவள்முன் நம் 'சபம் என்றும் சாயாது' எனவுணர்ந்து அரகர என்று அரற்றி மெலிவேன்.

முக்குணம் :

இக்கொடியவள் வயிறு கிழியவந்த சிறுர்கள் மூவர். சத்துவம், இராசதம், தாமதம் என்னும் பெயரினர். எவ்வுலகத்தோரும், இம்மூவர் தம்மால் பற்பல வழிகளில் பரிபவப் படுவர் என்றால், எளியேன் படும் துன்பம் இயம்பவும் முடியுமோ? பகலும் இரவும் இப்பாவிகள் என்னை அலைப்பர். அதனால் கூக்குரலிட்டுக் குழறுவேன், கதறுவேன். 'கிணறு வெட்டப் பூதம் எழுந்தது' என்னும் பழமொழி உண்மையாயிற்று. இவரொடு வாழ என்னால் இயலுமோ? மூன்று மாதரும் முழுப்பாய் சுருட்டிகள். இவர்களில் ஒருவரும் இசைய வந்தாரலர். இச்சையின் வழியே இணக்கி, வலுவில் என்னை மணந்துகொண்டோர். இவரால் நேர்ந்த எண்ணிலாத் துயரை யான் என்னென்று உரைப்பேன்!

உடல்வீடு :

குடும்பத்துடனே குடித்தனம் செய்யக் குடிக்கூலிக்குக் கொண்டேன் ஒரு வீடு. அதிற்கண்ட காட்சிகள் கன விரோதங்கள். அவைதாம் இராமாயணத்தும் இல்லை. பாரதத்தும் இல்லை. உடல் ஆகிய அவ் வீடோ இழிவினும் இழிந்தது. எண் சாண் உள்ளது. மலமும் சலமும் மாறாது ஒழுகுவது. சுற்றிலும் ஒன்பது பொத்தல் உடையது. சீழும் கிருமியும் சேர்ந்து கிடப்பது. குப்பையும் நாற்றமும் மிகுந்தது அக் குடிசை. அக்குடிசை வீட்டில் கிடந்தும் இருந்தும் நடந்தும், நான் படும்பாடு நவிலுதற்கு அரியது.

வீட்டுக்காரர் :

இந்தச் சிறு குடிசை வீட்டுக்கு உரிய தலைவர்கள் மூவர். அவர்கள் மூவரும் தறுகட்கடையர், தயவே இல்லார்! ஒருவன் பணிசிரம் முதலாய்ப் பாதம் வரையில் வாது செய்திடும் கால வாதி; மற்றொருவன் கள்ளினும் மயக்கம் விளைத்துப் பேதைமை ஊட்டும் பெருந்தீப் பித்தன்; மூன்றுமவனோ கொடுவிடம் ஏறும் கொள்கைபோல, இரக்கம் கொள்ளாமல் இடர் செய்யும் குளிர்ந்த கொள்ளி. இவர்கள் என்னோடு எப்போதும் இகல்வார். சிறிதும் இரங்கார். என் ஏழைமையும் பாரார்.

பிண்டம் என்னும் பெருங் குடிக்கூலி, அன்றைக்கன்றே நின்று வாங்குவர். ஒரு நாள் செலுத்தத் தவறினால் அருநோய் பற்பல அடிக்கடி செய்வர். இவர்தம் கொடுமைகள் எண்ணுந்தோறும், பகீரென்று உள்ளம் பதைத்துக் கொதிக்கும்.

வல்வழக்கர் :

இத்தகைப் பலவாம் நெருக்கடிக்கு இடையில் கிடந்து நலிந்து வருந்தும் என்னுடன், மற்போர் கருதி வந்தவர் போலச் சிலர் வேதாந்தம் உரைப்பர்; வாட்போருக்கு வந்தவர் போலச் சிலர் சித்தாந்தம் தெரிப்பர்; தண்டாயுதப் போர் தாங்குவார் போல ஒருசிலர் இதிகாச நூல்கள் இசைப்பர்; உலக்கைப் போர் உடற்றுவோர் போல ஒருசிலர் இலக்கண நூல்கள் இயம்புவர்; மடிபிடி போர்க்கு வந்தோர்போல மததூஷணைகள் வழங்குவர் ஒரு சிலர். மற்றும் பற்பல வீண்கதை பேச விழைவர் சிலபேர். இங்ஙனம் வல்வழக்குக்கு வருபவர்கள் பற்பலர். நாக்கு உலரவும் நற்குரல் கம்மவும், சமயோசிதமாய்த் தக்கபடிபேசி, இவர்களுக்கெல்லாம் ஈடுகொடுத்தலில், இளைப்புற்று வருந்துவேன்.

நாட்கடமை :

பின்னர் வீட்டின் பின்புறம்சென்று மலத்தைக் கழிப்பேன். பல்லைத் துலக்குவேன். சோமனைத் துவைப்பேன். நன்னீராடுவேன். நறுமலர் கொய்வேன். பூசைப் பொருள்கள் தேடுவேன். பாவை வைத்துப் பாடியாடும் சிறாரைப் போலச் செய்பணி புரிவேன். சுவருக்குச் சுண்ணம் பூசுதல் போல, நெற்றியில் நீற்றை நிகழப்பூசுவேன். உருத்திராக்கப் பூண் எனும்படி செபமாலை உருட்டுவேன். குரண்டகம் போல யோகம் கூடுவேன். இங்ஙனம் பூசை இயற்றிய பின்னர், ஊன் பிண்டத்திற்கு உறு பிண்டம் ஈந்து, குடிக்கூலிக் கடன் குறையைத் தீர்ப்பேன். உண்ட இளைப்பு தொண்டருக்கும் உண்டு. ஆதலால், பகல் வேடத்தால் பலரை விரட்டி, நித்திரை என்னும் பரத்தையை நேர்ந்து கூடுவேன். இங்ஙனம் ஒவ்வொரு நாளும் இடைவிடா வேலைத் தொல்லையில், என் பொழுதெல்லாம் சரியாகக் கழிந்தொழிகின்றது.

அதனால்தான் அன்புமிக்க நினது திருமணத்திற்கு யான் இங்கிருந்து வர இயலாது போயிற்று. அது பற்றி நீ சிறிதும் வருந்தற்க.

கவிதையின் நலம் :

இஃது இராமலிங்க அடிகளார், திருமழிசை அன்பர் திரு. முத்துச்சாமி முதலியார் அவர்களின் திருமணத்திற்குத் தாம் வர இயலாமற் போயினமை குறித்து எழுதி விடுத்த கடிதமாகும். இக்கடிதம் உரை நடையில் அல்லாமல் கவிதை வடிவில் அமைந்துள்ளது. கவிதையாயினும் எத்தகையவரும் படித்து உணர்ந்துகொள்ளத்தக்க எளிமையும் தெளிவும் இனிமையும் நிறைந்ததாக இஃது அமைந்திருத்தல் வியப்பைத் தருகின்றது. உயர்ந்த தத்துவக் கருத்துக்களும், உலகியலில் நாடோறும் நாம் கண்டு வருகின்ற உண்மைகளும், இக்கவிதையில் சுவை நிரம்ப அமைத்து உணர்த்தப் பெற்றுள்ளன. ஞானிகள் தம் ஞான நிலையில் இவ்வுலகியல் வாழ்வை எவ்வாறு உணர்ந்து எங்ஙனம் மதிக்கின்றனர் என்பதை, இப்பாடல் இனிது விளக்குகின்றது.

தத்துவ நுட்பம் :

ஆணவ மலம் உயிர்களைச் செம்பிற் களிம்பு போல அநாதியே பற்றி நிற்றலும், அதன் விளைவாக உயிர்களுக்கு அஞ்ஞானம் நிகழ்தலும், இறைவன் ஆணவ மலத்தைப் போக்க உயிர்களுக்கு மாயாமலத்தை இயைத்துத் தனு கரண புவன போகங்களைப் படைத்துக் கொடுத்தலும், அவ்வாற்றால் கேவல நிலையினின்று சகல நிலை எய்திய உயிர்கள் முக்குண வயப்பட்டுச் சஞ்சிதம் பிராரத்தம் ஆகாமியம் என்னும் கன்மங்களைத் தேடிக் கொள்ளுதலும், அதனாற் பல உடல்களை எடுத்துப் பிறந்து இறந்து உழலுதலும் ஆகிய பல தத்துவ நுட்பச் செய்திகள், இப்பாடலில் நன்கினிதெடுத்து நயமுற விளக்கப் பெற்றிருக்கின்றன. அரிய பெரிய தத்துவக் கருத்துக்களை எளிய இனிய நடையில் யாவரும் உணர்ந்து உவந்து மகிழும் வண்ணம், அடிகளார் இப்பாடலில் விளக்கி யிருக்கும் திறம் வியந்து போற்றுதற்குரியது.

"குடும்ப கோரம்" என்னும் தலைப்பில், இல்லற வாழ்வின் இயல்பினை எதிர்மறை முறையிற் பாடி, இல்லற வாழ்க்கை நடத்துதற்குரிய உடன்பாட்டு முறையினை, அடிகளார் உய்த்துணர வைத்துள்ள நலம் உணர்ந்து மகிழத் தக்கது.

முடிவுரை :

இங்ஙனம் எண்ணி உணருந்தோறும் பல நுண்ணிய பொருள்களை உணர்த்திக் கொண்டு நிற்கும் இவ்விலக்கியக் கடிதம், இராமலிங்கரின் இணையற்ற பெருமாட்சிமையினை இனிது உணர்த்திக்கொண்டு விளங்குகின்றது எனலாம். உருவகக் கவிதைகளுள் (Allegorical Poetry), இஃது உயரிய சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றது என்றல் மிகையன்று. இத்தகைய பல அரும்பெரும் பாடல்கள் அமைந்த திருவருட்பா என்னும் செந்தமிழ்த் தெய்விகத் திருநூலை, நாம் அனைவரும் இடைவிடாது அன்புடன் ஓதி நலம் பலபெற்று உய்ய முயலுவோமாக !

—ஆசிரியர்

## செய்திச் சுருக்கம்

இந்து மதத்திற்கும், தர்மத்திற்கும் சேவை செய்வதையே குறிக்கோளாகக் கொண்டுள்ள ஸ்ரீ பக்த சமாஜத்தாரின் ஆதரவில் ஜூன் 7-ஆம் தேதியன்று மயிலாப்பூர் ஸ்ரீ கற்பகாம்பாள் கல்யாண மண்டபத்தில், **ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளின் பீடாரோகண வைர விழா** விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. அவ்வமயம் ஸ்ரீ பக்த சமாஜத்தினரால் பிரசுரிக்கப்பட்ட வைர விழா மலரை, ஸ்ரீ எம். வி. வேங்கடராமன் அவர்கள் வெளியிட்டார். விழாவிற்கு உயர்நீதி மன்ற நீதிபதி ஸ்ரீ எம். நடேசன் அவர்கள் தலைமை தாங்கினர்.

சுமார் 280 பக்கங்கள் கொண்ட இவ் வைர விழா மலர் ஸ்ரீ பக்த சமாஜத்தில் மூன்று ரூபாய் கட்டிச் சந்தாதாரராகச் சேர்பவர்களுக்கு இலவசமாக அனுப்பப்படுகிறது.

வைரவிழா மலரில் பாராயணம் செய்யக்கூடிய பல அரிய ஸ்தோத்திரங்கள் தமிழ் உரையுடன் காணப்படுகின்றன. இந்த்ராக்ஷி ஸ்தோத்ரம், ஸ்ரீ சிவகவச ஸ்தோத்ரம், ஸ்ரீ சாரதா புஜங்கஸ்தவம் போன்ற அரிய பாடல்கள் மலரை அணி செய்கின்றன.

சந்தாத் தொகையுடன் 50 பைசாவையும் சேர்த்துக் கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்பி, வெளியூர் அன்பர்கள் வைர விழா மலரைப் பெறலாம்.

விலாசம் :— **ஸ்ரீ பக்த சமாஜம், மேல மாம்பலம், சென்னை – 33.**

—ஆசிரியர்

# பாம்பன் சுவாமிகள்

திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள், சென்னை.

பாம்பனெனும் பதிமுளைத்த பவளக் குன்றே:
  பழம்பாண்டித் தமிழ்ப்பொழிலே: பண்பார் இல்லத்
தீம்பயிரே; அன்புகொழி திரையே: தெய்வத்
  திறங்கண்ட அறநிலையே: செகத்தில் உற்ற
கூம்பலற எழுகதிரே: குழந்தை வேலன்
  குகன்நெறியே நெறியென்ற குருவே: நீதி
ஓம்புகவென் றுரைத்தொழுகி உலகில் வாழ்ந்த
  உயர்குமர குருதாச ஒளியே: போற்றி.

— திரு. வி. க.

நமது பாரத நாட்டின் பெருமைகளுள் முதன்மையானதாய் விளங்குவது, பரம்பொருளைத் தம் அநுபவத்திற் கண்ட ஞானிகள், பண்டுதொட்டு இன்றளவும், அதன்கண் வாழையடி வாழையென வந்து கொண்டிருப்பதேயாகும். அம்முறையில், கி. பி. 19-ஆம் நூற்றுண்டிலும் பல மகான்கள் தோன்றினர். யுக தருமத்தின்படி சத்தியமும் நன்னெறியும் வலுக்குன்றிய போதெல்லாம் அவர்கள் அவசியமான சீர்திருத்தங்களைச் செய்து, மேலாம் தெய்வ நெறியைப் பின்பற்றி உயர்வடைய மக்கட்கு உதவி புரிந்தருளியுள்ளார்கள். அம்முறையில், கி. பி. 19-ஆம் நூற்றுண்டில், ஆரிய சமாஜ, பிரம சமாஜத் தாபகர்கள், சமரச வேதாந்தச் செந்நெறி பரப்பிய ஸ்ரீ இராமகிருஷ்ண விவேகானந்தப் பெரியோர்கள், சமரச சுத்த சன்மார்க்க சங்கத் தாபகராகிய இராமலிங்க சுவாமிகள், உலக குரு இமயஜோதி சுவாமி சிவானந்த சரஸ்வதி முதலியோர் தோன்றினர். அந்த நூற்றுண்டில்தான்; 1853-ஆம் ஆண்டில் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகளும் அவதரித்தார்கள்.

இச் சுவாமிகளை நேரில் தரிசிக்கும் பேறு பெற்றவர்களில் சிலர் இன்றும் உள்ளனர். இவர்களில் சுவாமிகளின் சீடர் ஒருவர் தம் குருநாதரைக் கண்டு, அவர்களது சரித்திரம் விவரமாக எழுதப்படவேண்டும் என்று பன்முறை விண்ணப்பித்து வந்தார். அதுவும் ஓர் ஆடம்பரச் செயலாகும்என்றுகூறிச் சுவாமிகள் மறுத்துவிட்டார்கள். பொய்யைப் பெரிதும் வெறுக்கும் சுவாமிகளது சரித்திரத்திலும் பிற்காலத்தில் பொய்யும் கற்பனையும் கலந்து விடக்கூடுமே என்ற அச்சத்தை அச்சீடர் தெரிவித்து வருந்திய போது, சுவாமிகள், ஒரு நிபந்தனையுடன், சரித்திர விவரம் தெரிவிக்க இசைந்தார்கள். அந்த நிபந்தனையாவது, இச்சரிதம் தமது காலத்திற்குப் பிறகுதான் வெளியிடப்படவேண்டும் என்பதாம். அதற்கிணங்கி அச்சீடர் சுவாமிகளிடம் பலமுறை சென்று கேட்டறிந்தவற்றிலிருந்து குறிப்புகள் எடுத்து எழுதி வைத்து வந்தார். இவற்றையும், சுவாமிகள் அருளியுள்ள நூல்களையும் ஆதாரமாகக் கொண்டு இச் சரித்திர நூல் உருவாகி வந்தது. சுவாமிகள் மகாசமாதி யடைந்த நிகழ்ச்சிக்கு முற்பட்ட பகுதிகள் யாவும் சுவாமிகளாலேயே செப்பம் செய்யப் பெற்றவையாகும். இந்நூல் 1929-ஆம் வருடம் ஜூன் மாதத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இந்த மெய்ச் சரித்திரத்தில் காணும் அரிய சம்பவங்

---

சைவப் பெரியார் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்களைத் தமிழ்நாடு நன்கறியும். 'எண்பது ஆண்டான இளைஞர்' எனும்படி, தமது வயது முதிர்ந்த நிலையிலும், உடல் தளர்ந்தாலும் உள்ளம் தளராமல், மக்களிடையே சமய உணர்ச்சியும் ஒழுக்கமும் வளர்ச்சியுறுதல் குறித்து, அல்லும் பகலும் அயராது பாடுபட்டு வரும் பெருந்தகையார் அவர்! வடலூர் இராமலிங்க அடிகளார்க்குத் தொழுவூர் வேலாயுத முதலியார் எங்ஙனமோ, அங்ஙனம் அருட்டிரு பாம்பன் குமர குருதாச அடிகளார்க்கு மிக நெருங்கிய முதன்மையான தலை மாணாக்கர், நமது சைவப் பெரியார் திரு. சச்சிதானந்தம்பிள்ளை அவர்களே ஆவார்; பாம்பன் அடிகளாரின் நூல்கள் பலவற்றிற்கு அடிகளார் விரும்பியபடி ஆராய்ச்சி முன்னுரைகளும், அரியபொழிப்புரை விளக்கங்களும் எழுதி, அடிகளாரின் காலத்திலேயே வெளிவரச் செய்திருப்பவர்கள் ஆகிய நமது சைவப் பெரியார் அவர்கள், பாம்பன் அடிகளார் பற்றி எழுதிய இக்கட்டுரை, அடிகளாரின் குருபூசை விழாவை ஒட்டி (29-5-67) இங்கு வெளியிடப் பெறுகின்றது.

—ஆசிரியர்.

களும், உண்மைகளும் பல. அவற்றுள் ஒரு சிலவற்றை மட்டும், இங்கே இந்த மலரில் ஒரு கட்டுரையளவில் சுருக்கித் தரும் கடினமான கடமையைச் செய்ய முயலுகின்றேன்.

ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகளின் ஊர் பாம்பன். தந்தையார் சாத்தப்ப பிள்ளை; தாயார் செங்கமலத்தம்மாள். மரபு, சிவாலய அகத்திருப்பணி வேளாளர் மரபு. சுவாமிகள் அவதரித்தது தாயார் ஊராகிய இராமேச்சுரத்தில். காலம் கி. பி. 1853. பெற்றோர் இட்ட பெயர் அப்பாவு என்பது.

முதலில் இவர் முனியாண்டி பிள்ளை என்பவரிடம் தமிழ் கற்று வந்தார். பின்பு ஒரு கிறிஸ்துவ கலாசாலையிற் சேர்ந்து படித்தார். சிறு வயது முதலே அறிவும், ஒழுக்கமும், ஆண்டவன்பால் பக்தியும் வளரலாயின. மசூதியையோ மாதா கோயிலையோ காண நேரிடும்போதெல்லாம் அவற்றை வணங்கிச் செல்லும் பரந்த நோக்கமும் அவர்க்கிருந்தது.

பாடசாலையை விட்டு நீங்கு முன்னமே, தேவராய சுவாமிகள் பாடிய கந்த சஷ்டி கவசத்தை நாள்தோறும் 36 முறை ஓதி வந்தார். ஒருநாள், தாமும் பரம்பொருளைப் பற்றிப் பாடவேண்டும் என்னும் வேட்கை எழுந்தது; 'கங்கையைச்சடையில்பரித்து' என்னும் சொற்றொடர் எழுந்தது. தடை சிறிதுமின்றிப் பனையோலையில் ஒரு பாடலை எழுதி முடித்தார், அதுமுதல், நாள்தோறும் ஒரு பாடல் பாடும் நியமத்தை மேற்கொண்டார். பின்பு, தம் தந்தையாரின் நண்பராகிய சேதுமாதவ ஐயரிடம் சடாக்ஷர மந்திரோபதேசம் பெற்றார். அவர் ஆணையின்படி வடமொழியும் கற்கலானார். சித்தர் நூல்களையும் ஆராய்ந்தார். கி. பி. 1893-இல், இவர் திருவனந்தபுரத்தில் ஓரன்பர் வீட்டு மேன்மாடியில் தனித்திருந்து 22 நாட்களில் யாப்பிலக்கணத்தை நன்கு படித்துணர்ந்தார். உடனே பல்சந்தப் பரிமளம் என்னும் நூலைப் பாடினார்.

இவரைப் பாம்பனில் நன்றாக அறிந்த சேஷகிரிராயர் என்னும் அந்தணர்—வடமொழிப் புலமையும் ஆங்கிலக் கல்வியும் பெற்று உத்தியோகத்திலிருந்தவர்—இவரது அறிவாற்றல், முருகபக்தி முதலிய பண்புகளை அறிந்து, இவருக்குக் குமரகுருதாசர் என்னும் பெயர் சூட்டினார். அதுவே பின்பு பலரால் போற்றி வழங்கப்படுவதாயிற்று.

ஆர்வத்துடன் முருகனை வழிபட்டு வருகையில், இவ்விளைஞர்க்குத் துறவில் நாட்டம் எழுந்தது. திருமணம் செய்து வைக்கப் பெற்றோர்கள் முயன்றபோது 25-ஆம் வயது வரையில் மறுத்தே வந்தார். பின்பு, தமது மந்திர குருவானவர் தமக்கு உறுதியாக இட்ட கட்டளையை ஏற்று, 1878-இல் காளிமுத்தம்மாள் என்னும் நங்கையைத் திருமணம் செய்து கொண்டார். இரண்டு ஆண் குழந்தைகளும் ஒரு பெண் குழந்தையும் பிறந்தன. இவர் இல்லறத்தை நல்லறமாகச் சுமார் பதினேழு ஆண்டு காலம் நடத்தினார்.

எனினும், இவர் மனம் துறவறத்தையே நாடிக்கொண்டிருந்தது. அடிக்கடி தலயாத்திரையும் செய்து, ஆங்காங்குள்ள முருகப்பெருமானைப் பாடிவந்தார். குடும்ப வாழ்க்கை முடியுமுன்பே இவர் உப்பையும் புளியையும் நீக்கிவிட்டார்; நாளுக்கு ஒரு முறை உச்சிப்போதில் மட்டும் உணவு கொள்ளும் விரதத்தை மேற்கொண்டார். இந்த நியதி இவர் ஆயுட்கால முழுவதும் காப்பாற்றப்பட்டு வந்தது.

கடவுளை நேரிற்காணவேண்டும் என்னும் அவா இவருக்கு நாள்தோறும் பெருகியது. கடுந் தவநெறியில் உறைத்து நின்று நேராய் முருகப் பெருமானிடமிருந்தே உபதேசம் பெறவேண்டும் என்ற உறுதி பிறந்தது. 1894-ஆம் ஆண்டில் பிரப்பன்வலசை என்னும் கிராமத்தின் மயான வெளியில், முப்பத்தைந்து நாள் இவர் நிட்டையில் அமர்ந்தார். பல சோதனைகள் நிகழ்ந்தன. ஆறும் நாளில், மனம் அடங்கிற்று. ஏழாம் நாள், இவர் நாடிய உபதேசம் கிடைத்தது. அதன்படி சிவயோகத்தில் அமர்ந்திருந்தார். முப்பத்தைந்தாம் நாள் முருகனாணையின்படி வெளியே வந்தார். இந்த அரிய அநுபவங்கள் யாவும் சுவாமிகள் பாடல்களிலேயே விளக்கமாகத் தரப்பட்டுள்ளன.

இச் சிவயோகியார், பாம்பனுக்குத் திரும்பி வந்து மௌன நிலையில் இருந்தார். பல பாடல்களை அருளிச் செய்தார். 1895-இல் இல்லற வாழ்க்கையிலிருந்து விலகிவிட்டார். வாணிபத்தில் ஈட்டிய பெரும் செல்வப்பற்றையும், மனைவி மக்கட் பற்றையும் துறந்துவிட்டார். தாம் வாழ்ந்த பகுதியையும் விட்டகன்றார். பின்பு தாம் உயிருடன் இருந்த வரையில், அப்பகுதியின் எல்லையில் கால் வைக்கவில்லை. தமது மனைவியாரும் அவ்வெல்லையைத் தாண்டி வெளியே வரலாகாது என்று விதித்தார். அன்னைக்கு ஆறுதல் கூறி விட்டு, அப்பழம்பதியை நீத்துப் புறப்பட்டு விட்டார்.

பின்னர், முருகன் திருவருள் தூண்டுதலால், இவர் மதுரை முதலிய சிவ தலங்கட்குத் தனியாக யாத்திரை செய்துவிட்டு, முதன் முறையாகச் சென்னைக்குப் போக ரயிலிற் புறப்பட்டார். அன்றிரவே. சென்னை வைத்தியநாத முதலி தெரு, 41-ஆம் எண்ணுள்ள இல்லத்தில் வசித்து வந்த முருக பக்தி மிக்க மூதாட்டியார் ஒருவருக்கு இத் தபோதனர் வருகை கனவில் அறிவிக்கப் பட்டது. மறுநாள் காலை சுவாமிகள் எழும்பூர் ரயில் நிலையத்தில் வந்திறங்கியதும், ஒரு துறவி இவரைச் சந்தித்துப் பேசித் தம்முடன் அழைத்துக்கொண்டு போய், மேற்குறித்த அம்மையார் இல்லத்தில் சேர்த்ததும், மறைந்துவிட்டார். அம்மையார் தனது கனவில் தோன்றிய தவசி இவரே என்று தெரிந்து கொண்டு, சுவாமிகளைப் பக்தியுடன் பணிந்து வரவேற்று அவர்களைத் தம் இல்லத்து மேன் மாடியில் தங்கவைத்தார்; சுவாமிகளது கடுந் துறவு நிலை, உணவு நியமம் இவைகளைத் தெரிந்துகொண்டு, அதற்கு ஏற்ற முறையில் பணிவிடை செய்து வந்தார். சுவாமிகள் அந்த மூதாட்டியார்க்கும் உபதேசம் செய்தருளினார்கள்.

1896-இல் சுவாமிகள் மீண்டும் தலயாத்திரையாகப் புறப்பட்டுச் சிதம்பரத்தை யடுத்த குயவன்பேட்டையில், திரு. இராஜா முத்துக்கிருஷ்ணநாயுடுவின் உபசரிப்பைப் பெற்று மௌன நிலையில் இருந்தார்கள். அதுகாலை, பரிபூரணானந்த போதம், தகராலய ரகசியம் என்னும் அரும்பொருள் செறிந்த இருபெரு நூல்களை இயற்றினார்கள். தகராலய ரகசியத்தில் முருகப்பெருமான் தமக்கு ஒரு சொல்லால் உணர்த்தியருளிய உபதேசப் பொருளை விரிவாக விளக்கியுள்ளார்.

பின்பு சுவாமிகள் இவ்வூரினின்றும் புறப்பட்டுக் குடந்தை, சுவாமிமலை முதலிய தலங்கட்குச் சென்று வழிபட்டு, மீண்டும் சிதம்பரத்தை யடுத்துள்ள பேட்டையில் தங்கித் திருப்பா என்னும் நூலைத் தொடங்கி இயற்றி வந்தார்கள். இந் நூலில்,

> சத்தியமே உரை என்றருள் சாரும்
> புத்தி உரைத்து மறைந்து புலங்கூர்
> நித்திய அன்பினில் நிறீஇய பின், என்
> அத்த! எனக்கய லாவதும் என்னே?

என்னும் மிகஅரிய திருச்செய்யுள் அமைந்துள்ளது. அத் திருவாணையின்படியே சுவாமிகள் தமது தவ வாழ்க்கையை நடத்தி வந்தார்கள். "துறவு நடையும் கறையாம் பொய்ப்பில்" என்று தமது ஞான வாக்கியம் என்னும் நூலிலும் குறித்துள்ளார்கள்.

இத் தபோதனர் வாழ்க்கையில், சீவ கருணைப் பண்பும் அமைந்திருந்ததற்குச் சான்றாக ஒரு நிகழ்ச்சியைக் குறிக்கலாம். திருநெல்வேலியைச் சார்ந்த சிக்க நரசையன் கிராமத்தில் ஓர் அன்பர் வீட்டில் இவர் தங்கியிருந்தபோது, ஒரு பகலில் ஒரு மூட்டைப்பூச்சி வெளிவந்து விரைந்து சென்றது. இவர் அவ்வீட்டுச் சிறுவனை நோக்கி, அதனைப் பிடித்து வெளியிற் கொண்டுபோய் விடுமாறு பணித்தார். அவன் அதனை நசுக்கிக் கொன்று விட்டான். இதனைக் கண்டதும், இவர் மனந் துடித்தது. அச்சிறுவனைக் கண்டித்தார். "யான் உணவு கொள்ளமாட்டேன். நீ போ" என்று பணித்துவிட்டு வருத்தத்தோடிருந்தார். வீட்டிலுள்ளோர் யாவரும் இவரைக் கண்டு வணங்கி, சிறுவன்செய்த குற்றத்தை மன்னித்து, உணவு கொள்ள வரவேண்டும் என்று வேண்டினர். "இழவு ஏற்பட்டுள்ளது. இப்பொழுது உணவு உட்கொள்ளல் கூடாது. நாளைக்குக்

கூடும்" என்று கூறிப் பால் மட்டும் அன்று மாலை அருந்தி, மறுநாள் உச்சிப் போதில் உணவு அருந்தினர். "எவ்வுயிரும் என்னுயிர் போல் எண்ணி இரங்கவும் நின்தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே" என்ற தாயுமானர் வேண்டுகை அன்பர்கள் பலர் நினைவிற்கு வரலாம்.

பின்பு சுவாமிகள் சிதம்பரத்திற்குத் திரும்பி, முருகன் திருவாணையின்படி மீண்டும் சென்னையை அடைந்தார்கள். திருவொற்றியூர், திருமயிலை, திருப்போரூர் திருத்தணிகை முதலிய தலங்கட்குப் பன்முறை சென்று வழிபட்டு வந்தார்கள்.

இவர்கள் 1902-இல் காசி யாத்திரை செய்தார்கள். ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மடத்தில் தங்கியிருந்தபோது, அங்கிருந்த காஷாயதாரண வயோதிகர் ஒருவர், இரண்டு புதிய காஷாய வஸ்திரங்களைக் கொண்டுவந்து சுவாமிகட்கு அணிவித்து, இது திருவருள் தூண்டுதலால் நிகழ்ந்தது என்று தெரிவித்தார். அன்று முதல், நம் சுவாமிகள் காஷாய உடை தரித்து வரலானர். இச்சம்பவம் சுவாமிகள் பாடிய காசி யாத்திரை என்னும் நூலில் குறிக்கப்பட்டுள்ளது. இவர் சென்னைக்குத் திரும்பிய பின், மேலும் சில அன்பர்கள் சீடராயினர். சுவாமிகள் நூற்றெட்டு உபநிடதங்களையும் நுனித்து ஆராய்ந்து, சுத்தாத்வைத நிர்ணயம் என்னும் அரிய நூலையும் அருளிச் செய்தார்கள். பத்துப் பிரபந்தம் என்னும் பெயரில் மிறைக் கவிகளையும் சித்திரக் கவிகளையும் இயற்றினர்கள்.

சுவாமிகட்கு விதேகமுத்தியில் வேட்கை முறுகி வளர்ந்தது. பிறர்க்குத் தெரிவிக்காமல், ஒருநாள் இவர்கள் தனியாகச் சென்னையை விட்டுக் கால்நடையாகத் திருவொற்றியூரைக் கடந்து, உணவு ஏதும் தேடாமல் திருப்பாலைவனஞ்சென்று களைப்புடன் படுத்திருந்தார்கள். ஓரன்பர் இவர்க்கு ஏற்பன செய்து, ஆண்டார் குப்பம் வழியாகத் திருவொற்றியூரில் சேர்ப்பித்தார். சென்னை அன்பர்கள் சிலர் சுவாமிகளைக் கண்டதும் பரிவுடன் சென்னைக்கு அழைத்துக் கொண்டு வந்தனர். முன்பு தங்கியிருந்த மாடியில்லத்தில் சேர்த்தனர். அக்காலத்தில்தான் சுவாமிகள் குமரவேள் பதிற்றுப் பத்தந்தாதி என்னும் மிக உருக்கமான நூலைப் பாடினர்கள். அதிலிருந்து, அவர்கள் மனநிலையை உணர்தற்குத் துணையாக ஒரு பாடலை மட்டும் இங்கே தரலாம்-

நல்ல பொன்மயி லூரு மென்னொரு நாதனே! இனி வாதநூல்
வல்ல னென்று மதிக்கு மாறுரை மல்கு சங்கம் விரும்பிலேன்,
இல்ல மேய சிறந்த மாணவர் என்பர் நேயமும் நம்பிலேன்
அல்லல் தீர்மடம் ஆலயங்கள் அமைத்து வாழவும் எண்ணிலேன்.

வடசொல் புகாத தமிழ்நூல் இல்லையே என்று சிலர் குறை தெரிவிக்கவும், 'இரு மொழிக்கும் கண்ணுதலார் முதற்குரவர்', இரு மொழிகளும் இரு கண்கள போன்றவை என்ற கருத்தையுடைய இச்சுவாமிகள் சேந்தன் செந்தமிழ் என்னும் தனித் தமிழ் நூலைப் பாடி, அரிய பல ஆராய்ச்சிக் குறிப்புரைகளும் வரைந்தார்கள்.

சுவாமிகள் மீண்டும் பின்னத்தூர்க்குச் சென்று நிட்டை கூடியிருந்தார்கள். அக்காலத்தில், அங்கு வாழ்ந்துவந்த வைதிக சமயத்தவருள் ஒரு பிரிவினர் மற்றொரு பிரிவினரை நிந்தித்து வாதத்திற்கு அழைத்தனர். இவ்வாறு அழைக்கப்பட்டவர்கள் சுவாமிகளிடம் வந்து, தம் குறையை நீக்கும்படி முறையிட்டனர். "வாதமும் சமய பேதமும் கடந்த மனோலய இன்ப சாகர" நாட்டமுள்ள சுவாமிகட்கு வாதங்களில்ஈடுபட மனமில்லை; தம்மை வந்தடைந்த அன்பர் மனக்கவலையையும் புறக்கணிக்க முடியவில்லை. முருகப் பெருமான் திருவுளக் குறிப்பை நாடி அறிந்தார்கள். தாக்க வந்தவர் கட்சியை நூலறிவும் நுண்ணறிவும் கொண்டு நன்கு ஆராய்ந்து இரண்டு நூல்கள் எழுதினர்கள். வாத சபை கூடவில்லை. சுவாமிகட்கு ஏற்பட்ட கடமை நிறைவேறிவிட்டது. விஞ்ஞான வளர்ச்சியின் விளைவாக, மக்கள் வாழ்க்கையில் பல்வேறு வசதிகளும் கெடுதிகளும் பெருகிவரும் இந்த நூற்றாண்டில், எல்லா நாட்டினரும் எல்லா மதத்தினரும், சமரச சன்மார்க்க நாட்ட முடையவர்களாய், உலகம் எல்லாம் ஒரு பெருங் குடும்பம் என்று

கொண்டு, அறிவுடன் அன்பும் அருளும் தொண்டும் செறிந்த சகோதர வாழ்க்கை வாழ வேண்டும். நம் நாட்டில் ஞான அநுபூதிமான்கள் வாழ்ந்து காட்டிய நெறியும் இதுவே. "ஒன்றுபட்டாலுண்டு வாழ்வே. நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே" என்ற தேசீய மகாகவி பாரதி வாக்கின் பரந்தநோக்கு எல்லா நாட்டவர் உள்ளங்களிலும் பதிந்து நன்மையே விளைப்பதாக!

சுவாமிகள் சென்னைக்குத் திரும்பியபின், திருவாளர் சின்னசாமி சோதிடர் முதலிய சிலர் சீடராயினர். திருவல்லிக்கேணியில் வாழ்ந்துவந்த இந்தச் சோதிட அன்பர் இல்லத்தில் பல ஆண்டுகள் சாந்தியுடன் தங்கியிருந்தார்கள்.

தமிழ்ச் சான்றோர் திரு. வி. கல்யாண சுந்தர முதலியாரின் வேண்டுகோளுக் கிணங்கி, சுவாமிகள் சென்னை இராயப்பேட்டைக்கு வந்து ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்த ஜன சபைக்கு 31-1-1915இல் கால்கோள் செய்தருளினார்கள். சில ஆண்டுகள் கழித்து, இச்சபையில் சைவ மகிமை என்னும் பொருள்பற்றி ஓர் அரிய சொற்பொழிவும் ஆற்றினார்கள்.

தொடர்ந்து பல அரிய செய்யுள் நூல்களையும் வசன நூல்களையும் சுவாமிகள் இயற்றி வந்தார்கள். தாம் பாடிய பதிகங்களில் இறுதிப் பாட்டில் அருணகிரிநாதரைக் குறிப்பிடும் ஒரு நியமமும் சுவாமிகள் வைத்துக் கொண்டிருந்தார்கள். தமிழகத்தில் அருணகிரிநாதருக்குக் குரு பூஜைகள் முறையாகக் கொண்டாடப்படாதிருந்ததைச் சுவாமிகள் கவனித்து, உத்தராயணத்தில், ஆருவது பௌர்ணமி நாளில் தவருது அதை நடத்தி வரும்படி தம் சீடர்கட்குக் கட்டளை யிட்டார்கள். முதல் முதல் சென்னை புதுப்பாக்கம் ஸ்ரீ சிவசுப்பிரமணிய பக்தஜன சபையில், கி. பி. 1918-இல் அது சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இவ்விழா ஆண்டுதோறும் தொடர்ந்து நிகழ்ந்து வருகிறது. வேறு பல ஊர்களிலும் கொண்டாடப் பெற்று வருகிறது.

சுவாமிகள் பாடல்களையும், சிலவற்றிற்கு அவர்களியற்றிய திட்பம் போன்ற அரிய உரைகளையும், சிவஞான தீபம், சுத்தாத்வைத நிர்ணயம் போன்ற சிறந்த வசன நூல்களையும் படித்தவர்கள் சுவாமிகளிடம் பெருமதிப்பும் பக்தியும் உடையவராயினர். பலர் சீடர்களாயினர். இவர்கட்கும், பிற்காலத்தில் அடியவராகுபவர்கட்கும் பயன்படும் கருத்துடன் சுவாமிகள், மஹா தேஜோமண்டல சபை என்னும் ஓர் தாபனத்தை நிறுவினார்கள். அதன் இயல்பை அவர்களே பின்வருமாறு விளக்கியுள்ளார்கள்.

"அளவிலாத் தேஜோ மண்டல இறைவனொருவனையே ஆசாரத்தோடும், அன்போடும் வழிபடுஉம் அடியார் அனைவரும், எத்தேசத்தாராய், எக்குலத்தாராயிருப்பினும், அவர் 'மஹா தேஜோ மண்டலத்தார்' ஆவராகலின், யாமவரை இப்பெயர் தரித்து நிற்கும் கடன்மைக்குட் படுத்தியுள்ளோம்". (திருப்பா-கடவுள் வணக்கத்து 3-இன் உரை) இங்கு "இறைவனையே" என்பது குமார பகவான் ஒருவனையே குறிக்கும்.

செக்கர்வேள் செம்மாப்பு என்னும் நூலில் உள்ள முழுமுதல் இலக்கண அதிகாரமும், செக்கர்வேளிறுமாப்பு என்னும் நூலின் வீடுபேற்றதிகாரமும், தமது முடிவான சித்தாந்தம் என்று சுவாமிகள் எழுதியுள்ளார்கள்.

கனவிலும் நனவிலும் நிஷ்டையிலும் முருகப்பெருமானைத் தரிசித்த இப்பெரியார்க்கு, பெரிதும் அஞ்சத்தக்கதோர் சம்பவம் 27-12-1923 இல் நேர்ந்தது. அதையடுத்து ஆண்டவனருளும் கிடைத்தது. சுவாமிகள் அத்தேதியில் சென்னை தம்பு செட்டி தெருவில் நடந்து சென்றுகொண்டிருந்தபோது, ஒரு குதிரை வண்டியின் சக்கரம் ஒன்று இவர்களின் இடது கணைக்காலில் ஏறிக் காலை முறித்துவிட்டது. அதைக் கண்டு திடுக்கிட்ட அன்பர்கள், அரசாங்கத்துப் பெரிய வைத்தியசாலையில் (Government General Hospital) சுவாமிகளைக் கொண்டுபோய்ச் சேர்த்தனர். எலும்பின் முறிவு மிக அபாயகரமானதென்றும், உப்பு, புளி நீக்கியவரும் எழுபது வயதான

வருமான இப்பெரியாருக்குள எலும்பு கூடுவது சந்தேகமே என்றும் மருத்துவர்கள் கருதினர். சீடர் சின்னசாமி சோதிடர் மட்டும் முழுநம்பிக்கையுடன், சுவாமிகள் பாடிய சண்முக கவசத்தை நாள்தோறும் நியமப்படி ஓதிப் பிரார்த்தித்து வந்தார். எலும்பு கூடிவிடும் என்ற நம்பிக்கை ஏற்பட்டது.

பதினோராம் நாளிரவு, இரண்டு மயில்கள், மேல் திசையிலிருந்து நடனம் பண்ணிக்கொண்டு வருவதைச் சுவாமிகள் கண்டு, படுக்கையிலிருந்தபடியே கை கூப்பி வணங்கினர்கள். அவற்றுள் பெரியதொன்று தன் கலாபத்தை மண்டலாகாரமாக்கி ஆகாய மெல்லாம் ஆவரணித்துக் காட்சி யளித்தது. பின்பு ஓர் நாளிரவு, சுவாமிகள் தமது படுக்கையிலே தம்மொடு ஒரு செவ்விய குழந்தை படுத்திருப்பதைக் கண்டு மகிழ்ந்தார்கள். குழந்தை மறைந்து விட்டது. முருகன் திருநாமம் ஒன்றைச் சுவாமிகள் பன்முறை உச்சரித்தார்கள்.

"பதினைந்து நாட்களில் இரணம் ஆறி விடும்; அதுபரியந்தம் இவ் வைத்திய சாலையை விட்டு யாண்டும் போக வேண்டாம்" என்ற திருவாக்கும் வெளிப்பட்டது. அவ்வாறே எலும்புகள் கூடிவிட்டன.

இம் மயூரவாகன சேவனமே மார்கழி மாதத்தில் பூர்வ பக்ஷத்துப் பிரதமை தோறும், ஞான பூசையைக் கொண்ட விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. சுவாமிகளே, தாம் இயற்றிய பாரகாவியமாகிய ஸ்ரீமத் குமாரசுவாமியத்தில் 'அசோகசாலவாசம்' என்னும் பகுதியில் இச் சம்பவங்களைப் பாடியுள்ளார்கள். அவ் விழா தொடர்ந்து நடைபெற்றுவருவதற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் செய்து வைத்தார்கள். வட சென்னையில் திருப்பள்ளித் தெருவிலும், திருவான்மியூரில் சுவாமிகள் சமாதியிலும் இவ் விழா தவருது நிகழ்ந்து வருகிறது.

சுவாமிகள் 17-7-1926 இல் ஓர் உயில் சாசனம் எழுதி வைத்தார்கள். 19-12-1927 இல் அதற்கு அநுபந்தமான சாசன மொன்றைப் பிறப்பித்தார்கள். 21-12.1927 இல் இது பதிவு செய்யப்பட்டது.

1928-ஆம் ஆண்டு மே மாதத்தில் கோடைக்கால வெப்பந் தாங்காமல் பெங்களூர்க்குச் சுவாமிகள் சென்று தங்கினர்கள். அங்கே சில அபூர்வமான தோற்றங்கள் கிடைத்தன. ஜூலை மாதம் சென்னைக்குத் திரும்பிவிட்டார்கள். அப்பால் உடல் நலம் குறைவதாயிற்று. அன்னத்தை அறவே நீத்தார்கள். ஆயினும் கந்த மகா சஷ்டி விரதத்தையும், மயூரவாகன சேவன விழாவையும், மாசி சிவராத்திரி பூஜையையும் மிகச் சிறப்பாகவே கொண்டாடினர்கள்.

பின்னர் வைகாசி, 2-ஆம் தேதி யன்று, தமது பிரிய சீடராகிய சின்னசாமி சோதிடரை வருவித்து, தம் சமாதிக்காகத் திருவான்மியூரில் நிலமொன்றை விரைவிற் பார்த்து வாங்குமாறு பணித்தார்கள். பிறகு ஒருநாள் இரவு தம் அருகிலிருந்த சீடர்கள் இருவரை நோக்கி, "மயூரவாகன சேவன விழாவை விடாது நிகழ்த்தி வாருங்கள். என்னுடைய உடலைத் திருவான்மியூரிலே சேர்த்துவிடுங்கள்" என்றார்கள்.

"30-5-1929 காலை 7.15 மணிக்கு யாவரும் அறியவே சுவாமிகள் சுவாசத்தை உள்ளுக்கிழுத்தார்கள். அது வெளிவராமல் உந்தியிலேயே எழும்பி அடங்குவதாயிற்று. சுவாமிகள் அடங்கியது அங்கிலையிலேயாம். அதுநிகழ்ந்தது, சுக்கிலவருஷம் வைகாசி மாதம் அமரபக்ஷத்துச் சஷ்டி திதியும், அவிட்ட நக்ஷத்திரமும் கூடிய சுப வேளையில்".

மறுநாள் 31-5-1929, வெள்ளிக்கிழமை காலை 8-15 மணிக்குத் திருவான்மியூர் சேர்ந்து, சமாதி நிலையத்தில் அமர்ந்தருளினர்கள்.

அச்சமாதிக் கோயிலில், அவருடைய இறைவணகிய முருகப் பெருமானுக்கும், அவருக்கும் நித்திய வழிபாடு நடைபெற்று வருகிறது. மேற்குறித்த மூன்று விசேட நாட்களிலும், கிருத்திகை, பௌர்ணமி நாட்களிலும் விசேட பூஜைகள் நிகழ்ந்து வருகின்றன. மயூரவாகன சேவன விழா எம்முறையில் நிகழ வேண்டும் என்பதைச் சுவாமிகள் விளக்கமாக எழுதி வைத்துள்ளார்கள்.

இச்சமாதிக் கோயிலும், அதற்கெதிரில் திரு. சி. மாசிலாமணி முதலியார் கட்டித் தந்த அறச்சாலையும், இவற்றைச் சார்ந்த நிலம் முதலிய சொத்துக்களும் மஹா தேஜோ மண்டல சபையின் பொறுப்பில் உள்ளன. நித்திய பூஜை விழாக்கள் முதலியவற்றை இச்சபை நடத்தி வருகிறது.

அறிவிலும் பண்பிலும்சிறந்த பெரியோர் பலர் சுவாமிகளுடைய சரித்திரத்தையும், இவர் அருளியுள்ள நூல்களையும்கவனித்த போது, இவர் மேலுலகிலிருந்து அனுப்பப் பட்ட ஒரு மகாத்மா என்று மதிப்பர். சுவாமிகள் பாடியுள்ள 6660 செய்யுட்கள் அவர்களாலேயே ஆறு காண்டங்களாக வகுக்கப்பட்டுள்ளன. சண்முக கவசமும் பஞ்சாமிர்த வண்ணமும் தீமைகளை நீக்கும் ஆற்றல் மிக்க பாராயண நூல்கள் என்று பலரால் போற்றப்பட்டு வருகின்றன. தம் சீடர்களுக்குச் சிறப்புவகையில் வற்புறுத்தி உணர்த்த விரும்பிய நுண்ணிய கடமைகள் பல, செவியறிவுறூஉ என்னும் சிறு வடிவப் பெருநூலில் காணவுள்ளன. அறிவாராய்ச்சிக்குப் போதிய இடந்தரும் பண்பு சுவாமிகள் பண்பு. இதனை அவர்கள் நூல்கள் பலவற்றிற் காணலாம். காவிய நயங்களை 'ஸ்ரீமத் குமாரசாமி'யத்தில் காணலாம்.

சுவாமிகள் மீது திரு. வி. க. முதலிய அறிஞர்கள் சிலர் தோத்திரங்கள் பாடியுள்ளனர்.

கடவுளைத் தாம் நேரில் கண்டு, பிறரும் கண்டு உய்ய வேண்டும் என்ற கருணையுள்ளம் படைத்த இப்பெருந் தபோதனர்-அனுபவஞானி—புலவர்—திருநாமம், நம் பாரத நாட்டில் என்றும் நிலைபெற்றிருக்கும் மாண்பை யுடையது. மக்களை மேல் நிலைக்குச் செலுத்தும் ஆற்றல் படைத்தது.

இருமொழியின் கருத்துணர்ந்திங் கெவருளத்தும்
ஞானவிளக் கேற்று வானை,
ஒருமொழியைச் சிவற்குரைத்தோன் உயரருள்
பெற்று, அருணகிரி யெனவுள் ளானைப்,
பெருமொழிநூல் உரைகள்பல அருள்குமர
குருதாசப் பேரி ஞனைத்,
திருமொழிஎற்(கு) உரைத்தாண்டு சிறியேனை
ஆள்வானைச் சிந்தை செய்வாம்.

## கோயில் நிகழ்ச்சிகள்

பெருந்திருவிழா :

1. காளையார் கோயில் தேவஸ்தானம், காளையார் கோயில்.
2. ஸ்ரீ சுவர்ணம்பிகா சமேத ஸ்ரீ சுகவனேசுவர சுவாமி தேவஸ்தானம், சேலம்.
3. திருச்செங்காட்டங்குடி ஸ்ரீ உத்தராபதீஸ்வர சுவாமி கோயில்.
4. திருக்காருயில் ஸ்ரீ கண்ணாயிர நாத சுவாமி கோயில்.
5. திருவதிகை ஸ்ரீ வீரட்டேஸ்வரர் தேவஸ்தானம் - திருநாவுக்கரசு சுவாமிகள்.
6. ஸ்ரீ கண்ணுடைய நாயகி அம்மன் கோயில், சிவகெங்கா தேவஸ்தானம் கோயில்கள்.
7. ஸ்ரீ சொக்கநாத சுவாமி தேவஸ்தானம், மன்னார்குடி.
8. ஸ்ரீ உத்தமர் கோயில் தேவஸ்தானம், பிட்சாண்டார் கோயில். ஸ்ரீ பிட்சாடனேஸ்வரர் தேவஸ்தானம்.
9. திருப்புகலூர் ஸ்ரீ அக்னீஸ்வர சுவாமி தேவஸ்தானம்.
10. சிதம்பரம் ஸ்ரீ தில்லையம்மன் தேவஸ்தானம்.
11. மடவார்விளாகம் ஸ்ரீ வைத்தியநாத சுவாமி தேவஸ்தானம்.
12. திருப்புனவாயில் ஸ்ரீ விருத்தபுரீசுவர சுவாமி தேவஸ்தானம்.
13. திருப்பூவனூர் ஸ்ரீ சதுரங்கவல்லபநாத சுவாமி தேவஸ்தானம்.
14. ஸ்ரீ கைலாசநாத சுவாமி தேவஸ்தானம், கைலாசபுரம்.
15. ஸ்ரீ திருவாவடுதுறை ஆதீனத்தைச் சார்ந்த ஸ்ரீ கௌரி மாயூரம் ஸ்ரீ கௌரி மாயூரநாத சுவாமி தேவஸ்தானம்.



ஸ்ரீ சிதம்பர சுவாமிகள், திருப்போரூர்.


CONNEMARA PUBLIC LIBRARY
12 JUL 1973
MADRAS

திருவானைக்கா தரவரலாற்றுச் சிற்பம்

# திருவள்ளுவரின் உவமைத் திறன்

முன்னுரை :

உலகப் பெருங் கவிஞர்களுள் ஒருவராகிய திருவள்ளுவர், தமது ஒப்புயர்வற்ற திருக்குறள் நூலின் முதற்கண், "கடவுள் வாழ்த்து"க்கூற முற்படுகின்றார். கடவுளை வாழ்த்துவதற்குத் தலைப்படும் முன்னர், உலகிற்குக் கடவுள் ஒருவர் உண்டு என உணர்த்த வேண்டுவது அவருக்கு இன்றியமையாத கடமையாகின்றது. கடவுள் ஒருவர் உண்டு என்னும் உண்மையை உணர்த்த, அவர் வேறு எத்தனையோ பலப்பல வகையான சான்றுகளையும் காரணங்களையும் எடுத்துக்காட்டியிருக்கலாம். ஆனால் அவர் அங்ஙனமெல்லாம் செய்யாமல், நம் தமிழிலக்கணக் கருத்தினையே கையாளுகின்றார். ஆசிரியர் தொல்காப்பியர், தாம் இயற்றியருளிய தொல்காப்பியம் என்னும் தமிழிலக்கண நூலில், "மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்" எனப் பணித்தருளிய நுட்பம் உணர்ந்து,

"அகர முதல எழுத்தெல்லாம், ஆதி
பகவன் முதற்றே உலகு"

என்னும் திருக்குறளில், இறைவனுண்மையை நிறுவுவதற்குத் தமிழிலக்கண அமைப்பினைத்தழுவி, ஆசிரியர் திருவள்ளுவர் அகரத்தினை உவமை காட்டியுள்ள அருமைப்பாடு, பெரிதும் போற்றி மகிழ்தற்குரியது!

உவமையணி :

ஒரு கவிதையின் சிறப்புக்குக் காரணமாக அமைவன பலப்பல. அவைகளுள் உவமை என்பது தலைசிறந்ததொன்று. உவமையானது கவிதைக்கு அழகும் சுவையும் அளிக்கின்றது; கருத்து வளத்தினைப் பெருக்குகின்றது; கவிதையின் பொருளினைப் பயில்பவர் உள்ளத்திற் கவினுறப் பதிவிக்கின்றது. 'அணியிலாக் கவிதை பணியிலா வனிதை' என்பது பழமொழி கவிதைக்குரிய அணிகளுள் முதன்மையும் தலைமையும் வாய்ந்தது உவமையே. ஏனைய எல்லாப் பிற அணிகளுக்கும் உவமையே அடிப்படையும் உயிரும் ஆகும். அது பற்றியே ஆசிரியர் தொல்காப்பியர் பிற அணிகளை விதந்து ஓதாமல், உவமை ஒன்றினையே சிறப்பாகக் கொண்டு, உவமை இயல் என ஒரு தனி இயலை வகுத்து, அதனை மிகவும் அழகுற விளக்கியருளினார். அப்பைய தீட்சிதர் என்பவரும், தம்முடைய சித்திரமீமாஞ்சை என்னும் நூலில், எல்லா அணிகளும் உவமையின் அடியாகவே தோன்றின எனக் குறிப்பிட்டுள்ளார்.

கற்பனை செறிந்த நல்ல
கவிதையாம் அரங்கம் தன்னில்
பொற்புறும் உவமை என்னும்
புகழ்மிகு விறலி தானே,
பற்பல வேடம் பூண்டு
பண்பமை சுவைஞர் உள்ளம்
நற்பெரு மகிழ்ச்சி ஓங்க,
நடனம்செய் தின்பம் நல்கும்.

நலமிகும் உவமை என்னும்
நலமெழில் விறலி தானே,
பலவகைச் சிறந்த கோலம்
பாங்குறப் புனைந்து போந்து,
கலைநிறைந் துயர்ந்து நிற்கும்
காவிய அரங்கில் தோன்றிப்
புலவர்தம் உள்ளத் தின்பம்
பொங்கிட நடிப்பள் நன்றே.

—தமிழாக்கம், ஆசிரியர்.

இத்தகைய சிறந்த இனிய உவமையணியினை, ஆசிரியர் திருவள்ளுவர் தமக்கே

யுரிய சிறப்பு முறையில் அழகுற அமைத்துக் கையாண்டுள்ள திறம், ஆராய்ந்துணர்ந்து அகமகிழ்தற்குப் பெரிதும் உரியதாகும்.

சான்றோர் தழுவல் :

இங்ஙனம் திருவள்ளுவர் எடுத்துக் காட்டியருளிய அகர உவமையின் சிறப்பினை, அவருக்குப் பின்னர்த் தோன்றிய தமிழகச் சான்றோர்கள் பலரும் வியந்து மகிழ்ந்து, தத்தம் நூல்களில் பெரிதும் தழுவிக் கொண்டுள்ளனர்:—

(1) "அகர முதலானை அணி ஆப்பனூரானைப் பகரும் மனம் உடையார் வினைப் பற்றறுப்பாரே" என ஞானசம்பந்தர் நவில்கின்றார்.

(2) "ஆனத்தின் முதல் எழுத்து ஆகி நின்றாய்" என்று திருநாவுக்கரசர் பாடுகின்றார்.

(3) "அகரம் முதலின் எழுத்தாகி நின்றாய் அடியேன் உய்யப் போவதோர் சூழல் சொல்லே" எனச் சுந்தரர் துதிக்கின்றார்.

(4) "அகரமாய் யார்க்கும் அறிவரிது அப்பொருள்" என்று திருவியலூர் உய்யவந்த தேவர் சிறந்தெடுத்துப் போற்றுகின்றார்.

(5) "அக்கரங்கள் இன்றாம் அகரவுயிர் இன்றேல்" என்று மெய்கண்டார் சிவஞான போதத்தில் குறிப்பிடுகின்றார்.

(6) "அக்கரங்கள் தோறும் சென்றிடும் அகரம் போல நின்றனன் சிவனும் சேர்ந்தே" என அருள்நந்தி சிவாசாரியார் அறிவுறுத்துகின்றார்.

(7) இவ்வாறே சைவ சித்தாந்த சந்தான ஆசிரியர்களுள் ஒருவர் ஆகிய உமாபதி சிவம், தாம் இயற்றிய திருவருட்பயன் என்னும் நூலில், "அகர உயிர்போல் அறிவாகி எங்கும் நிகரில் இறை நிற்கும் நிறைந்து" என இத்திருக்குறளையே தழுவி இனிதெடுத்துரைத்து விளக்கியிருக்கின்றார்.

நுண் பொருள்கள் :

இங்ஙனம் பிற்போந்த சான்றோர்கள் அனைவரும் போற்றி மகிழும் வண்ணம் இறையுண்மையை நிறுவுவதற்குத் தெய்வப் புலவர் திருவள்ளுவர் பெருமான் காட்டியருளிய அகர வுவமையானது, சிந்திப்பரியதாய்ச் சிந்திப்பவர்க்குச் சிறந்து செந்தேன் முந்திப் பொழிவதாய், நுண்பொருள்கள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டு ஒளிர்கின்றது!

(1) ஆதி அகரம் விகாரத்தானன்றி நாத மாத்திரையான் இயல்பாக வெளிப்பட்டு நிற்கின்றது; அதுபோலவே இறைவனும் இயல்பாகத் திரிபின்றி இயற்கை வடிவினனாக அமைந்து விளங்குகின்றான்.

(2) அகரம் அங்காப்பு மாத்திரையால் திரிபின்றி வெளிப்பட்டு, வேறு பிற ஒலிகளின் தோற்றங்களுக்கெல்லாம் முதன்மையாய் நிற்கின்றது; அதுபோலத் திரிபின்றி இயல்பாக விளங்கும் இறைவனும், முத்தொழில்களுற்றுத் திரிபுறும் உயிர் உலகுகளின் இயக்கங்களுக்கு முதல்வனாகத் திகழ்கின்றான்.

(3) அகரமே உயிர்களிலும் மெய்களிலும் கலந்து நின்று அவற்றை ஒலிப்பிக்கின்றது; அதுபோலவே இறைவனும் அறிவற்ற உலகப் பொருள்களிலும், அறிவுடைய உயிர்களினுள்ளும் ஒன்றிக் கலந்து நின்று அவற்றை இயக்குவிக்கின்றான்.

> "இறைவன் இயங்குதிணைக் கண்ணும் நிலைத்திணைக் கண்ணும் பிறவற்றின் கண்ணும் அவற்றின் தன்மையாய் நிற்குமாறு எல்லார்க்கும் ஒப்ப முடிந்தாற்போல, அகரமும் உயிர்க் கண்ணும் தனிமெய்க் கண்ணும் கலந்து அவற்றின் தன்மையாய் நிற்கும் என்பது ஒப்பமுடிந்தது. 'அகர முதல' என்னும் குறளான் 'அகரமாகிய முதலையுடையன எழுத்துக்களெல்லாம்; அதுபோல இறைவனாகிய முதலையுடையது உலகம்' என வள்ளுவனார் உவமை கூறியவாற்றானும், கண்ணன் 'எழுத்துக்களில் அகரம் ஆகின்றேன் யானே' எனக் கூறியவாற்றானும் பிற நூல்களானும் உணர்க".
>
> —நச்சினார்க்கினியர்,
>
> தொல். எழுத்து, மொழிமரபு 12.

(4) எழுத்துக்கள் மெய் உயிர் என இரண்டாய் அகர முதலவாதல் போல, பிரபஞ்சமும் சேதனம் அசேதனம் என இரண்டாய் ஆதிபகவனாகிய முதலையுடையது. உயிர் எழுத்து சீவான்மாவிற்கும், மெய்யெழுத்து

தத்துவப் பிரபஞ்சத்திற்கும், அகரம் ஆதி பகவனுக்கும் உவமையாம் என்பது.

(5) அகரம் மெய்களிலும், உயிர்களிலும் ஒன்றித் கலந்து நிற்பினும். அம்மெய் உயிர்களின் வேருகத் தனித்தும் நிற்கின்றது; அதுபோல இறைவனும் உலகோடும் உயிர்களோடும் கலந்து ஒன்றி நிற்கின்ருன் எனினும், அவற்றின் வேருகக் தனித்தும் விளங்குகின்ருன்.

(6) அகரம் உயிர்களோடும் மெய்களோடும் ஒன்ருய் வேருய் உடனுய்க் கலந்து நிற்பினும், ஒலியியல் நுட்பம் உணர்ந்த அறிஞர்களுக்கன்றிப் பருப்பொருள் அறிவினர்க்கு அவ்வியல்பு விளங்குவதில்லை; அதுபோலவே இறைவனும் உலகுயிர்களோடு கலப்பினுல், 'உடலின் உயிர் போல்' ஒன்ருகியும், பொருட்டன்மையாற் 'கண்ணின் அருக்கன் போல்' வேருகியும், உயிரக்குயிராதற் றன்மையாற் கண்ணொளியின் ஆன்மபோதம் போல் உடனுகியும் நின்று அருள் செய்து போதருகின்ருனுயினும், மெய்யுணர்வு பெற்ற மேலோர்கட்கன்றி அவனது அருளியல்பு சிறிதும் விளங்குவதில்லை.

(7) அங்காந்த அளவில் தோன்றும் அகரமும், அதன் இயைபாற் பிறந்தொலிக்கும் ஏனைய மெய்யுயிர் எழுத்துக்களும் ஒருவனுல் ஒலிக்கப்பட்டுத் தோன்றுதலின், தோற்றமும் ஈறும் உடையனவாகக் கருதப்படுமெனினும், முக்காலத்து மக்களாலும் எக்காலத்தும் ஒலிக்கப்படுதலின், அவை என்றும் உளவாய் நின்றிலங்கும் அழிவில் பொருள்களேயாம்; அதுபோல இறைவனும், இறைவனுல் இயக்கப் பெறும் உலகுயிர்களும் முத்தொழில் நிகழ்ச்சிகளைப் பெற்றிருப்பினும், என்றும் உளவாம் அழிவில் பொருள்களே யாகும். "பதியினைப்போற் பசு பாசம் அனுதி" என்பது திருமூலர் திருமந்திரம்.

8. அகரம் தமிழ் எழுத்துக்களுக்கு மட்டுமே யன்றி, வேறு பல மொழிகளின் எழுத்துக்களுக்கும் பொதுவாகவும் முதலாகவும் திகழ்கின்றது; அதுபோலவே இறைவனும் எல்லாச் சமயங்களுக்கும் பொதுவாகவும் முதலாகவும் விளங்குகின்ருன். 'ஒருவனுமே பலவாகி நின்றவா தோள் நோக்கம் ஆடாமோ' என்பர் மணிவாசகர். "இராமேச்சுரத்து ஒருவனுமே பலவாகி நின்றதொரு வண்ணமே" என்பது சம்பந்தர் தேவாரம்.

9. அகர ஒலி ஒன்றே வெவ்வேறு மொழியாளர்களாற் பல்வேறு வடிவினதாக எழுதப்படுகின்றது: அதுபோல இறைவன் ஒருவனே வெவ்வேறு சமயத்தினராற் பல்வேறு வடிவினனுகவும் பெயரினனுகவும் வைதது வழிபடப்படுகின்ருன். "ஒரு நாமம் ஓர்உருவம் ஒன்று மில்லாற்கு ஆயிரம் திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ" என்பது திருவாசகம்.

10, பேச்சளவில் மட்டுமுள்ள திருந்தா மொழிகளில் (Uncultivated languages), அகரம் முதலிய ஒலிகட்கு வரிவடிவில் எழுத்துக்கள் (Alphabet) இல்லையாயினும், திருந்திய இலக்கியச் செம்மொழிகளில் (Classical languages), எழுத்தின் ஒலிவகைகளைக் காட்ட வரிவடிவங்கள் இன்றியமையாதன என்று நன்குணர்ந்து, எழுத்து வடிவங்கள் படைக்கப்பட்டுள்ளன: அதுபோல இறைவழிபாட்டிற்குத் திருவுருவங்கள் (Idols) வேண்டா எனக் கரைந்து திரியும் ஒரு சிலர் உள்ளன ரெனினும், ஒலி வகைகளைக் காட்டுதற்கு எழுத்தமைப்புக்சள் வேண்டப்படுதல் போல, இறைவழிபாட்டிற்கும் திருவுருவ அமைப்புக்கள் வேண்டப்படும் என்பது பழந்தமிழ் மக்களின் சிறந்த கொள்கை.

கட்புலன் இல்லாக் கடவுளைக் காட்டும்
சட்டகம் போலச் செவிப்புல ஒலியை
உட்கொளற்கு இடும்உருபு ஆம்வடி வெழுத்தே

என்பது, இலக்கண நூல்களில் எடுத்துக் காட்டப் பெறும் மேற்கோள். ஒலியையுணர்தற்கு எழுத்துக்கள் உதவுமாறு போல, இறைவழிபாட்டிற்குத் திருவுருவங்கள் உதவி புரியும் என்பது கருத்து.

கவிதையும், பொருளும் :

இங்ஙனம் அறிஞராய்க் கருதியுணர வல்லார் கருதிய யுணர்ந்து மகிழத்தகும் சிறந்த கருத்துக்கள் பலப்பலவும், இவ் அகர உவமையின்கண் செவ்விதின்

அமைந்துள்ளமை அறிந்து மகிழ்தற்குரியது.

"எல்லையற்ற பல பொருள் நுட்பக் குறிப்புக்களை யுணர்த்திக் கொண்டு செல்ல வல்ல தன்மையதாதலே, சிறந்த கவிதை எனத் தெளியப்படுதற்குரிய சீரிய சான்றாகும். சிறந்த நல்ல கவிதைச் செய்யுள் எதுவாயினும், அதனைச் சுற்றி அளவிடற்கரியதொரு பொருட்குறிப்புச் சூழ்நிலை மிதந்து கொண்டிருக்கும். கவிஞன், கருதியதும் கூறியதும் ஒரு கருத்தே யாயினும், அக் கருத்தே மிக விரிந்து பரந்து, அவன் கருதாத வேறு பல இயைபுடைய கருத்துக்களையும், தன்பாற் பொலியத் தோற்றுவித்துக் கொண்டு, இனிது திகழும்" எனப் பேராசிரியர் ஏ. சி. பிராட்லி என்பவர் கூறுவர்.*

அதற்கு ஏற்ப இங்ஙனம் பலவகை விரிந்த பொருள் நுட்பக் குறிப்புக்கள் புலனாகும் வண்ணம் 'அகர முதல எழுத்தெல்லாம்' என்னும் அழகிய தொடரை உவமையாக அருளிச் செய்திருப்பதொன்றே, திருவள்ளுவர் தெய்வப் புலவர் என்பதனை நன்கினிது விளக்கும்.

முடிவுரை :

தெய்வப் புலவர் திருவள்ளுவர் அருளிச் செய்த திருக்குறள் நூலை நாம் ஆராய்ந்து கற்கவும், கற்று அதன்படி வாழ்க்கையில் நிற்கவும், இயன்றவரை முயன்று சிறப்புறுவோமாக!

திகழும் திருவள் ளுவனார்தாம்
சிறந்த தெய்வப் புலவர்எனல்,
பகவன் உண்மை நிறுவுதற்குப்
பண்பின் ஆராய்ந் தவர்சொற்ற

அகர உவமை தான் ஒன்றே,
அறியத் தெருட்டும்! அச்சான்றோர்
தகவினை அளித்த திருக்குறள் நூல்,
தக்காங் கோதி நாம்உய்வோம்!

—ஆசிரியர்.

---

* "The proof of the purest poetry is that its meaning is **inexhaustible...** About the best poetry, and not only the best, there floats an atmosphere of **infinite suggestion**. The poet speaks to us of one thing, but in this one thing there seems to lurk the secret of all. He said what he meant, but his meaning seems to beckon away beyond itself, or rather to expand into something **boundless** which is only focussed in it".

— Professor **A. C. Bradley**,
Oxford Lectures on Poetry.

---

## கோயில் நிகழ்ச்சிகள்

பெருந்திருவிழா :

1. திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீ பாடலீஸ்வரர் தேவஸ்தானம்.
2. போரூர் சம்பத்கிரி ஸ்ரீ நரசிம்ம சுவாமி தேவஸ்தானம்.
3. கோட்டூர் ஸ்ரீ தேனமபிகை சமேத ஸ்ரீ கொழுந்தீசுவர சுவாமி தேவஸ்தானம்
4. தம்பிக்கோட்டை ஸ்ரீ சுந்தரேஸ்வர சுவாமி தேவஸ்தானம்.
5. இஞ்சிகுடி ஸ்ரீ பார்வதீசுவர சுவாமி தேவஸ்தானம்
6. கோயமுத்தூர் கோட்டை ஸ்ரீ கரிவரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்.
7. திருக்கண்ணபுரம் ஸ்ரீ சௌரிராஜப் பெருமாள் தேவஸ்தானம்.
8. திருமக்கோட்டை ஸ்ரீ ரங்கநாத சுவாமி தேவஸ்தானம்.
9. திருமயிலை ஸ்ரீ திருவேங்கடமுடையான் தேவஸ்தானம், சென்னை-4.
10. திருமோகூர் ஸ்ரீ காளமேகப் பெருமாள் தேவஸ்தானம்.

**திருவிளக்கு - திருமயிலைக் கபாலீச்சுரர் தேவஸ்தானம், சென்னை - 4.**

**கும்பாபிஷேக விழா – அம்பாசமுத்திரம் ஸ்ரீ கிருஷ்ண சுவாமி தொகுதி தேவஸ்தானத்தைச் சார்ந்த ஸ்ரீ புருஷோத்தமப் பெருமாள் ஆலயம்.**

# சிவஞான போதச் சூத்திரங்கள்

அவன் அவள் அதுஎனும் அவை, மூ வினைமையின்,
தோற்றிய திதியே: ஒடுங்கி, மலத்து உளதாம்;
அர்தம் ஆதி என்மனார் புலவர்.

(பொழிப்புரை) : அவன் என்றும் அவள் என்றும் அது என்றும் இவ்வாறு பகுத்துப் பலவாய்ச் சுட்டி உணரப்படும் சொல்லும் பொருளுமாய இருவகை உலகத் தொகுதி, தோற்றம் நிலை இறுதி என்னும் முத்தொழில்களை யுடைமையால், ஒருவனால் தோற்றப் பட்டதாய உள் பொருளே யாம். அது தோன்றுங்கால், தான் ஒடுங்குவதற்கு ஏதுவாய் நின்ற கடவுளினின்றும் சகசமலம் நீங்காமையால், அது நீங்குதற் பொருட்டு மீளத் தோன்றுவதாம். இவ்வாருகலின், சங்காரத் தொழிலைச் செய்யுங் கடவுளே உலகிற்கு முதற் கடவுள்; ஏனையோர் அன்னரல்லர் எனக் கூறுவர் அளவை நூலுணர்ந்தோர்.

(குறிப்புரை): திதி-உள் பொருள். ஒடுங்கி-உலகம் ஒடுங்குவதற்கு இடமாக உள்ள கடவுள்; பெயர்ச் சொல். 'ஒடுங்கியினின்றும் மலத்தால் உளது ஆகும்' எனப் பொருள் விரித்துக் கொள்க. அந்தம்-சங்காரம், அழித்தற்றொழில், சங்கார காரணனாகிய சிவபிரான். அந்தத்தைச் செய்யும் கடவுள், 'அந்தம்' எனவே வழங்கப்பட்டார். [1]

அவையே தானே யாய். இரு வினையிற்
போக்கு வரவு புரிய, ஆணையின்,
நீக்கம் இன்றி நிற்கும் அன்றே.

(பொழிப்புரை) : சங்கார காரணன் ஆகிய முதல்வன் கலப்பினால் உடலின் உயிர் போல் அவ்வுயிர்களேயாய், பொருட்டன்மையாற் கண்ணின் அருக்கன் போல் வேறுமாய், உயிர்க்குயிராதற் றன்மையாற் கண்ணொளியின் ஆன்ம போதம் போல் உடனுமாய் நின்று, ஆணை என்னும் பெயருடைய தனது சிற்சத்தியால் வரும் இருவினைகளால், உயிர்கள் இறத்தல் பிறத்தல்களைப் புரியும் வண்ணம் அவ்வாணையிற் பிரிப்பின்றிச் சமவேதமாய் நிற்பன்.

(குறிப்புரை): 'அவையே தானேயாய்' என்பது இரட்டுற மொழிதல். ஆதலின் 'அவையேயாய்,' 'தானேயாய்', 'அவையே தானேயாய்' எனத் தனித் தனியே பிரித்தும் கூட்டியும் பொருள் கொள்க. 'ஆணையின்' என்பது 'இரு வினையின்' என்பதனேடும், 'நீக்கம் இன்றி' என்பதனேடும் இயைந்து நின்று பொருள்படும். இலக்கண நூலோர் இதனைச் 'சிங்க நோக்கு' என்பர். சமவேதம்-இரு பொருள்கள் தம்முட் பிரிப்பின்றி இணைந்து நிற்கும் தன்மை. [2]

உளது. இலது என்றலின்; எனதுஉடல் என்றலின்;
ஐம்புலன் ஒடுக்கம்-அறிதலின்; கண்படில்
உண்டிவினை இன்மையின்; உணர்த்த உணர்தலின்
மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா.

(பொழிப்புரை) : உடல் பொறி நுகர்ச்சிப் பொருள் ஆகிய ஒவ்வொன்றினையும் முறையே இஃதன்று இஃதன்று எனக் கழித்துக் கொண்டு ஒன்று நிற்றலானும்; யான்கை யான்கால் யான்உடம்பு என உடம்பை வழங்குவார் இன்றி, எனதுகை எனதுகால் எனதுஉடம்பு என வேற்றுமைப் படவே யாவரும் வழங்கக் காண்டலானும்; ஐம்பொறிகள் ஐம்புலன்களையும் அறியுமாயினும், ஒருபொறி அறிந்த புலனை மற்றொரு பொறி அறிய மாட்டாமையானும்; ஐம்பொறிகளும் ஒடுங்கிய கனவு நிலையின்கண் நிகழ்ந்தனவற்றை நிகழ்ந்தவாறே அறியாமல் நனவின்கண் அவற்றை மயங்கி அறிதலானும்; உறங்கும்போதும் விழித்திருக்கும் போதும் ஒருசேரப் பிராண வாயு இயங்கி நிற்குமாயினும், உறங்கும் போது இன்ப துன்ப நுகர்ச்சியும் தொழிற்பாடும் உடம்புக்கு இன்மையானும்; தொழிற்படும் கருவிகள் ஒன்றும் இன்றிக் கேவல நிலையிற் கிடக்கும்போது அறியும் திறன் இன்றிப் பின்னர்ச் சகல நிலையிற் கலை முதலிய கருவிகளான் அறிவித்த

வழியே அறியும் திறனைப் பெறுதலானும்; மேற்கூறிய தத்துவங்கள் அனைத்தும் மாயையின் காரியங்களாய்த் தனித்தனியே வெவ்வேறு பெயர். பெற்று, நிலையின்றி அழிந்துபோம் இயல்பினவாக இருத்தலானும்; மாயா காரியங்களான் யாக்கப்பட்டு அமைந்த இயந்திரம் போன்ற உடம்பிற்கு உள்ளே, அதனின் வேருகத் தனியே ஆன்மா என்பது ஒன்று உண்டு.

(குறிப்புரை): இச் சூத்திரத்தின் இறுதியில் உள்ள 'ஆன்மா; என்பதும் முதலில் உள்ள 'உளது' என்பதும் சேர்ந்து 'ஆன்மா உளது' எனப் பொருள் கொள்ளக் கிடப்பதால், இது 'பூட்டுவிற் பொருள்கோள்' எனப்படும். ஒடுக்கம்-ஐம்பொறிகள் ஒடுங்கி நிற்கும் கனவு நிலை. கண்படுதல்-உறங்குதல். உண்டி-இன்ப துன்ப நுகர்ச்சி. வினை-உடம்பின் தொழிற்பாடு.

இச் சூத்திரம் சூனியான்மவாதி, தேகான்மவாதி, இந்திரியான்மவாதி, சூக்குமதேகான்மவாதி, பிராணான்மவாதி, விஞ்ஞானான்மவாதி, சமூகான்மவாதி என்னும் எழுவரையும் மறுத்து, உடலின் வேருக உடலுக்குள் உயிர் என்பதொரு பொருள் உண்டு எனப் பசு உண்மைக்குப் பிரமாணம் காட்டியது. [3]

அந்தக்கரணம் அவற்றின் ஒன்றன்று; அவை
சந்தித்தது ஆன்மாச் சகசமலத்து உணராது;
அமைச்சு அரசு ஏய்ப்பநின்று அஞ்சு அவத்தைத்தே:

(பொழிப்புரை) : ஆன்மா, அந்தக்கரணங்களாகிய மனம் புத்தி அகங்காரம் சித்தம் என்னும் நான்கனுள் ஒன்றன்று ஆயினும், அறிவுரை கூறுதலில் வல்ல உசாத்துணைவராகிய அமைச்சர்களுடன் கூடி நின்று தன் தொழில் நடாத்தும் அரசன் போல—சகசமலத்தினுல் உணர்வின்றிக் கஞ்சுகம் போன்ற கலை முதலிய தத்துவங்களால் பொதுவகையான் உணர்வு நிகழினும், சிறப்பு வகையான் நிகழுமாறு அவற்றாற் பெறப் படாமையின், சிறப்பு வகையான் உணருமாறு தனக்கு உற்ற துணையாகிய அவ்வந்தக் கரணங்களோடு கூடி நின்று, சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்னும் ஐந்து அவத்தைகளையுடையது ஆகும்.

(குறிப்புரை): 'ஒன்று அன்று' என்புழி 'ஆயினும்' என்று வருவித்துக் கொள்க. சகசமலம்-ஆணவமலம். உணராது-உணராமையினுல். சந்தித்தது-கூடியது. அமைச்சு அரசு-அமைச்சர்களுடன் கூடிய அரசன். ஏய்ப்ப-போல, உவம உருபு. 'சந்தித்து நின்று அஞ்சு அவத்தைத்து' என இயையும். [4]

விளம்பிய உள்ளத்து மெய்வாய் கண்மூக்கு
அளந்து அறிந்து அறியா; ஆங்கு அவைபோலத்
தாம்தம் உணர்வின் தமிஅருள்,
காந்தம் கண்ட பசாசத்து அவையே:

(பொழிப்புரை): உயிரின் துணையினுல் மெய்வாய் கண் முக்குச் செவி யென்பன தத்தம் புலன்களை இஃதின்னதென்று அளவிட்டறிந்தும், அங்ஙனம் அறியுந் தம்மையும், தம்மை ஊர்ந்து நின்றுசெலுத்தும் அவ்வுயிரையும், அறிய மாட்டா; அப்பொறிகளைப் போல உயிர்களும், தமது அறிவிற்குத் துணை புரிவதாகிய முதல்வனது சிற்சத்தியால், மேற்கூறிப் போந்த இருவகை ஐந்தவத்தையினின்று வினைப் பயன்களை அறிந்து அநுபவிக்கும் தம்மையும் தம்மைச் செலுத்தி நிற்கும் திருவருளையும் அறியமாட்டா; உயிர்கள் அவ்வாறு உணர்தல் காந்தத்தைக் கண்ட இரும்பு அதன் முன்னிலை மாத்திரையின் வலித்துக் கொள்ளப்படுமாறு போலக் கருவிகளால் அன்றிக் கருத்தினுல் இயக்கும் முதல்வனின் முன்னிலை மாத்திரையினும். ஆகலான், அதுபற்றி முதல்வன் மாற்றங்களுடையவனுதல் இல்லை.

(குறிப்புரை): 'மெய்வாய் கண்மூக்கு' என்பதில் செவி என்பது சொல்லெச்சம். அறிந்து அறியா-அறிந்தும் அறிய மாட்டா. தாம்-உயிர்கள். தமி-கடவுள், முதல்வன். அருள்-திரோதான சத்தி. பசாசம்-இரும்பு.

உணர்உரு அசத்து எனின்,உணராதுஇன்மையின்;
இருதிறன் அல்லது சிவசத்து ஆம்என,
இரண்டு வகையின் இசைக்கும் மன்னுலகே.

(பொழிப்புரை) : தம் உணர்வின் தமியாகிய முதற்பொருள், அளவைகளான் அறியப்படும் இயல்பிற்று எனின், அங்ஙனம் அறியப்படும் உலகப் பொருள்கள் போல் அழிபொருள்கள் ஆகிய அசத்தாம்; எவ்வாறுனும் அறியப்படாத இயல்பிற்று எனின். அங்ஙனம் அறியப்படாத முயற்கோடுபோலச் சூனியப் பொருளாம்; ஆகலான் இவ்விரு பகுதியும் அன்றி ஒருவாற்ருன் அறியப்படாமையும், ஒருவாற்ருன றியப் படுதலும் ஆகிய இரண்டு வகையாலும் சிவசத்து ஆகும் எனக் கூறுவர் மெய்யுணர்வின் நிலை பெற்றுயர்ந்தோர்.

(குறிப்புரை): 'உணர்உரு எனின் அசத்து; உணராது எனின் இன்மை' என இயைத்துப் பொருள் கொள்க. உணர் உரு-அறியப்படும் பொருள். அசத்து-நிலை மாறி அழியும் பொருள். இன்மை-சூனியம், பாழ். இருதிறன்-சத்துப் பொருள் அசத்துப் பொருள் என்னும் இரண்டு வகை. சிவ சத்து-சித்துச் சத்து. மன்உலகு-மெய் யுணர்வில் நிலைபெற்று உயர்ந்தோர். இசைக்கும்-கூறுவர். [6]

யாவையும் சூனியம் சத்துஎதிர் ஆகலின்,
சத்தே அறியாது: அசத்து இலது, அறியாது;
இருதிறன் அறிவு உளது இரண்டு அலா ஆன்மா.

(பொழிப்புரை): சத்துப் பொருள் அசத்துப் பொருள் என்னும் இரண்டனுள் வாக்கும் மனமும் கடந்த சிவசத்தின் முன்னிலையில் உணர்உரு ஆகியஅசத்தெல்லாம் பாழ் ஆகலின், சத்தாகிய சிவம் அசத்தாகிய உலகத்தை அறிதல் செய்யாது; அசத்தாகிய உலகம் அறிவில்லாத சடப்பொருள் ஆகலிற் சத்தாகிய சிவத்தை அறிதல் செய்யாது; ஆதலால் ஒழிபு என்னும் அளவையால் இருதிறனையும் அறியும் அறிவுளதாகிய ஒன்று உண்டு என்பது பெறப்படுதலின், அதுவே சத்தாதற் றன்மையும் அசத்தாதற் றன்மையும் ஆகிய இரண்டுமின்றிச் சதசத்தாயுள்ள உயிராம்.

(குறிப்புரை): சூனியம்-விளங்கித் தோன்ருத பாழ்ம் பொருள். சத்து எதிர்-சத்துப் பொருள் ஆகிய சிவத்தின் முன்னிலையில். அசத்து இலது-அசத்தாகிய உலகம் அறிவு இல்லாதது. இருதிறன்-இருதிறனையும். இரண்டு அலா ஆன்மா-சத்தும் அசத்தும் ஆகிய இரண்டும் அல்லாத சதசத்து ஆகிய உயிர். [7]

ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்துஎனத்,
தம்முதல் குருவுமாய்த், தவத்தினில்உணர்த்தவிட்டு
அன்னியம் இன்மையின் அரன்கழல் செலுமே.

(பொழிப்புரை): உயிர் தான் முன்னே செய்துகொண்ட புண்ணியச் சிறப்பினுல் தனக்கு இதுகாறும் உள்நின்று உணர்த்தி வந்த முதற்பெரும்பொருளே, இப்பொழுது குருவடிவமுங் கொண்டெழுந்தருளி வந்து சிவதீக்கை செய்து, மன்னவ குமாரன் ஆகிய நீ ஐம்பொறிகள் ஆகிய வேடருட் பட்டு வளர்ந்து, நின்பெருந்தகைமை அறியாது மயங்கி இடர்ப்பட்டாய்; நின் பெருந்தகைமையாவது இவ்வியல்பிற்று என்று அறிவுறுப்ப, அறிந்த மாத்திரையே அவ் வேடரை விட்டு நீங்கி, வேருதல் இன்றி வேறு அற்ற தன்மையின் நிலைபெற்று அம் முதல்வன் திருவடிகளை அடையும்.

(குறிப்புரை): இச் சூத்திரம் ஏகதேச உருவகம். ஐம்பொறிகளை வேடர்கள் என்ற ஏகதேசக் குறிப்பினுல், ஆன்மா 'மன்னவன் றன் மகன்' என்பது பெறப்பட்டது. 'செலும்' என்னும் பயனிலைக்கு உரிய 'உயிர்' என்னும் எழுவாய் வருவித்துக் கொள்க.'தவத்தினில் குருவுமாய்,வளர்ந்து அயர்ந்தனை என உணர்த்த, விட்டுக் கழல் செலும்' என இயையும். 'வளர்ந்ததனுல் அயர்ந்தனை' என மாற்றிக் கொள்க. அயர்ந்தனை-இடர்ப்பட்டாய். 'குருவுமாய்' என்ற உம்மை, உயிர்க்குயிராய் உள் நின்று உணர்த்தியதனையும் தழுவிக் குறிப்பித்தது. அன்னியம் இன்மை-அத்துவிதம் ஆகிய இயைபு. [8]

ஊனக்கண் பாசம் உணராப் பதியை
ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி;
உராத்துனைத் தேர்த்து எனப் பாசம்ஒருவத்
தண்நிழல் ஆம்பதி விதி எண்ணும் அஞ்செழுத்தே.

(பொழிப்புரை): குறையுணர்வாகிய உயிரின் அறிவாலும், பாசப் பொருள்களின் அறிவாலும் உணரப்படாத முதல்வனை, அவனது திருவடி ஞானத்தால் தன் அறிவின்கண்ணே ஆராய்ந்தறிக. அத்திருவடி ஞானத்தால் நிலமுதல் நாதம் ஈருகிய பாசக் கூட்டம், நின்ற இடத்தில் நிலலாமல் பரந்து திரிதற்கண் மிகு வேகமுடைய பேய்த்தேரின் இயல்பிற்ருய்க் கழிவதென்று அறிந்து நீங்கவே, அத்திருவடி ஞானம் பிறவித் துயர் ஆகிய வெப்பத்துக்குக் குளிர்ந்த நிழலாய் வெளிப்பட்டு விளங்கும். அவ்வாறு பாசத்தை விட்டு நீங்கி ஞானத்தைப் பெற்று ஞேயத்தைக் கண்ட காட்சி சலியாமைப் பொருட்டு, அப்பொருள் பயக்குந் திருவைந்தெழுத்து அவ்விதிப்படி அறிந்து கணிக்கப்படும்.

(குறிப்புரை): ஊனக்கண்-குறைந்த அறிவாகிய பசு (உயிர்) அறிவு. ஊனம்-குறை. கண்-அறிவு. பாசம்-பாசம் வாயிலாக வரும் அறிவு. உணராப்பதி-உணரப்பட முடியாத முதல்வன். சிந்தை-உள்ளத்தின்கண். நாடி-ஆராய்ந்து அறிக, நாடுதி; இகர ஈற்று முன்னிலை ஏவல்வினைமுற்று. உராத் துனைத்தேர்-பேய்த்தேர். உரா-பரந்து திரி

தல். துனே-வேகம். 'ஊராத் தேர்' என்பது உராத்தேர் என வந்தது எனவும் கொள்வர். பதி-பதிஞானம். விதி-விதிப்படி, முறையாக. எண்ணும்-எண்ணப்படும், கணிக்கப்படும்; 'எண்ணுமின்' என ஏவல் வினையாகவும் கொள்ளலாம். [9]

அவனே தானே ஆகிய அந்நெறி
ஏகன் ஆகி, இறைபணி நிற்க
மலமாயை தன்னொடு வல்வினை இன்றே.

**(பொழிப்புரை): ஞானக் கண்ணாற் காணப்பட்ட அம்முதல்வன், தான் உடனாய் நின்றறியவும் வேறு காணப்படுமாறு இன்றி, யானே அறிந்தேன் எனும்படி உயிர் தானேயாய் ஒற்றுமைப்பட்டு உயிரின் வழிநின்ற கட்டு நிலைபோல், ஈண்டு உயிர் அம் முதல்வனோடு உடனாய் நின்று அறியினும், தான் என வேறு காணப்படுமாறு இன்றி, அவனோடு ஒற்றுமைப்பட்டு அவ் இறைபணியின் வழுவாது நிற்பின், மலம் மாயை என்பவற்றோடு, வலிய கன்ம மலமும் இல்லையாய் ஒழியும்.**

(குறிப்புரை): அவன்-இறைவன். தான்-உயிர். அந்நெறி-அது போல. ஏகன் ஆகி-ஒற்றுமைப்பட்டு. இறைபணி நிற்றல்-இறைவனுக்கு உரிய தொண்டுகளை வழுவாது செய்து ஒழுகுதல். இன்று-இல்லாமல் நீங்கும். [10]

காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போல்
காண உள்ளத்தைச் கண்டு காட்டலின்;
அயரா அன்பின் அரன்கழல் செலுமே.

**(பொழிப்புரை): காட்டக் காணுந் தன்மையுடைய கண், உருவத்தைக் காணும்படி, அதனோடு ஒருங்கியைந்து நின்று காட்டி, அவ்வுருவத்தைக் காண்கின்ற ஆன்மாப் போல, அறிவிக்க அறியும் இயல்புடைய அவ்வான்மா நுகர்பொருள்களை அறியும்படி முதல்வன் அதனோடு ஒருங்கியைந்து நின்று அறிவித்து அறிந்து வருதலால், அவ்வத்துவித நிலையை மறவாது கடைப் பிடித்துச் செய்யும் அன்பினால், அம் முதல்வனின் திருவடியாகிய சிவானந்த அநுபூதியைத் தலைப்படும்.**

(குறிப்புரை): 'கண்டு காட்டலின்' என்பதைக் 'காட்டக் காண்டலின்' என மாறிப் பொருள் கொள்க. உள்ளத்தை-உள்ளத்திற்கு, உயிருக்கு; உருபு மயக்கம். அயரா அன்பு-மறவாமைக்கு ஏதுவாகிய அன்பு. அயர்தல்-மறத்தல். செலும்-அடையும். [11]

செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா
அம்மலம் கழீஇ; அன்பரொடு மரீஇ;
மால்அற நேயம் மலிந்தவர் வேடமும்,
ஆலயம் தானும் அரன் எனத் தொழுமே.

**(பொழிப்புரை): அயரா அன்பின் அரன் கழல் அடைந்த சீவன் முத்தன் ஆவான், செந்தாமரை மலர்போல விரிந்து விளங்கியமுதல்வனது வலியதிருவடியை அணையவொட்டாமல், அயர்த்தலைச் செய்விக்கும் அவ்வியல்பினையுடைய மும்மல அழுக்கை ஞான நீராற் கழுவி, அங்ஙனம் அயரா அன்பு செய்யும் மெய்ஞ்ஞானிகளோடு கலந்து கூடி மலமயக்கம் நீங்குதலான், அன்புமிக்குடைய அடியவரது திருவேடத்தையுஞ் சிவாலயத்தையும் முதல்வன் எனவே வழிபட்டு வாழ்வான்.**

(குறிப்புரை): செம்மலர்-செந்தாமரை மலர் போன்ற. நோன்மை-வலிமை. நோன்தாள்-வலிமை மிக்க திருவடி. 'அம்மலம்' என்பதில் அகரம், உலகறி சுட்டு; மலத்தின் கொடுமைத் தன்மையைக் குறித்து நின்றது. மால் அற-மயக்கம் நீங்க. நேயம் மலிந்தவர்-சிவனடியார்கள். ஆலயம்-சிவலிங்கம். 'தொழும்' என்னும் பயனிலைக்கு உரிய 'சீவன் முத்தன்' என்னும் எழுவாய் வருவித்துக் கொள்க. 'தொழுக' என்னுமல் 'தொழும்' என்றதனால், இச் சூத்திரம் அணைந்தோர் தன்மை என்னும் சீவன முத்தர்களின் இயல்பை உணர்த்துதல் பெறப்படும். [12]

—ஆசிரியர்.

# திருச்சந்த விருத்தம்

(முற்றொடர்ச்சி)

இரந்து உரைப்பது உண்டு வாழி,
ஏமநீர் நிறத்தமா!
வரம் தரும் திருக்குறிப்பில் வைத்தது
ஆகில் மன்னுசீர்
பரந்த சிந்தை ஒன்றிநின்று நின்ன
பாத பங்கயம்
நிரந்தரம் நினைப்பது ஆக நீ
நினைக்க வேண்டுமே.

(பொழிப்புரை) கடல் நீர் போன்ற நிறத்தை உடைய இறைவனே! தங்கள் பால் யான் பெரிதும் மன்றாடிச் சொல்லிக் கொள்ளும் செய்தி ஒன்று உள்ளது. பல்லாண்டு பல்லாண்டு வாழ்க. உயிர்களுக்குச் சிறந்த வரங்களை கொடுத்தருள்வதையே இயல்பாக உடைய தங்கள் திரு உள்ளத்தில் அடியேனுக்கு ஏதாவது வரம் கொடுக்கத்திருவுள்ளம் கொண்டருளினால், உலகப் பொருள்களில் பரவி அலைந்து, திரிகின்ற என்னுடைய மனமானது தங்கள் திருவடிகளிலேயே ஈடுபட்டுக் கலந்து, தங்களுடைய திருவடித் தாமரைகளை இடைவிடாமல் நினைத்துத் தியானிக்கும்படி தாங்கள் எளியேன்பால் திருவுள்ளம் பற்றி அருளுதல் வேண்டும்.

(குறிப்புரை) ஏம நீர்-கடல் நீர்; நிறத்தமா-நிறத்து அம்மா. அம்மா என்னும் விளி, அமா எனத் தொகுத்தல் விகாரமாயிற்று. அவனருளாலேயே அவன்தாள் வணங்குதல் வேண்டும். ஆதலின் 'நின்ன பாத பங்கயம் நிரந்தரம் நினைப்பதாக நீ நினைக்கவேண்டும்' என்று ஆழ்வார் இறைவனை வேண்டிக் கொள்கின்றார். [101]

விள்வு இலாத காதலால் விளங்கு
பாத போதில் வைத்து
உள்ளுவேன் அது ஊனநோய்
ஒழிக்குமா தெழிக்குநீர்ப்
பள்ளிமாய பன்றியாய
வென்றிவீர குன்றினால்
துள்ளுநீர் வரம்பு செய்த
தோன்றல் ஒன்று சொல்லிடே.

(பொழிப்புரை) கொந்தளிக்கின்ற திருப்பாற் கடலில் பள்ளி கொண்டருள்கின்ற மாயவனே! வராக அவதாரம் எடுத்து அருளிய வெற்றி வீரனே! அலைகள் பொங்குகின்ற கடல் நீரில் மலைகளைக் கொணர்ந்து அணைகட்டிய பெருமானே! நீக்கம் இல்லாத அன்பினால். விளக்கம் மிகுந்த நினது திருவடித் தாமரையில் எனது மனத்தை ஒப்படைத்து அத்திருவடிகளையே புகலிடமும் அடைக்கலமுமாக நம்பியுள்ள என்னுடைய உடற் பிணிகளை ஒழிக்கும் வழிகளில் ஒரு வழியை எனக்குத் தாங்கள் அருளிச் செய்வீராக.

(குறிப்புரை) விள்வு-நீக்கம். காதல்-அன்பு,பக்தி. பாதபோது-திருவடித்தாமரை. உள்ளுவேன் தியானிப்பேன். ஊனநோய்-உடல் துன்பம். [102]

திருக் கலந்து சேரும் மார்ப!
தேவ தேவ தேவனே!
இருக் கலந்த வேத நீதி
ஆகி நின்ற நின்மலா!
கருக் கலந்த காளமேக
மேனி யாயநின் பெயர்
உருக்கலந்து ஒழிவு இலாது
உரைக்குமாறு உரை செயே!

(பொழிப்புரை) திருமகள் இடைவிடாமல் கலந்து சேர்ந்து வாழ்கின்ற திருமார்பை உடையவனே! பிரமன் முதலியவர்களுக்கும் மேற்பட்ட நித்திய சூரிகளுக்கும் தலைவனே! பலவகைப்பட்ட இருக்கு என்னும் செய்யுள் வகைகள் சேர்ந்திருக்கின்ற வேதங்களால் புகழ்ந்தோதப்படுதலை இயல்பாக உடைய குற்றமற்றவனே! பொன்னுடன் சேர்ந்த காளமேகம் போன்ற திருமேனியை உடைய கண்ணபிரானே! நினது திருப்பெயர்களை இடைவிடாமல், நினது சிறந்த தெய்விக வடிவுடன் சேர்த்துத் தியானித்துப் புகழும் வழியினை, எனக்குத் தாங்கள் அருளிச் செய்தல் வேண்டும்.

(குறிப்புரை) திரு-திருமகள், மகாலட்சுமி. 'இ நக்த+கலந்த' என்பது 'இருக் கலந்த' எனத் தொகுத்தல்விகாரமாயிற்று. நின்மலன்-குற்றமற்றவன். கரு-பொன், மின்னல். திருமகளோடு கூடிய திருமாலின் அழகிய தோற்றத்தைக் 'கருக் கலந்த காளமேக மேனி' என்று ஆழ்வார் புகழ்ந்து போற்றினர். இறைவனின் திருப் பெயர்களை நாம் இடைவிடாது சொல்லித் தியானித்துக் கொண்டிருத்தல் வேண்டும்; அதுபோது இறைவனின் தெய்விகத் திருமேனியின் அழகையும் நாம் நம் மனக் கண்ணுல்கண்டு தொழுதல் வேண்டும். இதனை 'நின்பெயர் ஒழிவிலாது உருக் கலந்து உரைக்குமாறு உரைசெய்' என ஆழ்வார் குறிப்பிட்டிருத்தல் கொண்டு உணரலாம். [103]

> கடும் கவந்தன் வக்கரன்
> கரன் முரன் சிரம் அவை
> இடந்து கூறுசெய்த பல்படைத்
> தடக்கை மாயனே;
> கிடந்து இருந்து நின்று இயங்குபோதும்
> நின்ன பொற் கழல்
> தொடர்ந்து விள்வு இலாததுஒர்
> தொடர்ச்சி நல்க வேண்டுமே!

(பொழிப்புரை) கொடியவர்களான கவந்தன், தந்தவக்கரன் கரன், முரன், என்னும் அசுரர்களுடைய தலைகளை அறுத்துப்பல துண்டங்களாகும்படி செய்த பலவகைப் பட்ட படைக்கருவிகளை ஏந்திய பெரிய கைகளை உடைய பெருமானே! படுத்தல் இருத்தல் நிற்றல் திரிதல் முதலிய எந்தத் தொழிலைச் செய்தாலும் தங்களுடைய பொன் போன்ற திருவடிகளையே இடைவிடாமல் தொடர்ந்து தியானிக்கும் வழி பாடாகிய தொடர்பை எனக்குக் கொடுத்து அருள்வீராக.

(குறிப்புரை) கவந்தன், வக்கரன், கரன் முரன் என்பவர்கள் கொடிய அசுரர்கள். அவர்களைத் திருமால் அழித்தருளினர். ஆதலின் 'சிரம் அவை இடந்து கூறு செய்த மாயன்' என ஆழ்வார் குறிப்பிட்டார். தீயவர்களை அழித்தலும், நல்லவர்களைக் காத்தலுமே இறைவனின் தொழில் என்பது குறிப்பு. இத்தகைய இறைவனை நாம் எப்போதும் எந் நிலையிலும் சிறிதும் மறவாது வழிபட்டு வருதல் வேண்டும் என்பதனை இப்பாடலால் ஆழ்வார் வலியுறுத்தியுள்ளார். 'நின்றும் இருந்தும் கிடந்தும் நினை என்றும் இறைதாள் இணை' என்று ஆழ்வார் இப்பாடலால் நமக்கு அறிவுறுத்தி அருளினர். தொடர்ச்சி என்னும் சொல், இடையறுது நிகழ்தற்குரியது என்னும் கருத்தில், வழிபாடு என்னும் பொருளை உணாத்திற்று. 'துஞ்சிருள் காலைமாலைத் தொடர்ச்சியை மறந்து இராதே' எனவரும் தேவாரப் பாடலில் இப்பொருளைக் காணலாம். [104]

> மண்ணை உண்டு உமிழ்ந்து பின்இரந்து
> கொண்டு அளந்து, மண்
> கண்ணுள் அல்லது இல்லை என்று
> வென்ற காலம் ஆயினாய்!
> பண்ணை வென்ற இன்சொல் மங்கை
> கொங்கை தங்கு பங்கயக்
> கண்ண! நின்ன வண்ணம் அல்லதில்லை
> எண்ணும் வண்ணமே.

(பொழிப்புரை) பிரளய காலத்தில் உலகத்தை உண்டு திருவயிற்றிலே வைத்துக் காப்பாற்றியும், பிரளயம் கழிந்த பிறகு வெளிப்படுத்தியும், மாவலியின்பால் உலகத்தைத்தானமாகஏற்றுப்பெற்றுத்திருவடியால் அளந்தும், இவ்வுலகமானது நமது திருவருட் பார்வையாலன்றி நிலைபெற்றிருக்க இயலாது, என்று திருவுள்ளம் பற்றி, உலகம் முழுவதையும் நினக்குஉரிமையாக்கிக் கொண்டும் போந்து எல்லாக் காலத்துக்கும் தலைவனாகத் திகழ்பவனே! பண்ணின் இசையையும் வெற்றி கொண்ட இனிய சொற்களை உடைய பிராட்டியின் திருமார்பில் பிரிவறத் தங்கி வாழ்கின்ற செந்தாமரை மலர் போன்ற அழகிய சிவந்த கண்களை உடையவனே! நின் வடிவழகைத் தவிரத் தியானிக்கக் கூடிய வழிகள் வேறு எதுவும் இல்லை.

(குறிப்புரை) உலகம் இறைவனின் திருவருள் நோக்கத்தினலேயே இயங்கி வருகின்றது. ஆதலின் 'மண் கண்ணுள் அல்லது இல்லை' என்று ஆழ்வார் குறிப்பிட்டார். 'மண் கண்ணுள் உள்ளது' என்றே கூறினும் அமையுமாயினும், 'கண்ணுள் அல்லது இல்லை' என்று எதிர் மறை முகத்தாற் கூறினர், இன்றியமையாமையை விளக்குதற்கு. இறைவன் தமக்கு அருளினும், அருளாது ஒழியினும், அவனுடைய திருவுருவை இடைவிடாது நினைந்து தியானிப்பது ஒன்று மட்டுமே தமது நெஞ்சின் இயல்பாக உள்ளது என்

பதனை, 'நின்ன வண்ணம் அல்லது இல்லை' என எதிர்மறை முகத்தாற் குறிப்பிட்டிருத்தல் காணலாம். [105]

கறுத்து எதிர்த்த காலநேமி
காலனோடு கூட அன்று
அறுத்த ஆழி சங்கு தண்டு
வில்லும் வாளும் ஏந்தினாய்!
தொறுக்கலந்த ஊனம் அஃது
ஒழிக்க அன்று குன்றம்முன்
பொறுத்த நின்புகழ்க்கு அலால்ஓர்
நேசம் இல்லை நெஞ்சமே!

(பொழிப்புரை) முன்னொரு காலத்தில் சினங்கொண்டு எதிர்த்து வந்த காலநேமி என்னும் அசுரன், எமனுலகம் போய்ச் சேருபபடி அவன் தலையை அறுத்த சக்கரம், சங்கு, கதை. வில், வாள் என்னும் படைக்கலங்களைத்திருக்கரங்களில் ஏந்திக் கொண்டிருப்பவனே! ஆயர் பாடியில் பசு நிரைகளுக்கு நேர்ந்த துன்பத்தினை அப்பொழுதே நீக்குவதற்காக அனைவருடைய கண்ணின் முன்னே கோவர்த்தன மலையைக் குடையாக எடுத்துப் பிடித்த நினதுசிறந்த புகழ்ப் பண்புகளுக்குத் தவிர, வேறு எதற்கும் என் நெஞ்சத்தில் எத்தகைய விருப்பமும் இல்லை.

(குறிப்புரை) கறுத்து-சினந்து. தொறு-பசுநிரை. மனம்-துன்பம். அன்று-அப்பொழுதே. முன்-கண்ணின் முன்னே. பொறுத்த–தாங்கிய. நேசம்-விருப்பம். இறைவனின் திருப்புகழைத் தவிர, தம்முடைய நெஞ்சம் வேறு எதனையும் விரும்பவில்லை; இறைவனின் புகழ் ஒன்றையே தமது நெஞ்சம விரும்பித்தியானித்து மகிழ்கின்றது என்கின்றார். [106]

காய் சினத்த காசி மன்னன்,
வக்கரன், பவுண்டிரன்
மாசினத்த மாலி, மா சுமாலி.
கேசி, தேனுகன்
நாசம் உற்று வீழ நாள் கவர்ந்த
நின் கழற்கு அலால்
நேச பாசம் எத்திறத்தும்
வைத்திடேன் எம் ஈசனே!

(பொழிப்புரை) எங்கள் இறைவனே! மிகுந்த கோபத்தை உடைய காசி அரசனும், தந்த வக்கரனும், பவுண்டிரக வாசுதேவனும், பெருங்கோபத்தை உடைய மாலி, வலிமை மிக்க சுமாலி, குதிரை வடிவிற் கொல்ல வந்த கேசி, கன்றின் வடிவில் வந்த தேனுகன் முதலிய கொடியவர்கள் அழிவை அடைந்து இறந்துபோகும்படியாக, அவர்கள் வாழ்நாளை முடித்த, நினது திருவடிகளைத் தவிர வேறு எந்தப் பொருளிலும் யான் சிறிதும் விருப்பமோ பற்றோ கொள்ள மாட்டேன்.

(குறிப்புரை) இறைவனின் திருவடிகளைத் தவிர நாம் விரும்பத் தக்கதும், பற்றுக் கொள்ளத்தக்கதும் ஆகிய பொருள் எதுவும் இல்லை. ஆதலின் 'நின் கழற்கு அலால் நேசபாசம் எத்திறத்தும் வைத்திடேன் எம் ஈசனே' என்று ஆழ்வார் அருளிச் செய்தார். [107]

கேடுஇல் சீர் வரத்தன் ஆம்
கெடும் வரத்து அயன அரன்
நாடினோடு, நாட்டம் ஆயிரத்தன
நாடு நண்ணினும்,
வீடது ஆன போகம் எய்தி
வீற்றிருந்த போதிலும்,
கூடும் ஆசை அல்லது ஒன்று
கொள்வனோ குறிப்பிலே.

(பொழிப்புரை) அழிவு இல்லாத செல்வம் உடையவனாக வரம் பெற்றவனாகிய பிரமன், எல்லாவற்றிற்கும் முடிவைச் செய்ய வல்ல வரம்பெற்ற உருத்திரன் என்பவர்களுடைய நாடுகளோடுகூட, ஆயிரம் கண்களை உடைய தேவேந்திரனின் நாட்டையும் அடைவதாக இருந்தாலும், அல்லது ஒப்பற்ற வீடு பேறாகிய சிறந்த பேரின்பத்தைப் பெற்று அதனை அனுபவித்துக் கொண்டு பிறர் எவருக்கும் இல்லாத சிறப்புடன் விளங்கியிருக்கப் பெற்றாலும், இறைவனாகிய நின்னைச் சேரவேண்டும் என்னும் ஆசையைத் தவிர வேறு ஒன்றை என் நெஞ்சினுல் யான் நினைப்பேனோ?

(குறிப்புரை) 'கேடு இல்சீர் வரத்தன் ஆம் அயன்; கெடும் வரத்து அரன்' எனக் கொண்டு கூட்டிப் பொருள் கொள்ளுதல் வேண்டும். இது நிரல் நிரை அணி எனப்படும். நாட்டம்-கண். நாட்டம் ஆயிரத்தன்-தேவேந்திரன். போகம்-இன்பம். வீற்றிருத்தல்-வேறு எவர்க்கும் இல்லாத சிறப்புடன் விளங்குதல். கூடும் ஆசை-சேர வேண்டும் என்னும் விருப்பம். குறிப்பு-எண்ணம், நெஞ்சம். இறைவனை அடைந்து அவனோடு கூடிக் கலக்கும் விருப்பத்தைத் தவிர, வேறு எந்த இன்பத்தையும் தமது நெஞ்சம் சிறிதும் விரும்பவில்லை என இப்பாடலில் ஆழ்வார் வலியுறுத்திக் கூறியுள்ளார். 'இச்சுவை தவிர யான் போய் இந்திர

லோகம் ஆளும் அச்சுவை பெறினும் வேண்டேன்' என வரும் பாசுரமும் இங்கு நாம் சிந்திக்கத் தக்கது. [108]

சுருக்கு வாரை யின்றியே
சுருங்கினாய்; சுருங்கியும்
பெருக்கு வாரை இன்றியே
பெருககம் எய்து பெற்றியோய்!
செருக்குவார்கள் தீக்குணங்கள் தீர்த்த
தேவ தேவன் என்று
இருக்கு வாய்முனிக் கணங்கள் ஏத்த
யானும் ஏத்தினேன்.

(பொழிப்புரை) சுருங்கச் செய்பவர்களை இல்லாமலே வாமனனாகச் சுருங்கிய வடிவம் கொண்டவனே! அங்ஙனம் சுருங்கிய பின்னும் மீண்டும் பெருகச் செய்பவர்களை இல்லாமலே திரிவிக்கிரமனாகப் பெருவளர்ச்சியுற்று நீண்டு வளர்ந்து நெடுமாலாய் என்ற பெருமானே! செருக்கு அடையும் மாவலி போன்றவர்களின் தீய குணங்களைப் போக்கியருளிய தேவர்களுக்கும் தேவனே! என்று இங்ஙனமெல்லாம் வேதம் ஓதும் வாயை உடைய முனிவர் பெருமக்கள் திரளாகக் கூடித் துதித்தலால் அதைக்கண்டு அடியேனும் நின்னைத் துதிடபேன் ஆயினேன்.

(குறிப்புரை) இறைவனே! நின் வடிவழகு,சிறந்த குணங்கள், வியத்தகு செயல்கள், அளப்பரும் பெருமைகள் ஆகியவற்றைச் சிற்றறிவினனாகிய அடியேன் அறிந்து கொள்ளும் ஆற்றல் உடையவன் அல்லன். ஆயினும வேதமோதும் சான்றோர்கள் அனைவரும் திரளாகக் கூடி நின்னைப் பலகாலும் துதித்தல் கண்டு, யானும் நின்னைத் துதித்துத் தொழ முற்பட்டேன் என்பது இபபாடலின் கருத்து. இதனால் இறைவனின் பெருமையை வியந்தும் தமது சிறுமையினைக் கிளந்தும் ஆழ்வார் வெளியிட்டருளினார். ‘ஞானத்தால் தொழுவார்கள் தொழக்கண்டு ஞானத்தாய் உனை நானும் தொழுவனே' எனத் திருநாவுக்கரசரும், ‘தொணடாடித் தொழுவார்கள் தொழுக்கண்டு தொழுதேன் என்வினைபோக' எனச் சுந்தரரும் அருளிச் செய்திருக்கும் பாடல்கள், இங்கு ஒப்பு நோக்கி உணர்தற்கு உரியவை. [109]

தூ யனாயும் அன்றியும்,
சுரும்பு உலாவு தண்துழாய்
மாய! நின்னை நாயினேன்
வணங்கி வாழ்த்தும் ஈதெலாம்,
நீயும் நின் குறிப்பினில் பொறுத்து
நல்கு! வேலைநீர்
பாயலோடு பத்தர் சித்தம்
மேய வேலை வண்ணனே!

(பொழிப்புரை) வண்டுகள் உலாவுகின்ற குளிர்ந்த துளசி மாலையை அணிந்த மாயனே! திருப்பாற்கடலாகிய படுக்கையோடுகூட பக்தர்களின் உள்ளத்தில் குடிகொண்டிருக்கின்ற கடல் வண்ணனே! நாய் போன்று இழிந்தவனாகிய யான், தூய்மை உடையவனாகவோ, அல்லது தூய்மையில்லாதவனாகவோ நின்னைத் தொழுது வாழ்த்துகின்றேன். இவற்றையெல்லாம் மிக்க தூயமையும் பெருமையும் உடைய நீர் தாம, நும்முடைய திருவுள்ளத்தில் ஏற்றுப் பொறுத்துக் கொண்டு, எனக்குத் திருவருள் செய்து காப்பாற்றுதல் வேண்டும்,

(குறிப்பு) இறைவனே! யான் உம்மைத் துதித்துத் தொழ விரும புவதனால் ஒருவகையில் தூயவனாகவும்; யான் எனது என்னும் அகப்பற்று புறப்பற்று உணர்வுகள் என்னை இடைவடாது பற்றிச் சூழ்ந்து கொண்டு நிற்றலினால் தூய்மையில்லாத கசடனாகவும் உள்ளேன். எனினும் அது குறித்து என்னை விலக்கிப் புறக்கணித்து விடுதல்வேண்டா. தூய்மையே வடிவாக நின்னை நினைத்துத் தொழுதல் ஒன்றே எனககுத் தூய்மையை விளைகக வல்லதாகும். ஆதலின் என்பால் இரக்கங்கொண்டு அருள் புரிந்து என்னைக் காப்பீராக! என்பது இப்பாடலின கருத்து. சுரும்பு-வண்டுகள். துழாய்-துளசி. நல்கு-கொடு, அருள புரிக. வேலை-கடல். பாயல்-படுக்கை. [110]

(தொடரும்)

# விடை தெரியுமா?

1. சிவஞான போதத்தின் சிறப்பை விளக்கும் பழைய பாடல் யாது? அதன் பொருளைத் தெளிவுறுத்துக.

2. ''வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தம்'' என்று சைவ சித்தாந்தத்தின் சிறப்பைக் குறிப்பிட்டருளிய ஆசிரியர் யார்? அம்பாடலின் பொருளை விவரிக்க.

3. முருகன் எழுந்தருளி விளங்குவனவாகத் ''திருச்செந்தூர்ப் புராணம்'' குறிப்பிடும் தலங்கள் யாவை ?

4. காஞ்சிபுரத்தில் உள்ள கோயில்களுள் ''திசை மயக்கம்'' உடைய கோயில் யாது?

5. 'பிஞ்ஞகன்' என்று யாருக்குப் பெயர்? அச்சொல்லின் பொருளும் சிறப்பும் யாவை ?

6. ''பரிவதில் ஈசனைப்பாடி'' எனவரும் திருவாய்மொழிப் பாசுரத்தின் வியாக்கியானத்தில் விளக்கப் பெற்றுள்ள சுவையான கருத்து யாது ?

7. ''நண்ணு அசுரர் நலிவெய்த நல்ல அமரர் பொலிவெய்த'' என்னும் திருவாய்மொழிப் பாசுரப் பகுதி வியாக்கியானத்தில் நம்பிள்ளை என்பார் அருளிச் செய்துள்ள சிறப்புச் செய்தி யாது ?

8. செல்வ நம்பி என்பவர் யார் ? அவரைப் பற்றிய ஒரு குறிப்புத் தருக.

9. ஸ்ரீ எம்பெருமானார் திருவவதரித்த நாள் எது ? அதன் சிறப்பை மணவாள மாமுனிகள் எங்ஙனம் வியந்து துதித்துப் போற்றியுள்ளார் ?

10. ''அறிவினுல் குறையில்லா'' எனத் தொடங்கும் திருவாய்மொழிப் பாசுர வியாக்கியானத்தில் விளக்கப்பெற்ற சுவைமிக்க சிறந்த கருத்து யாது ?

—ஆசிரியர்

(விடை: மறுபுறம் காண்க)

# விடை விளக்கம்

**1.** சிவஞான போதத்தின் சிறப்பை விளக்குவதாக அமைந்துள்ள பழைய **பாடல் வருமாறு :—**

வேதம் பசு; அதன்பால் மெய் ஆகமம்; நால்வர்
ஓதும் தமிழ் அதனின் உள்உறுநெய்;—போதமிகு
நெய்யின் உறுசுவையாம் நீள்வெண்ணெ மெய்கண்டான்
செய்த தமிழ் நூலின் திறம்.

**தெய்வப் புலவராகிய** திருவள்ளுவர் அருளியதிருக்குறள் தமிழ் வேதம். அது காமதேனு **போன்ற** தெய்வப் பசுவாகத் திகழ்கின்றது. திருமூலர் அருளிய திருமந்திரம், அப்பசுவி**னின்றும்** கிடைக்கும் பாலாக விளங்கிப் பயன் படுகின்றது. சைவ சமய ஆசிரியர்களா**கிய அப்பர், சம்பந்தர்,** சுந்தரர், மாணிக்கவாசகர் என்னும் நால்வர்களும் பிறரும் பாடிய **திருமுறைகள்,** அப்பாலின்கண் கலந்துள்ள நெய்யாகும். ஆசிரியர் மெய்கண்டார் இயற்றியருளிய 'சிவஞான போதம்' என்னும் செந்தமிழ் ஞானத்திருநூல், அந்நெய்யின்கண் **அமைந்து விளங்கும் அரிய இனிய** சுவை போல்வதாகும் என்பது, இப்பாடலின்கருத்து. **திருக்குறள் திருமந்திரம் திருமுறைகள் ஆகிய** நூல்களின் அடிப்படையும் கருத்தும் பிற**வும் ஆதாரமாகக்** கொண்டே, சிவஞானபோதம் என்னும் தத்துவத் தெளி பொருள் **நூல் உண்டாயிற்று** என்பதனை, இப்பாடல் உருவக முகத்தால் இனிது விளக்கு**கின்றது.**

**2.** 'வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தம்' என்று சிறப்பித்து ஓதியவர், **உமாபதி** சிவாச்சாரியர்.

புறச்சமயத் தவர்க்கிருளாய் அகச்சமயத் தொளியாய்
புகல் அளவைக் களவாகிப் பொற்பணிபோல் அபேதப்
பிறப்பிலதாய் இருள்வெளிபோல் பேதமும், சொற் பொருள்போல்
பேதாபே தமும் இன்றிப் பெருநூல் சொன்ன
அறத்தினுல் விளைவதாய், உடலுயிர்கண் அருக்கன்
அறிவொளிபோல் பிறிவரும்அத் துவிதம் ஆகும்
சிறப்பினதாய், வேதாந்தத் தெளிவாம் சைவ
சித்தாந்தத் திறன்இங்குத் தெரிக்கலுற்ரும்.

**புறம், புறப்புறம்,** அகப்புறம் என்னும் முக்கூற்றுப் புறச் சமயத்தவரும், சித்தாந்த சைவ**ரோடு ஒப்ப,** 'ஏகன் அனேகன் இருள் கருமம் மாயை இரண்டு' என்னும் ஆறு பொருள்**களும் கொள்ளாமையினல்,** அவ்வறுவகைப் பொருள்களின் இயல்பை உணர்த்தினும் **அவர்கள் உணர** மாட்டார் என்றற்கு, 'புறச்சமயத்தவர்க்கு இருளாய்' என்ருர்.

பாடாணவாத சைவர், பேதவாத சைவர், சிவசமவாத சைவர், சிவசங்கிராந்த **வாத சைவர்,** சிவாத்துவித சைவர் என்னும் அகச் சமயத்தவர், சித்தாந்த சைவரோடு **ஒப்ப ஆறு** பொருள்கள் உண்டு எனக் கொள்வராதலின், அவர்கள் அவற்றின் பொது**வியல்பு** சிறப்பியல்புகளை உணர்த்தினல் உணரும் திறம் உடையவராவர் என்றற்கு **'அகச் சமயத்து ஒளியாய்'** என்ருர். இவ்வகச் சமயத்தவரும் தாமே உணர்ந்து கொள்ள **மாட்டார் என்பது கருத்து.**

சைவ சித்தாந்தமானது பகுத்தறிவு நெறிக்குச் சிறிதும் மாறுபடாமல், தருக்க நெறிக்கு முழுவதும் இயையுமாறு தன் கொள்கைகளை, விளக்கிச் செல்வது என்னும் கருத்தில் 'புகல் அளவைக்கு அளவாகி' என்றார். தார்க்கிகர் முதலியோர் காட்சி முதலிய பிரமிதிக்குப் பொறி முதலியனவே பிரமாணம் என்பர். சிவஞானம் உணர்த்த உணர்வதாகிய ஆன்ம சிற்சத்தியே பிரமாணம் என்பது சைவ சித்தாந்தம்.

சைவ சித்தாந்தத்தின் எய்துதற்கு அருமை கூறுவார். ''பெருநூல் சொன்ன அறத்திறனால் விளைவதாய்'' என்றார். இஃது ஏனையோர் கூறும் பொருள் போலன்றிச் சிறந்தது என்பார், ''சிறப்பினதாய்'' என்றார்.

வேதாந்தமும் சித்தாந்தமும் வேறு என்பாரை மறுத்துப், பல பொருள் படும் சூத்திரத்தை அங்ஙனம் படாமல் தெளிவித்துக் கூறும் பாடியம்போல வேதாந்தத்தைத் தெளிவித்து உரைப்பதே சைவ சித்தாந்தம் என்பார், மகுடாகமம் முதலியவற்றுள் ஓதியவாறே 'வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தத் திறன்' என்றார். ஈண்டு வேதாந்தம் என்றது வேதத்தின் முடிபுகளாகிய உபநிடதங்களையே என்பது, சிவஞான சுவாமிகள் அருளிச் செய்த சிவஞான போத மாபாடிய விளக்கம்.

3. திருச்செந்தூர்ப் புராணம், முருகன் இன்னின்ன தலங்களில், இன்னின்ன பெயருடன் விளங்குகின்றான் எனப் பின்வருமாறு குறிப்பிடுகின்றது :-

1. இந்திர நீலம்—குமரன்
2. கனகலம்—சிவமாணுக்கன்
3. குமாரதாரை—பிரமசாரி
4. பழனிமலை—ஞானதேசிகன்
5. சுவாமிமலை—சுவாமிநாதன்
6. விகாரபட்டணம்—குமார மூர்த்தி
7. திருப்பரங்குன்றம்—நடனநாதர்
8. மங்கலக் குன்று—போக மோட்சத்தியாகி
9. பொதிகை—விசுவரூபன்.
10. தண்டகாரண்யம்—அருள் ராமன்
11. மகேந்திரம்—காமக்கடவுள்
12. சையமலை—அனந்தயோகி, யோக சுந்தரர், சுத்தயோகீசர், யோக வல்லபர்
13. திருக்குற்றாலமலை, இலஞ்சி — வரதராசர்
14. குமாரவனம்—சீகரக் கடவுள்.
15. சிருங்கிபேரபட்டணம்—குகச் சுவாமி, பேரானந்த நாயகன்
16. திருமுதுகுன்றம்—குருபரன், மாயாமய குமரன்
17. மூகாம்புரி—சகலலோக குரு
18. துங்கபத்திரை—ஞான தேசிகன்.

4. காஞ்சிபுரத்தில் உள்ள கோயில்களுள், ஸ்ரீ காமாட்சியம்மை கோயில் ''திசை மயக்கம்'' உடைய கோயிலாகும். கோயிலின் கருவறைக்குச் செல்ல நாம் பல திசைகளிலுள்ள பலவாயில்களைக் கடந்து செல்லவேண்டியிருத்தலின், காமாட்சியம்மையின் திருமுக மண்டலம் எந்தத்திசையை நோக்கி உள்ளது என்று பெரும்பாலோர் தெளிவாகக் கூற அறியார். ஆதலின் அதனைத் திசை மயக்கமுடைய கோயில் என்று குறிப்பிடலாம். ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டிருந்த இலக்கியங்களிலும் இது வரன்முறையே குறிப்பிடப் பெற்றுள்ளது.

அந்தம் இன்றி நல் அறம் புரிந்து அளிக்கும்
அன்னை தன்திருக் காமக் கோட்டத்தில்
வந்து சந்திர சூரியர் மீது
வழிக்கொளாது, அதன் மருங்குபோ தலினல்
சந்த மாதிரம் மயங்கி எம்மருங்கும்
சாயை மாறிய தன் திசைமயக்கம்
இந்த மா நிலத்தவ ரெல்லாம் காண
என்றும் உள்ளது ஒன்று இன்றும் அங்குளதால்

—பெரியபுராணம்

சமையம் ஆறினையும் தாய்என வளர்த்துச்
சராசர அணுக்கள் உய்ந்திடுவான்
அமைதரும் எண்நான்கு அறத்தினைப் போற்றி
ஆதி பீடத்தில் வீற்றிருக்கும்
உமையமர் காமக் கோட்டியைக் கதிரோன்
உடுபதி கணங்கள் சூழ்தரலால்
இமையவர் தமக்கும் திசைமயக்கு அருத
இயல்புடைத்து அந்நகர் என்றும். —கந்தபுராணம்.

5. 'பிஞ்ஞகன்' என்று சிவபெருமானுக்குப் பெயர். பிஞ்ஞகம் என்பது தலைக் கோலத்தைக் குறிக்கும். 'பிஞ்ஞகம் தலைக்கோலம்' என்பது திவாகர நிகண்டு. சிவ பெருமான் சடைமுடியும், அம்முடிமேல் அழகிய வெண் பிறையும், குளிர்ந்த கங்கை நீரும், உடையவராதல் பற்றிப் பிஞ்ஞகன் எனப்பட்டார். மெல்லின எழுத்துக்களை ஒலிப் பதற்கு இடமாகிய நாசியை (மூக்கை)ப் பெற்றதன் பயன், மெல்லின எழுத்துக்களாகிய பிஞ்ஞகன் முதலிய இறைவனின் திருப்பெயர்களை ஓதுதலே யாகும். பிஞ்ஞகன்என்னும் திருப்பெயரிலுள்ள மெல்லின எழுத்துக்களின் நல்லிசையைப் பொருந்த ஒலிக்காத மூக்கின் துளையை இழிந்த சாக்கடையின் துளை என்று சொல்வதா ? புற்று என்று சொல்வதா? அல்லது பசுமட் கலத்தில் துளை என்று சொல்வதா? என்று இராமலிங்க அடிகளார் குறிப்பிடுதல் காணலாம்.

"புல்லங் கணநீர்ப் புழைஎன்கோ? புற்றென்கோ?
சொல்லும் பசுமண் துளைஎன்கோ?—சொல்லுஞ்சீர்
வீயாத பிஞ்ஞகப்பேர் மெல்லினத்தின் நல்லிசைதான்
தோயாத நாசித் துளை" —சிவநேச வெண்பா,

இராமலிங்க அடிகளார்,

6. பரிவதி லீச னைப்பாடி,
விரிவது மேவ லுறுவீர்,
விரிவகை யின்றிநன் னீர்தூய்ப்,
புரிவது வும்புகை பூவே.

எனவரும் திருவாய்மொழிப் பாசுரத்திற்குப் பொருள் விரித்துரைத்து விளக்கிக்கொண்டு வரும்போது, 'புரிவதுவும் புகை பூவே' என்ற பகுதியை எடுத்துக்கொண்டு பட்டர்,

"இவ்விடத்தில் அகிற்புகை என்றோ, கருமுகைப்பூ என்றோ சிறப்பித்துச் சொல்லாமையால், ஏதேனும் ஒரு புகையும் ஏதேனும் ஒரு பூவும் எம்பெருமானுக்கு இட அமையும்; செதுகையிட்டுப் புகைக்கலாம். கண்டகாலிப் பூவும் சூட்டலாம்'' என்று சுவையாகச் சொற்பொழிவு நிகழ்த்தினராம். அதை நஞ்சீயர் கேட்டு, கண்டகாலிப் பூவை இறைவனுக்குச் சூட்டுதலாகாது என்று நூல்கள் விலக்கிக் கூறியிருக்க, இங்ஙனமும் தாங்கள் அருளிச் செய்யலாமோ? என வினவினர்.

அதற்கு பட்டர், ''நூல்கள் விலக்கி இருப்பது உண்மைதான். கண்டகாலிப்பூ இறைவனுக்கு விருப்பம் இல்லாதது என்ற காரணம்பற்றி நூல்கள் அதனை விலக்கவில்லை. அப்பூவைப் பறித்தால் அடியார்களின் கையில் முட்குத்துமே என்று அடியார்கள்பால் கொண்ட பரிவினுல் நூல்கள் அதனை விலக்கினவே யன்றி, இறைவனுக்கு விருப்பம் இல்லாதது, அவன் வெறுக்கும் பூ என்பது எதுவும் இல்லை'' என்று அருளிச் செய்தார். இதனுல் அவர் இறைவனின் சிறப்பியல்பையும், நூல்கள் கூறும் விதிகளின் கருத்து நுட்பத்தையும் அழகுற விளக்கியருளிய மாட்சிமை வியந்து போற்றற்பாலது.

7. நண்ணு அசுரர் நலிவெய்த, நல்லஅமரர் பொலிவெய்த
எண்ணு தனகள் எண்ணும் நன்முனிவர் இன்பம் தலைசிறப்ப,
பண்ணுர் பாடல் இன்கவிகள் யானுய்த் தன்னைத் தான்பாடித்
தென்னு என்னும் என்னம்மான் திருமாலிருஞ் சோலையானே.

என்னும் திருவாய் மொழிப் பாசுரத்தின் வியாக்கியானத்தில், நம்பிள்ளை என்னும் வைஷ்ணவப் பேராசிரியர் அருளிச் செய்திருக்கும் இனிய செய்தி யாவது :—

திருவரங்கம் பெரிய கோயிலில் கிருமிகண்ட சோழன் என்னும் சோழ அரசன் ஒருவன், திருமதில்களை இடித்துப் பாழ் செய்தான். அவனுக்குப் பின்னர்ப் பட்டம் சூடி அரசாட்சி செய்யப் போந்த அவனுடைய மகன், தன் தந்தை செய்த செயலைக் கேட்டு வருந்தி, ''அந்தோ! என் தந்தைகது இங்ஙனமும் ஒரு அறிவுகேடு நேர்ந்ததோ? ஒரு மதிலை இடித்துப் பாழ்செய்வதனுல்,வைஷ்ணவ சித்தாந்தம் குலைந்ததாய் விடுமோ? திருவாய்மொழி இராமாயணம் என்னும் இரண்டு பெரிய வலிய மதில்கள் வைஷ்ணவ சித்தாந்தத்துக்குப் பாதுகாப்பாக உண்டே! அவைகளை ஒருவர் அசைக்கப் போமோ? அவைகள் என்றென்றும் நின்று நிலைபெற்று, ஸ்ரீவைஷ்ணவ சித்தாந்தத்தைப் பரப்பி வளர்த்துப் போதரும் மாட்சிமை வாய்ந்தன என்னும் உண்மையை, எந்தையார் அறிந்திலரே!'' என்று கூறி வருந்தி நின்ருன்.

இவ்வரலாற்றுச் செய்தியைக் குறிப்பிட்டு, நம்பிள்ளை அவர்கள், ''நண்ணு அசுரர் நலிவெய்த நல்லஅமரர் பொலிவெய்த ஆய்த்துத் திருவாய்மொழிதான் அவதரித்தது. துதிக்கப்படுபவனுடைய அவதாரம் போலவே ஆயிற்று, துதியினுடைய அவதாரமும்'' என்று அருளிச் செய்துள்ளார். திருவாய்மொழியின் சிறப்பை விளக்கும் அரிய குறிப்புக்களுள், இது சிறப்புடையது ஒன்ருகும் என்பது நாம் உணர்ந்து மகிழ்தற்குரியது.

8. செல்வநம்பி என்பவர், பாண்டிநாட்டு அரசனை வல்லபதேவன் என்னும் அரசனுக்குப் புரோகிதராய் விளங்கியவர். பெரியாழ்வாரின் காலத்தில் வாழ்ந்திருந்தவர். திருமால் பக்தியில் மிகவும் தலை சிறந்தவர். திருக்கோட்டியூரில் அவதரித்தவர். பகவானுலும், பாகவதர்களாலும் பெரிதும் சிறப்பித்து அபிமானிக்கப் பெற்றவர்.

அல்வழக் கொன்றும்இல்லா அணிகோட்டியர்
கோன், அபிமான துங்கன்
செல்வனைப் போலத் திருமாலே! நானும்
உனக்குப் பழவடியேன்,
வல்வகையால் நமோநாராயணா என்று
நாமம் பல பரவி,
பல்வகையாலும் பவித்திரனே! உன்னைப்
பல்லாண்டு கூறுவனே.

நளிர்ந்த சீலன் நாயசலன் அபி
மானதுங்கனை, நாடோறும்
தெளிந்த செல்வனைச் சேவகங்கொண்ட
செங்கண்மால் திருக்கோட்டியூர்,
குளிர்ந்து உறைகின்ற கோவிந்தன் குணம்
பாடுவாருள்ள நாட்டினுள்
விளைந்த தானியமும் இராக்கதர்
மீது கொள்ள கிலார்களே.

என்னும் பாடல்களில், பெரியாழ்வார் செல்வ நம்பி என்னும் இந்த வைஷ்ணவ உத்தமரையே, பெரிதும் சிறந்தெடுத்துப் புகழ்ந்து போற்றியருளினர்.

6. ஸ்ரீ எம்பெருமானர் திரு அவதாரம் செய்தருளிய நாள், சித்திரை மாதம் திருவாதிரை நட்சத்திரமாகும். அந்நாளில், சங்கரர் பாஸ்கரர் யாதவப் பிரகாசர் குமாரிலபட்டர் பிரபாகரர் என்னும் ஆசாரியர்கள் பலரும் பரப்பிப் போந்த சமய வாதங்கள் மாய்ந்து, நான்மறைகள் வாழ்ந்தன. இனி நமக்குச் சிறப்பு இல்லை என்று கலியுக புருஷன் தளர்ச்சியுற்றான். நம்முடைய சுமை குறையும் என்று கவலை நீங்கி நிலமகள் மகிழ்ச்சியுற்றாள். ஆழ்வார்களும் ஆச்சாரியார்களும் தங்கள் நூல்களும் கொள்கைகளும் தழைத்தோங்கும் என்று மகிழ்ச்சி எய்தினர்கள். எல்லாத் திவ்ய தேசங்களும் சிறப்புக்கள் மிகுந்து வளர்ச்சியுறும் என்று அர்ச்சாவாதார மூர்த்திகள் குறை தீர்ந்து மகிழ்ந்தனர். இந்தக் கருத்தமைய மணவாள மாமுனிகள், ஸ்ரீஎம்பெருமானர் ஆகிய இராமாநுஜர் திருஅவதரித்த சித்திரைத் திருவாதிரை நாளைப் புகழ்ந்து போற்றுகின்றார்.

ஆழ்வார்கள் தாங்கள் அவதரித்த நாள்களிலும்
வாழ்வான நாள்நமக்கு மண்ணுலகீர்—ஏழ்பாரும்
உய்யஎதி ராசர் உதித்தருளும் சித்திரையில்
செய்ய திருவா திரை. —உபதேச ரத்தினமாலை.

சங்கர பாஸ்கர யாதவ பாட்ட பிரபாகரர் தங்கள் மதம்
சாய்வுற வாதியர் மாய்குவர் என்று சதுமறை வாழ்ந்திடு நாள்!
வெங்கலி இங்கினி வீறு நமக்கிலை என்று மிகத்தளர் நாள்!
மேதினி நம்சுமை ஆறுமெனத் துயர்விட்டு விளங்கிய நாள்!

மங்கையராளி பராங்குச முன்னவர் வாழ்வு முளைத்திடுநாள் !
மன்னிய தென்னரங்காபுரி மாமலை மற்றும் உவந்திடுநாள்!
செங்கயல் வாவிகள் சூழ் வயல்நாளும் சிறந்த பெரும்பூதூர்ச்
சீமான் இளையாழ்வார் வந்தருளியநாள் திருவாதிரை நாளே''
—ஆர்த்திப் பிரபந்தம்,
மணவாள மாமுனிகள்.

10. அறிவினால் குறைவில்லா அகல்ஞாலத் தவரறிய,
நெறியெல்லாம் எடுத்து உரைத்த நிறைஞானத்து ஒருமூர்த்தி,
குறியமாண் உருவாகிக் கொடுங்கோளால் நிலங்கொண்ட,
கிறியம்மான் கவராத கிளரொளியால் குறைவிலமே.

என்னும் திருவாய்மொழிப் பாசுரத்தில், ''அறிவினால் குறைவில்லா அகல் ஞாலத்தவர்'' என்னும் பகுதிக்குப் பெரியோர்கள் பணித்துள்ள பொருள் விளக்கம் மிக்க சிறப்பும் சுவையும் உடையதாகத் திகழ்கிறது. நம்போன்றோர் அத்தொடருக்குப் பொருள் காண்போமாயின், ''அறிவிலே குறைவு எதுவும் இன்றி நிரம்பியிருக்கின்ற விரிந்த உலகத்தில் உள்ள மக்கள்'' என்றாற் போலவே பொருள் கூற முற்படுவோம். ஆனால் இத்தகையதொரு பொருள் எத்தகைய சிறப்பும் சுவையுமின்றி இருப்பதுடன் ஆழ்வாரின் திருவுள்ளக் கருத்துக்குப் பொருந்துமாறும் இல்லை. ஆழ்வார் தம் திருவுள்ளத்திற் கருதிய பொருள் இதுவென்று உரையாசிரியர் சிறப்புற எடுத்து விளக்கியுள்ளார். உலகத்தில் உள்ள மக்கள் அனைவரும், தமக்குப் பொன்னில்லை பொருளில்லை மாடில்லை மனையில்லை புகழில்லை பதவியில்லை என்று இங்ஙனம் எல்லாம் வருந்துவரேயன்றித் தமக்கு அறிவில்லை என்று உணர்ந்து, அது குறித்து வருந்தி இறைவனை வேண்டுவார் எவருமிலர். அறிவில்லாதவரும் தம்மைப் பேரறிவுடையவராகவே மதித்து இறுமாந்து நடந்துகொள்வர். இஃது உலகத்தில் காணப்படும் இயல்பு. இதனை உரையாசிரியர் நுண்ணிதின் எடுத்துக் காட்டி விளக்கியிருக்கும் திறம், பொன்னினும் மணியினும் போற்றத் தகுந்த ஒரு சிறந்த உரை விளக்கமாகும். ''குறைவில்லா'' என்பதற்குக் குறை இல்லாத—நிரம்பி இருக்கின்ற என்றே நாம் பொருள் கூறுவோம். ஆனால், இத்தொடருக்குக் ''குறைப்பட்டு வருந்துதல் இல்லாத'' என்னும் கருத்தில் பொருள் செய்திருப்பது மிகவும் சிறந்த நயவுரை ஆகும்.

—ஆசிரியர்.

## செய்திச் சுருக்கம்

**திருப்புத்தூர்த் தமிழ்ச் சங்கம்**

குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனத்தைச் சேர்ந்த திருப்புத்தூர்த் திருத்தளிநாதர் கோயிலில் 18-5-67 அன்று திருப்புத்தூர்த் தமிழ்ச் சங்கம், 63 புலவர் பெருமக்களாகிய உறுப்பினர்களுடன் தொடங்கப் பெற்றது. தமிழையும் சித்தாந்த சைவத்தையும் பரப்பும் சிறந்த குறிக்கோள் கொண்டு, இத்தமிழ்ச் சங்கம் தொடங்கப் பெற்றுள்ளது.

**குருபூசை விழா**

மதுரைத் திருஞான சம்பந்த சுவாமிகள் ஆதீனத்தில் திருஞான சம்பந்தப் பெருமானின் குருபூசைப் பெருவிழா 22-5-67 முதல் 26-5-67 வரையில் மிகவும் சிறப்புற நடைபெற்றது.

# ஸ்ரீ ராமாயண ரஸப்ரவாஹம்

(மகாவித்வான் ஸ்ரீமத் பி. ப. அண்ணங்கராசாரிய சுவாமிகள், காஞ்சிபுரம்)

**முன்னுரை :**

ஸ்ரீ ராமாயண ரஸப்ரவாஹ மென்று பெயரிட்டு இதனை எழுதத் தொடங்குகின்றேன். ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தின் ஆரம்பம் எப்படி அமைந்திருக்கின்றது என்றால், தேவலோகத்திலிருந்து நாரத மகரிஷியானவர் நான்முகக் கடவுளின் நியமனத்தினால் வால்மீகி மகரிஷியின் ஆச்ரமத்திற்கு வந்து சேர, அந்த நாரதமுனிவரை வால்மீகி முனிவர் வணங்கி வழிபட்டு, "கோநு அஸ்மிந் ஸாம்ப்ரதம் லோகே குணவாந் கச்ச வீர்யவாந்?" என்று தொடங்கி ஒரு பதினாறு திருக்குணங்களைச் சொல்லி, இத்திருக்குணங்கள் அமைந்த ஒரு மனிதன் இப்போது இவ்வுளகிலுளனாயின் எனக்குச் சொல்லியருளவேணும்; உம்மிடத்தில் இதைக் கேட்டறிய எனக்கு மிகவும் ஆவலுள்ளது என்று விண்ணப்பம் செய்கிறார்;

அதன்மேல் அந்த நாரதமுனிவர் மிக மகிழ்ந்து விடைகூறத் தொடங்கி "இட்சுவாகு வம்சத்தில் பிறந்த ஸ்ரீராமன் என்ற திருநாமம் பெற்றவன் ஒருவனுளன்; அவன் உலகம் நிறைந்த புகழாளன்; அளவற்ற சக்தி வாய்ந்தவன்; அவனது திருக்குணங்கள் என்னால் எடுத்து உரைக்க முடியா; அவனே கோஸல்ராஜன் திருமகளான கௌசல்யா தேவியின் வயிற்றிற் பிறந்த தசரத புத்திரன்; கடல்போல் மகா கம்பீரன்; மகா வீரன்; மிக்க பொறுமையாளன்; ஸத்யசீலன்" என்றுரைத்து உடனே அவனது சரிதையையும் சுருக்கமாக உபதேசித்து முடிக்கிறார். பிறகு தம்மிடம் நேராக வந்த நான்முகக் கடவுளின் அநுக்கிரகத்தையும் பெற்று வான்மீகி முனிவர் இராமாயணத்தை இயற்றி முடித்தார் என்பதாக ஆரம்பத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

நாரதமுனிவரை நோக்கி வான்மீகி முனிவர் கேட்ட திருக்குணங்கள் எண்ணிக்கையில் பதினாறாக அமைந்திருப்பதனால் "ஸ்ரீராமசந்திரன்" என்று சந்திரனாகக் கூறப்படுகின்றவனுடைய பதினாறு கலைகளோ இவை: எனலாம்படி யுள்ளன அத்திருக்குணங்கள். அந்தப் பதினாறு திருக்குணங்களை விவரித்து அவற்றிலேயே இராமாயண கதை முழுவதும் அடங்கியுள்ளதென்று நிரூபணம் செய்யவே இப்போது முன் வருகின்றேன்.

வான்மீகி முனிவர் நாரத முனிவரிடம் உபதேசங்கேட்ட பிறகே இராமனைத் தெரிந்து கொண்டாரென்று சொல்வதற்கில்லை. முன்னமே அவர் ஸ்ரீராம மந்திரத்தை இடைவிடாது அநுஸந்தானம் செய்து கொண்டிருந்தவரென்றும், நான்முகன் தன்னுலகில் சதகோடி ப்ரவிஸ்தரமானதொரு ராமாயணத்தை இயற்றி நாரதர் முதலிய முனிவர்களுக்கு அதை ப்ரவசனஞ்செய்து, ராமபக்தரான வான்மீகி முனிவரைக் கொண்டு இந்நிலவுலகத்திலும் ஸ்ரீராம கதையைச் சுருக்கமாக ப்ரவர்த்தனம் செய்வதற்காக வான்மீகியின் ஆச்ரமத்திற்கு நாரதரை அனுப்பினனென்றும் வரலாறு காண்பதனால், நாரத முனிவரை நோக்கி வான்மீகி முனிவர் விண்ணப்பம் செய்த திருக்குணங்களானவை இராமபிரானது சரிதைகளில் தேறிய குணங்களே யன்றி வேறல்லவென்பது நன்கு அறியத்தக்கது.

பகவான் இராமனாக இந்நிலவுலகில் திருவவதாரம் செய்தருளினது தன்னுடைய திருக்குணங்களை வெளியிடுவதற்காகவே யென்றும், ராவண ஸம்ஹாரம் முதலியவை வியாஜமாத்திரமான பிரயோஜனங்களென்றும் தத்துவமுள்ளது. இதனை பட்டரென்னும் பேராசிரியர் "குணபரீவாஹாத்மநாம் ஜந்மநாம்" என்கிற ஸ்ரீசூக்தியினால் வெளியிட்டருளினார்.

ஆகவே ஸ்ரீ ராமாயணத் தொடக்கத்தில் வான்மீகி முனிவர் கூறுகின்ற பதினாறு திருக்குணங்களில் இராமபிரானது சரிதை முழுவதும் அடங்கியுள்ளதென்றும், அந்தச் சரிதையை அவர் அல்லும் பகலும் மனனம் செய்து கொண்டிருந்த படியினாலேயே அந்தத் திருக்குணங்கள் அவருடைய இருதயத்தில் ஊறிக் கிடந்தன என்றும், அவற்றையே அவர் வாய்வெருவினாரென்றும் தெரிய வருகிறது. அந்தப் பதினாறு திருக்குணங்களையும் வரிசையாக விவரித்து, ஒவ்வொன்றிலும் அநுஸந்திக்கப் படவேண்டிய சரிதைகளையும் ஈண்டு விவரிக்க விரும்புகிறேன்.

1. கோ குணவாந் ?

குணவான் என்பதற்கு சீலகுணவான் என்பதே பொருள். க: குணவாந்? என்பது முதற்கேள்வி. சிறந்த குணங்களையுடையவன் யாவன்? என்று பொதுவாய்க் கேட்பதாகச் சிலர் இதற்குப் பொருள் கொள்வர். அப்படியன்று; சிறப்பாக ஒவ்வொரு குணத்தையும் எடுத்துக் கூறுமிந்த பிரகரணத்தில் குணவாந் என்கிற இதுவும் குறிப்பிட்டவொரு குணத்தைக் கூறுவதேயன்றி, பொதுவாக, 'நல்ல குணங்களை உடையவன் யாவன்?' எனறு கேட்கிற படியன்று.

ஆளவந்தார் தம்முடைய ஸ்தோத்ர ரத்நத்தில் எம்பெருமானுடைய பல திருக்குணங்களை அமைத்து ஒரு சுலோகம் அருளிச் செய்துள்ளார்; அது 'வசீ வதாந்ய:' என்கிற பதினெட்டாவது சுலோகம். அதில் "வசீ, வதாந்ய:" என்று இரண்டு குணங்களைக் கூறி, அதன் பிறகு ருஜு: சுசி: என்று தொடங்கிப் பத்தெட்டு குணங்களைக் கூறி, முடிவில் "ஸமஸ்தகல்யாண குணும் ருதோததி:" என்று கூறப்பட்டுள்ளது. இதனால் இந்த சுலோகத்தில் மூன்றாவது சொல்லாக உள்ள குணவாந் என்பதற்கு (முன்னும் பின்னும் சொல்லப்பட்ட விசேஷ குணங்கள் போலவே) ஒரு விசேஷ குணமே பொருளாகக் கொள்ளப்பட வேண்டும் என்பது தேறி நின்றது.

சில குணத்தின் தன்மையை நிருபித்தல் :

அந்தக் குணம் எதுவென்னில்; செளசீல்ய குணமென்று பூருவாசாரியர்கள் திருவுள்ளம் பற்றியுள்ளார்கள். தன் மேன்மை பாராமல் தாழ்ந்தவர்களோடும் புரையறக் கலந்து பரிமாறும் சீல குணத்திற்கே செளசீல்ய மென்று மறுபெயர்; எல்லாக் குணங்களிற் காட்டிலும் இக்குணம் மிகச் சிறந்ததாதலால் இதற்குக் குணம் என்றேசிறப்புப் பெயர் கொடுக்கப்பட்டது. ப்ரக்ருதம் வான்மீகியின் வினாவில் கோ குணவாந்? என்றுள்ளதானது, சீலகுணமுடையவன் யாவன்? (அதாவது) தன் மேன்மையைச் சிறிதும் கணிசியாமல் தாழ்ந்தவர்களோடும் கலந்து பரிமாறுகின்றவன் யாவன்? என்று கேள்வி கேட்டபடியாகின்றது. இத் திருக்குணத்திற்குச் சேர நாம் அநுஸந்திக்கக் கூடிய ஸ்ரீராம சரிதைகளைக் கேண்மின்.

அவதாரமே சீலகுணத்தை விளக்குகின்றதென்பது :

ஸ்ரீமந் நாராயணமூர்த்தி இராமபிரானாக இந்நிலவுலகில் திருவவதரித்தார் என்கிற விதுவே சீலகுணத்தில் பரீவாகமாகவுள்ளது. கூரத்தாழ்வான் அதிமாநுஷஸ்தவத்தில் பத்தாவது சுலோகம் 'சீல: க ஏஷ தவ ஹந்த' என்று தொடங்குகின்றார். அந்தோ! இது என்ன சீலகுணம்; இதை எடுத்துப் பேச யாரால் முடியும்? என்கிறார்; அந்த சீல குணத்தை எதுகொண்டு நிருபிக்கிறாரென்னில், 'அத்ராவதீர்ய நநு லோசநகோசரோபூ: என்பதே அந்தச் சுலோகத்தில் உயிரான வார்த்தை. கட்கிலியான எம்பெருமான் ஆஸுர ப்ரக்ருதிகளிடையே வந்து அவர்களுடைய கட்புல

னுக்கு இலக்காகித் திருவவதரித்தான் என்பதை நினைக்கும்போதே 'அந்தோ! இது என்ன சீலம்! குணமறிந்து உகக்கமாட்டாதே எதிரம்பு கோப்பதும் செய்யாநின்ற அரக்கர் அசுரர் போன்ற மனிசரிடையே வந்து பிறக்கும்படியான இந்த சீல குணத்தை என்னவென்று சொல்லுவது?' என்று உருகுகின்றார் கூரத்தாழ்வான் 'பிறந்தவாறும்' என்று சொல்லி ஆழ்வார் ஆறுமாதம் மோகித்திருக்கும் படியான பகவானது திருவவதாரத்தை நினைத்தவாறே 'இது என்ன சீலகுணம்!' என்று உருகவேண்டியது தவிர வேறில்லையே.

**அவதாரம் என்ற சொல்லின் பொருள் விளக்கம் :**

அவதாரம் என்ற வடசொல்லுக்கு மேலிருந்துகீழேயிறங்குவதுஎன்றுபொருள்.பரமபத மாகிய மேல் நிலத்திலிருந்து நிலவுலகமாகிய கீழ் நிலத்திற்கு வந்தானென்பதை அவதார சப்தார்த்தமாக நினைக்க வேண்டா. மேலான தனது நிலைமைகளை விட்டிட்டுக் கீழான நிலைமைகளை ஏற்றுக் கொண்டதே அவதாரமெனப்படுகிறது. ஒருவர் கண்ணுக்கும் புலப்படாதவன், எல்லாவிடங்களிலுமுளன், எல்லாக் காலத்திலுமுளன், எல்லாப் பொருள்களாகவுமுளன் என்கிற இவை பகவானுடைய மேலான நிலைமைகள். இத்தகைய நிலைமைகளை அறவே விட்டிட்டு, இவற்றிற்கு எதிரிடையான தாழ்ந்த நிலைமைகளை ஏற்றுக் கொண்டல்லவோ பகவான் வந்து பிறந்தருளிற்று!

**உயர்ந்த நிலைமையும் தாழ்ந்த நிலைமையும் :**

ஒருவர் கண்ணுக்கும் புலப்படாதிருந்தவன் அரக்கரசுரர் போல்வார் கண்ணுக்கும் புலப்பட்டான்; எல்லாவிடங்களிலும் உளனானவன் 'இப்போது அயோத்தியிலுளன், இப்போது சித்திரகூடத்திலுளன், இப்போது கடற்கரையிலுளன், என்னும் படியாகி, ஓரிடத்திலிருக்கும்போது மற்றோரிடத்தில் இலன் என்று நினைக்கும்படியாயினன். எக்காலத்திலுமுளனானவன் ஒரு குறிப்பிட்ட காலத்திலேயே இராமனாகப் போயினன். 'நீராய் நிலனாய்த் தீயாய்க் காலாய் நெடுவானாய்ச் சீரார் சுடர்களிரண்டாய்ச் சிவனாயயனாய்' 'தாயாய்த் தந்தையாய் மக்களாய் மற்றுமாய் முற்றுமாய்' என்று ஆழ்வார்கள் அநுஸந்திக்கிறபடி எல்லாப் பொருள்களுமாகவுளனானவன் இராமன் என்கிறவொரு பெயர்க்கு மாத்திரம் பொருளாக விருந்தனன். ஆக இங்ஙனமே உயர்ந்த நிலைமைகளை விட்டுத் தாழ்ந்த நிலைமைகளை ஏறிட்டுக் கொண்டு வந்து பிறந்தவாறு என்னே! என்று ஈடுபடும்படியாக்குகின்றது சீலகுணம்.

**குகப்பெருமானிடம் காட்டிய சீலகுணம் :**

இராம பிரானுடைய சீலகுணத்திற்கு விசேஷித்த இலக்கு குஹப் பெருமாள் போல்வார். திருமங்கையாழ்வார் தமது பெரியதிருமொழியில் [5-8-1] 'ஏழையேதலன் கீழ்மகனென்னாதிரங்கி' என்று தொடங்கிப் பேசின பாசுரத்தில் இந்த சீல குணம் மிக அற்புதமாக அனுபவிககப்பட்டிருக்கின்றது. கங்கையின் ஓடங்கட்குத் தலைவனும் கங்கைக் கரையிலுள்ள சருங்கிபேரபுரத்திற்கு அதிபதியுமாகிய ஒரு வேடர் தலைவன் குகனென்பவன். இவனிடத்திற்கு இராமபிரான் பிராட்டியோடும் இளையவனோடும் எழுந்தருளியபொழுது இவன் அப்பிரானுடைய வடிவழகிலீடுபட்டுப் பரிந்து திருமேனிக்காவல் செய்த விதம் வெகு ஆச்சரியமானது. (அது ஸ்ரீவசநபூஷணம் 247 சூர்ணையில் காணத்தக்கது.)

பெருமான் ச்ருங்கிபேரபுரத்திலே எழுந்தருளி இளையபெருமாள் பாங்காக அமைத்த பர்ணசயனத்தில் பிராட்டியோடு பள்ளி கொண்டருளா நிற்க,இச்சேர்த்திக்கு என்ன தீங்கு விளையுமோ என்று அதிசங்கை கொண்ட இளையபெருமாள் முதுகிலிட்ட அம்பருத் தூணியும் கையிற் பிடித்த வில்லுமாய் 'நடையாடும் மதில்போலே' உலாவிக் கொண்டு நிற்க, இதைக் கண்ட குகப்பெருமாள் 'ஒரு தம்பி தாயைக் கொண்டு பெருமானை நாட்டிலிருந்து காட்டிலே துரத்தினான்; இத்தம்பி தனியிடத்திலே என்செய்யப் பார்க்கிறானோ' என்று அவ்விளைய பெருமாளிடத்திலும் அதிசங்கை கொண்டு 'இவன் அப்படி ஏதேனுமொரு தீங்கு செய்யில் இவனையே முடித்துவிடுவது' என்று தானும் வில்லும் அம்பு

மாய்க்கொண்டு நின்றதாக ஸ்ரீராமாயணத்திற் காண்கிறது. ஆனால், இது எந்த சமயத்தில் நடந்ததோ அந்த சமயத்தில் வான்மீகியால் சொல்லப்படவில்லை. பிறகு பரதாழ்வான் சித்திரகூடம் செல்லப் புறப்பட்டு வருமளவில் அப்பரதனோடு குகன் இதைச் சொல்லுவதாக அமைக்கப்பட்டுள்ளது. (அயோத்தியா காண்டம் 87—ஆவது சர்க்கம் 23, 24 சுலோகங்கள் காண்க).

தொட்டிற் பருவமே பிடித்து இராமபிரான்மீது அளவு கடந்த அன்பு கொண்டிருக்கின்ற இளையபெருமாள்மேலும் அதிசங்கை தோன்றிப் பெருமாளிடத்தில் பரிவு காட்டின இக்குகனுடைய அன்பை என்னவென்று சொல்லுவது! இவனுக்கு இவ்வளவான அன்பு இருந்தது பற்றியே பெருமாள் இவனிடத்தில் முதன் முதலாகத் தம்முடைய சீலகுணத்தைக் காட்டியருளினர்.

(தொடரும்)

## செய்திச் சுருக்கம்

**சைவசித்தாந்த வகுப்பு :**

திருக்கயிலாய பரம்பரை மெய்கண்ட தேவர் சந்தான ஞானபீடம் காஞ்சி தொண்ட மண்டல ஆதீன மடாலயத்தில், ஷை ஆதீனப் புலவர் திரு. நா. ப. தணிகையரசு அவர்களின் முயற்சியில், ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களால், திருவுந்தியார், திருக்களிற்றுப் படியார் என்னும் சைவ சித்தாந்த நூல்கள் இரண்டும், 14-5-67 முதல் 27-5-67 முடிய வகுப்பு முறையில் கற்பித்தருளப் பெற்றன. அன்பர்கள் பலர் திரளாக வந்து கற்றுப் பயன் பெற்றனர்.

**ஆண்டு விழா:**

பூவாளூர்ச் சைவ சித்தாந்த சங்கத்தின் 57-ஆவது ஆண்டு விழா, மேலையூர் சிவராஜயோக மடத்துத் தலைவர் தவத்திரு. மாணிக்க வாசக ஞான தேசிக சுவாமிகள் அவர்களின் சீரிய தலைமையில் நடைபெற்றது.

**திருமுறைத் திருவிழா :**

திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம், ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள் நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் நிறுவி யருளிய அறக்கட்டளைகளின்படி தில்லையில் 4-6-67 முதல் 12-6-67 வரை அறிஞர்கள் பலரால் பெரிய புராண விரிவுரைகளும், திருநாரையூரில் 11-6-67 அன்று திருமுறைத் திருவிழாவும் சிறப்புற நடைபெற்றன.

**திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு :**

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம் ஸ்ரீ ஞானம்பிகை சமேத ஸ்ரீஞானபுரீசுவர சுவாமி கோயிற் பெருவிழாவை ஒட்டி 20-5-67 முதல் 30-5-67 முடிய மிகவும் சிறப்புற நடைபெற்றது. திருமதி. சிவானந்த விஜயலட்சுமி, திருமுருக கிருபானந்த வாரியார், மதுரை ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள், காஞ்சிபுரம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள், குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணசல தேசிக பரமாசாரிய சுவாமிகள் முதலிய பெருமக்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

**திருப்பணிக் கூட்டம் :**

வடதிருமுல்லைவாயில் ஸ்ரீ மாசிலாமணி ஈசுவரர் கோயிலின் திருப்பணிக்குழுவை விரிவாக்கவும், திருப்பணிக் குழுத் திட்டங்களை ஆராயவும் 4.6.67 அன்று நடைபெற்றது. அறநிலைய ஆணையர் திரு. மா. சே. சாரங்கபாணி முதலியார் அவர்களும், துணை ஆணையர் திரு. ஏ. சிதம்பரம் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# சமரசம்

திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்

சமரசம் என்றால் சிறந்த ஞானிகளின் திருவுள்ளத்தில் எழுந்த சம நோக்கு என்பது ஆகும். சமரசம் என்றால் எல்லாப் பொருள்களும் ஒன்று என்பது பொருளன்று. எல்லாப் பொருள்களும் ஒரு போதும் ஒன்றாகமாட்டா. பொருள்களில் ஏற்றத் தாழ்வு எக்காலத்திலும் எவ்விடத்திலும் உண்டு. மேடு பள்ளம், அறிஞன் மூடன், சந்தனம் சாணம், தட்பம் வெப்பம், மேல் கீழ், நன்மை தீமை இப்படிப் பொருள்களில் வேற்றுமையுண்டு.

இந்த வேற்றுமை, அருள் பழுத்த மெய்ஞ்ஞானிகளுக்குத் தோன்றுவதில்லை. அவர்கட்கு எல்லாம் ஒன்றாகவே தோன்றும். இதற்கு ஒரு உவமை கூறுகின்றேன்.

பழநி மலைக்கு ஒருவன் சென்றான்; அடிவாரத்தில் சிறிய பெரிய வீடு, ஓரடுக்கு மாடி, ஈரடுக்கு மாடி, மூன்றடுக்கு மாடிகள் இருக்கின்றன. நிலத்தில் நின்று பார்த்தால் வீடுகளில் ஏற்றத் தாழ்வுகள் காணப்படுகின்றன. மலையேறிப் பார்க்கின்றான். அப்போது அவன் கண்களுக்கு எல்லாம் ஒரே சமமாகக் காட்சி தருகின்றன. வீடுகள் எல்லாம் ஒன்றாகிவிடவில்லை. மலைமீது ஏறி உயர்ந்தவனுக்கு ஒன்றாகித் தோன்றுகின்றன.

நிலத்தில் நடப்பவனுக்கு மேடு பள்ளம் தோன்றுகின்றன. விமானத்தில் பறந்து போகிறவனுக்கு நிலத்தில் மேடு பள்ளம் தோன்றுவதில்லை. எனவே நிலத்தில் பள்ளம் உண்டுதான். மேலே உயர்ந்து பறக்கின்றவனுக்கு மேடு பள்ளம் மறைந்து ஒன்றுபோல் தோன்றுகின்றன.

இதுபோல் தம்மைத் தாமே உயர்த்திக் கொண்ட தவ ஞானிகட்கு, உலகில் உள்ள வேற்றுமைகள் மறைந்து ஒழிகின்றன. எல்லாம் சமமாகக் காட்சி தருகின்றன.

ஞானிகட்கு நிந்திக்கின்றவனும் வந்திக்கின்றவனும், ஏழையும் செல்வந்தனும், சந்தனமும் சாணமும், நீற்றறையும் தாமரைத் தடாகமும், இரத்தின மணிகளும் பருக்கைக் கற்களும், கற்கண்டும் எட்டிப் பழமும் ஒன்றாகி விடுகின்றன.

ஞான மலைமீது நிற்கும் அருளாளர்க்கு அவைகள் ஒன்றாகி விடுகின்றன என்று நாம் உணர்தல் வேண்டும்.

> "கேடும் ஆக்கமும் கெட்ட திருவினர்
> ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்"

என்ற பெரிய புராணத் திருவாக்கை உற்று நோக்குங்கள்.

மற்றொரு உவமையும் கூறுகின்றேன். ஒரு தாய்க்கு நான்கு மக்கள். மூத்தவன் நன்றாகப் படித்துக் கலெக்டர் உத்தியோகம் பார்க்கிறான். அந்த மாவட்டத்துக்கே தலைவனாகி மாதம் ஒன்றுக்கு இரண்டாயிரம் ரூபாய் ஊதியம் பெறுகிறான்.

இரண்டாவது மகன் படியாத தடிமாடாகத் திரிந்து, தக்க சிபார்சு செய்யப் பில் கலெக்டர் வேலை பார்க்கிறான். மாதம் அறுபது ரூபா ஊதியம் பெறுகின்றான். மூன்றாவது மகன் சிறு கடை வைத்துச் சிறிய வருவாய் பெறுகின்றான். நாலாவது மகன் திருடு சூது வாது வஞ்சனை பொய் முதலிய அணிகலன்களை யணிந்து கடும் வெய்யிலில் கை வண்டியிழுத்துப் பிழைக்கிறான். இந்த நால்வர்களில் எத்தனை வேற்றுமை! சங்கராந்தி, தீபாவளி முதலிய நன்னாள்களில் நால்வரும் தாயாரிடம் வந்தார்கள். பெற்ற தாய் கலெக்டரையும், கடைக்காரனையும், கைவண்டி யிழுப்பவனையும் ஒன்றுபோல் அன்பினால் நோக்கி, ஒன்றாக அமர்த்தி ஒன்றுபோல் அன்னம் படைத்து நெய் விட்டு உபசரிக்கின்றாள். அந்த நால்வர்களும் ஒன்றாகிவிடவில்லை. நிரம்ப அவர்களுக்குள் பெருமை சிறுமையிருக்கின்றன. ஆனால் கருணையுள்ளம் படைத்த அன்னை ஒன்றாகச் சமரசமாக அருள் புரிகின்றாள். கலெக்டரை மேஜைமீது அமர்த்தியும், பில் கலெக்டரைத் தரையில் அமர்த்தியும், வியாபாரியை நடையில் வைத்தும், கை வண்டி யிழுக்கும் கடைசி மகனைத் தெருத் திண்ணைமேல் வைத்துமா அன்னம் படைக்

கின்றாள்? கலெக்டருக்கு நான்கு கரண்டி நெய்; பில் கலெக்டருக்கு ஒரு கரண்டி நெய், வியாபாரம் புரியும் மகனுக்கு ஒன்றரைக் கரண்டி நெய், கைவண்டி யிழுக்கும் பிள்ளைக்குக் கால்கரண்டி நெய்யா விடுகின்றாள்? இல்லை; இல்லை. எல்லோரையும் சமாசமாகப் பார்த்து ஒன்றுபோல் நெய் விடுகின்றாள் அன்னை.

இதுபோல் அன்னையினும் தயவுடைய அருளாளர்கட்கு இவன் கீழ்க்குலத்தான்; இவன் மேற்குலத்தான்; இவன் கற்றவன்; இவன் கல்லாதவன்; இவன் வறியவன், இவன் தனவந்தன்; இவன் நல்லவன்; இவன் தீயவன் என்ற பேத ஞானம்போய் எல்லாம் ஒன்று என்ற அபேத ஞானம் எய்துகின்றது.

படக்காட்சி, கடற்காட்சி, வனக்காட்சி, நந்தவனக்காட்சி, மலைக் காட்சி, பொருட் காட்சி என்று பல காட்சிகள் உண்டு. அருட்காட்சியுடையவர்கள் எல்லாவற்றையும் ஒன்றாகக் கண்டு மகிழ்கின்றார்கள். இதனை ஔவைப் பிராட்டியார்,

"ஒன்றாகக் காண்பதுவே காட்சி"

என்கின்றார்.

அருள் ஞானிகட்குச் சாதிவேற்றுமை, சமய வேற்றுமை, நிற வேற்றுமை, மொழி வேற்றுமை முதலிய சகல வேற்றுமைகளும் தோன்றமாட்டா. ஒரே சமரச ஞானம் தோன்ற அகில உலகங்களையும் ஒன்றாகக் காண்பார்கள்.

அருணகிரிநாத சுவாமிகள் சிவ யோகத்தைப் பற்றித் தெளிவாக ஒரு திருப்புகழில் கூறியிருக்கின்றார்.

சுவாமிகள் அருளிச் செய்தது பதினாறாயிரம் பாடல்கள். இப்போது கிடைத்திருப்பது ஆயிரத்து முந்நூற்றுப் பதினொன்று; இந்தப் பாடல்களில் அடியில் வரும் அமுதப் பாடல் மிகஉயர்ந்தது. சிவயோகத்தை மிகத் தெளிவாகக் கூறுகின்றார் இப் பாடலில்.

"ஐந்து பூதமும் ஆறு சமயமும்
மந்த்ர வேத புராண கலைகளும்
ஐம்பதோர் வித மான லிபிகளும் வெகுரூப
அண்ட ராதி சராச ரமும் உயர்
புண்டரீகனும் மேக நிறவனும்
அந்தி போலுரு வானும் நிலவொடு
வெயில்காலும்
சந்த்ர சூரியர் தாமும் அசபையும்
விந்து நாதமும் ஏகவடிவம் அ
தன்சொரூபம தாக வுறைவது சிவயோகம்"

மண் கடினமானது; புல் தட்பமானது; கனல் வெப்பமானது; அப்படி மாறுபட்ட ஐம்பெரும் பூதங்களும் ஞானிகட்கு ஒன்றாகத் தோன்றும்.

சைவம், வைணவம், காணபத்யம், கௌமாரம், சாக்தேயம், சௌரம் என்ற ஆறு சமயங்களும் அவர்கட்கு ஒன்றாகத் தோன்றும்.

ஏழுகோடி மந்திரங்களும், பதினெட்டுப் புராணங்களும், அறுபத்து நான்கு கலை ஞானங்களும், அகாராதி க்ஷகாராந்தமாக அமைந்துள்ள ஐம்பத்தொரு அட்சரங்களும், பற்பல வடிவங்களுடன் கூடிய தேவர் மனிதர் விலங்கு பறவை ஊர்வன முதலிய அசைகின்ற உயிர்களும், செடி கொடி மரம் மலை முதலிய அசையாத உயிர்களும், பிரமனுந் திருமாலும், உருத்திரனும், குளிர்ந்த சந்திரனும், வெப்பமான சூரியனும், அஜபா நலமும் ஆகிய அனைத்தும் ஒன்றாகக் கண்டு அருள் வெளியிலே சலனமற்று நிற்கும் ஞான நிலையே சிவ யோகம் எனப்படும்.

"கண்டாருங் கிடையாது விண்டாருஞ்
சொன்னதில்லை
அண்டரண்ட கோடி யெல்லாம் ஒன்றாய்ச் சமைந்
திருக்கும் அல்லவோ?"

இதை எழுதுவதோ--பேசுவதோ ஐயோ மெத்தக் கடினம் என்று கூறுகின்றார் கோபாலகிஷ்ண பாரதியார்.

சிவஞானிகட்குக் குற்றம் குணம் எல்லாம் சிவமாகவே தோன்றும்.

குற்றம்நீ குணங்கள்நீ கூடலால வாயிலாய்
சுற்றம்நீ பிரானுநீ தொடர்ந்திலங்கு சோதிநீ
கற்றநூல் கருத்தும்நீ அருத்தம் இன்பம் என்றிவை
முற்றும்நீ புகழ்ந்துமுன் உரைப்பதென் முகம்மனே.

என்று அருளிச் செய்கின்றார் திருஞான சம்பந்தர்.

இராமருடைய அருட்பார்வை பெற்று அறியாமை நீங்கப் பெற்று உணர்வு பெற்ற வாலி கூறுகின்றான்.

ஏவுகூர் வாளியால் எய்து நாயடியனேன்
ஆவிபோம் வேலைவாய் அறிவு தந்து அருளினாய்
மூவர்நீ முதல்வன்நீ மற்றும்நீ மற்றும்நீ
பாவம்நீ தருமம்நீ பகையுநீ உறவுநீ

எனவே இறையருளால் திருவருள் ஞானம் பெற்ற ஆன்றோர்கள் எல்லாவற்றையும் ஒன்றாக வைத்துப் பார்க்கின்றார்கள்.

**இதுவே சமரசம் எனப்பெறும். எங்கும் சமரச ஞானம் ஓங்குக.**

# சைவ சமயம்

தொன்று தொட்டே தமிழ்நாட்டில்
    தோன்றி, மிகவும் சிறப்பினதாய்
நின்று நிலவி வழங்கிவரும்
    நிகரில் பழைய பெருஞ்சமயம்![1]
இன்றை உலகில் அறிவியலார்
    இன்னும் காண்டற்கு இயலாத
ஒன்றை யல்ல உண்மைபல
    உணர்த்தி நிற்கும் அருஞ்சமயம்![2] (1)

சிந்து வெளியின் நாகரிகம்
    சிறக்க விளக்கும் செழுஞ்சமயம்![3]
இந்த உலகிற் பிறசமயம்
    எதற்கும் இல்லாப் பலநலங்கள்
சிந்தை மகிழக் கண்டுணர்ந்து
    சிறந்த சான்றோர் புகழ்சமயம்!
அந்த மிலாநற் பெருநோக்கால்
    அனைத்தும் தழுவும் அருட்சமயம்! (2)

உலகம் முழுதும் ஒருகாலத்
    துலவிப் பரந்து வளர்ந்தோங்கி,[4]
அலகில் பெருமைத் தமிழ்மொழியோடு
    அறிவிற் சிறந்த தமிழர்களின்

---

1. "The Saiva siddhanta system is the most elaborate, influential, and undoubtedly the most intrinsically valuable of all the religions of India. It is peculiarly the South-Indian and Tamil Religion. Saivism is the old pre-historic religion of South India, essentially existing from Pre-Aryan times, and holds sway over the hearts of the Tamil people.

—Dr. G. U. Pope.

2. "The recent developments of Western philosophy and physical science go every inch to prove the truth and value of all the fundamental doctrines that are peculiar only to Saiva Siddhanta but not to any other religion or philosophy, ancient or modern."

– Maraimalai Adikal.

3. "Among the many revelations that Mohenjodaro and Harappa have had in store for us, none perhaps is more remarkable than this discovery that Saivism has a history going back to the chalco-lithic age or perhaps even further still and that it thus takes its place as the most ancient living faith in the world."

—Sir John Marshall.

4. "The practice of Linga-worship was so general as to have spread itself over a large part of the habitable globe, for it flourished for many ages in Egypt and Syria, Persia, Asia Minor, Greece and Italy. It still is in vigour in India and many parts of Africa and was even found in America on its discovery by the Spaniards, being regarded as the most sacred object of worship and consecrated by religion. The culture was associated with the very idea and sentiment which was regarded as ennobling to man."

—H. M. Westrop.

கலைகள் குணங்கள் நாகரிகம்,
　　கருதும் மாட்சி முதலவெலாம்
நிலவச் செய்த பெருஞ்சீர்த்தி
　　நிலையின் மிக்க நீள்சமயம்! (3)

சங்க காலத் தமிழ்நெறிதான்
　　தளர்ந்து பெரிதும் தடுமாறி
மங்கு நிலைமை எய்தியக்கால்,
　　மாண்போடு அதனை வளர்த்துஅளிக்கத்
துங்க நால்வர் பெருமக்கள்
　　தோன்றி, நாட்டிற் புத்துணர்ச்சி
பொங்கி வழியத் தொண்டாற்றிப்
　　போற்றிக் காத்த பொருட்சமயம்! (4)

சிவம்தான் தூய தமிழ்ச்சொல்லே;
　　செம்மை என்னும் சொல்லடியா
உவந்து தோன்றி வழங்குவதாம்;
　　உண்மை இதனைத் தெளிந்துணர்க!
நயந்து சைவ நன்னெறியை
　　நல்ல தமிழர் நெறிஎன்றே[5]
வியந்து மகிழ்க! என அறிஞர்
　　விளக்கித் தேற்றும் மெய்ச்சமயம்! (5)

அற்பு தங்கள் அருட்செயல்கள்
　　யாரும் காணப் பலஇயற்றிப்
பொற்பு மிகுநற் பெருங்குரவர்
　　புனித நால்வர் பெருமக்கள்
உற்று மிகஇஞ் ஞாலமெலாம்
　　ஓங்கிப் பரவுக எனத்தங்கள்
நற்பண் பாம்பே ரிரக்கத்தால்
　　நமக்கா வளர்த்த நறுஞ்சமயம்! (6)

ஒருநன் மொழியும் ஒருநாடும்
　　உடைய தாகாத் தெய்வநலம்
மருவிப் பலவாம் நூல்வளங்கள்
　　வாய்ந்து, சிவத்தின் அருள் ஊற்றாய்த்

5. "The fact must be borne in mind that in Tamil alone exist systematic, authoritative works on the Saiva Siddhanta whereas in Sanskrit either in Vedic or in the post-Vedic period not even a single systematic work on this philosophy is to be met with............."

—Maraimalai Adikal.

திருவின் மிகுந்த தேவார
திருவா சகந்திருமுறைகள்[6]
பொருவின் றுடைத்தாய்ப் பொலிந்தோங்கிப்
புகழ்மிக் குயர்ந்த பொற்சமயம்! (7)

அறிவின் முடிந்த முடிபாக
அருமை பெருமை பலநிறைந்து
செறியும் 'சைவ சித்தாந்தம்'[7]
என்னும் சிறந்த கொள்கையினை,
நறிய அளவும் அறிவியலும்
நல்லோர் அடைவும் நடைமுறையும்
நெறியின் அமையக் கொண்டொளிர்ந்து
நிலைபெற் றிலங்கும் நெடுஞ்சமயம்! (8)

இறையே உயிரே உலகென்றே
இலங்கும் மூன்று பெரும்பொருளும்
முறையே அளவை நெறிநின்று,
முன்னும் பின்னும் முரணுமே
நெறியே ஆய்ந்து தடைவிடையால்
நிறுத்தும் மறுத்தும் மெய்ந்நிறீஇக்
குறையே எவரும் உணர்வுடையார்
கூறற் கியலாப் பொதுச்சமயம்! (9)

மேலை நாட்டின் அறிஞருமே
மிகவும் வியந்து பாராட்டும்[8]
சால நல்ல பன்முடிபும்
தருக்க நெறியில் அறிவியலும்

---

6. "In no literature with which I am acquainted has the individual religious life—its struggles,dejections, its hopes and fears,itsconfidence and triumph—receives a delineation more frank and more profound."

—Sir Charles Eliot.

7. "Saiva Siddhanta is the choicest product of the Dravidian intellect."

—Dr. G. U. Pope.

"Saiva Siddhanta may be ranked among the perfect and cleverest system of human thought."

—Dr. Kamil Zvelebil.

"As a system so simple so thoroughly rational, so tolerant yet so thoroughly characteristic in its views, so ideal yet so thoroughly practical, so ancient yet so thoroughly scientific and modern, is, I venture to submit, impossible to find on the face of earth."

—Mayilai Kizhar.

8. "Of the European scholars who interested themselves in Saiva Siddhanta, Dr. G. U. Pope, Revd. H. R. Hoisington, and Dr. Grant. Revd. G. M. Cobban, Revd. W. H. Schomerus, and Barnett have all translated Saiva Siddhanta into English and other languages. Dr. Paul Deussen, Dr. William John, Dr. F. Otto Schrader, Revd. H. A. Popley, Prof. R. W. Fraser, Revd F. Goudie, T. Froulkes, Revd. G. E. Philips and Mr. A. L. Clayton and many others were distinguished scholars of Saiva Siddhanta."

தோலத் தெருட்டி அறிவுறுக்கும்
　　தூய நல்ல எழிற்சமயம்!
ஏல மிக்கச்சீர் திருத்தத்திற்
　　கிகலாது இயைந்த இன்சமயம். (10)

இல்லென் வழக்கர் முதலாகச்
　　சிவாத்து விதிகள் ஈருகச்
சொல்லும் வழக்கர் பற்பலரும்
　　சொல்லா நிற்கும் எத்தனையோ
பல்ல வழக்கும் கடந்துசென்று
　　பண்டைத் தமிழர் மறைமுடிவாம்
நல்ல வழக்கே தழீஇநின்று
　　நலமே வளர்க்கும் நற்சமயம்! (11)

ஒன்றாய் வேறாய் உடனாக
　　உயிர்கள் தம்மோடு ஒருங்கியைந்து
நன்றே அருளால் அவற்றினுக்கு
　　நயந்து கண்டும் காட்டியுமே
நின்றே உதவும் இறைவனருள்
　　நிலையை, அத்து விதப்பொருளால்
வென்றே உணர்த்தி மெய்கண்டார்
　　விளக்கி நிறுவும் மெய்ச்சமயம்! (12)

எல்லா நூல்கள் தம்முள்ளும்
　　இனிதே சுருங்கித் திகழ்வதெனச்
சொல்லா நிற்பர் திருக்குறளைச்
　　சூழ்ந்து கருதின் அதனினுமே
பல்லாற் றானும் சிவஞான
　　போதம் சுருங்கிப் பயன்பெருகும்!
நல்லோர் புகழும் மெய்ந்நூல்தான்
　　நலக்கப் பிறங்கும் கலைச்சமயம்! (13)

நாற்ப தடியால், இருநூற்றுப்
　　பதினறு எளிய நற்சொல்லால்,
ஏற்ற அறுநூற் றிருபான்நான்கு
　　எழுத்தால், சமயக் கொள்கையெலாம்
தேற்றித் தெருட்டும் சிவஞான
　　போதச் செழுநூல் போல்எங்கும்
வேற்றேர் நூலின் றெனவியப்ப
　　மேவித் திகழும் உயர்சமயம்! (14)

'மெய்ந்நூல் உணர்வா விளம்புமெலாம்
　　மிகவும் வானிற் சிறகடித்தே
உன்னின் நிலத்திற் கால்பதியாக்
　　குற்றம் உடைய' என இகழ்வர்;

நன்னர் அந்தக் குறையின்றி
நடையின் மெய்ம்மை முறைபொருந்தி
முன்னி இம்மை மறுமைநலன்
முற்றும் பெறச்செய் முழுச்சமயம்! (15)

அருமை மிகுதொல் காப்பியமும்
ஆன்ற பெருஞ்சீர்த் திருக்குறளும்
பெருமை பிறங்க அனைத்துலகும்
பேண விளக்கும் கொள்கையெலாம்
உரிமை மிகநூற் றுக்குநூறு
ஒன்றிச் சிறிதும் முரணின்றி
ஒருமை மிகஓங் குணர்வின்ப
விருந்தாய் ஒளிரும் ஒண்சமயம்! (16)

சிற்பம் ஓவம் இசைகூத்துச்
சிறப்பே மிக்க பிறகலைகள்
பொற்பத் தழைத்தே ஆங்காங்கும்
புதுமை புனிதம் பேரழகு
பற்ப லார்ந்து விளங்கநின்று
பண்டைத் தமிழ்நா கரிகத்தின்
வெற்றித் தூணும் கோயில்பல[9]
மிகவும் உடைய சீர்ச்சமயம்! (17)

கருதி யுணர்ந்து கலைஞரெலாம்
களித்து வியந்து மெய்ம்மறக்க
வரையும் வடிவிற் சிறந்துயர்ந்தே
மாட்சி மிகும் அம்பலவாணர்

---

(9) Above all, temples became centres of religious and social life. As landholder, employer and consumer of goods and services, as bank, school and museum, as hospital and theatre, in short as a nucleus which gathered round itself all that was best in the arts of civilised existence and regulated them with the humaneness born of the spirit of Dharma, the mediaeval Indian temple has few parallels in the annals of mankind."

—Prof. K. A. Nilakanta Sastri.

(10) "How amazing the range of thought and sympathy of the rishi-artists who first conceived such a type as this, affording an image of reality, a key to the complex tissue of life, a theory of nature, merely satisfactory to single clique or race, nor acceptable to the thinkers of one century only, but universal in its appeal to the philosopher, the lover and the artist of all ages and all countries.

No artist of today, however great, could more exactly or more wisely create an image of that Energy which science must postulate behind all phenomena. This is poetry, but nevertheless, the truest science."

—Dr. Ananda Coomaraswamy,
Siddhanta Dipika, vol. XIII.

அரிய சிறப்பின் அம்மையப்பர்
ஆலின் நீழல் அமர்செல்வர்
முருகன் அழகு வடிவமெலாம்
முன்னி அமைத்த முதற்சமயம்! (18)

எல்லா உயிரும் விழைந்துமிக
எய்த முயலும் இன்பதனை
இல்லா உலகில் எய்துதற்காம்
நெறியே அறியார் மிகமயங்கிப்
பல்லாற் றானும் பலப்பலரும்
பலவே குழற, அன்பொன்றே
நல்லா றென்று கண்டுணர்ந்து
நலக்கத் தெருட்டும் நற்சமயம்! (19)

சைவ சமயம் மிகச்சிறந்த
தமிழர் சமயம்! பழஞ்சமயம்!
மெய்யிற் செறிந்த விழுச்சமயம்!
விரிந்த நோக்கின் வியன்சமயம்!
பொய்யில் கேள்விச் சான்றோர்கள்
போற்றிப் புகழப் பொலிசமயம்!
வையம் செழிக்க இதுபரவி,
மக்கள் நலமே மிகவாழ்க! (20)

—ஆசிரியர்.

நன்னர் அந்தக் குறையின்றி
நடையின் மெய்ம்மை முறைபொருந்தி
முன்னி இம்மை மறுமைநலன்
முற்றும் பெறச்செய் முழுச்சமயம்! (15)

அருமை மிகுதொல் காப்பியமும்
ஆன்ற பெருஞ்சீர்த் திருக்குறளும்
பெருமை பிறங்க அனைத்துலகும்
பேண விளக்கும் கொள்கையெலாம்
உரிமை மிகநூற் றுக்குநூறு
ஒன்றிச் சிறிதும் முரணின்றி
ஒருமை மிகஒங் குணர்வின்ப
விருந்தாய் ஒளிரும் ஒண்சமயம்! (16)

சிற்பம் ஓவம் இசைகூத்துச்
சிறப்பே மிக்க பிறகலைகள்
பொற்பத் தழைத்தே ஆங்காங்கும்
புதுமை புனிதம் பேரழகு
பற்ப லார்ந்து விளங்கநின்று
பண்டைத் தமிழ்நா கரிகத்தின்
வெற்றித் தூணும் கோயில்பல[9]
மிகவும் உடைய சீர்ச்சமயம்! (17)

கருதி யுணர்ந்து கலைஞரெலாம்
களித்து வியந்து மெய்ம்மறக்க
வரையும் வடிவிற் சிறந்துயர்ந்தே
மாட்சி மிகும் அம்பலவாணர்

---

(9) Above all, temples became centres of religious and social life. As landholder, employer and consumer of goods and services, as bank, school and museum, as hospital and theatre, in short as a nucleus which gathered round itself all that was best in the arts of civilised existence and regulated them with the humaneness born of the spirit of Dharma, the mediaeval Indian temple has few parallels in the annals of mankind."

—Prof. K. A. Nilakanta Sastri.

(10) "How amazing the range of thought and sympathy of the rishi-artists who first conceived such a type as this, affording an image of reality, a key to the complex tissue of life, a theory of nature, merely satisfactory to single clique or race, nor acceptable to the thinkers of one century only, but universal in its appeal to the philosopher, the lover and the artist of all ages and all countries.

No artist of today, however great, could more exactly or more wisely create an image of that Energy which science must postulate behind all phenomena. This is poetry, but nevertheless, the truest science."

—Dr. Ananda Coomaraswamy,
Siddhanta Dipika, vol. XIII.

அரிய சிறப்பின் அம்மையப்பர்
ஆலின் நீழல் அமர்செல்வர்
முருகன் அழகு வடிவமெலாம்
முன்னி அமைத்த முதற்சமயம்! (18)

எல்லா உயிரும் விழைந்துமிக
எய்த முயலும் இன்பதனை
நில்லா உலகில் எய்துதற்காம்
நெறியே அறியார் மிகமயங்கிப்
பல்லாற் றானும் பலப்பலரும்
பலவே குழற, அன்போன்றே
நல்லா றென்று கண்டுணர்ந்து
நலக்கத் தெருட்டும் நற்சமயம்! (19)

சைவ சமயம் மிகச்சிறந்த
தமிழர் சமயம்! பழஞ்சமயம்!
மெய்யிற் செறிந்த விழுச்சமயம்!
விரிந்த நோக்கின் வியன்சமயம்!
பொய்யில் கேள்விச் சான்றோர்கள்
போற்றிப் புகழப் பொலிசமயம்!
வையம் செழிக்க இதுபரவி,
மக்கள் நலமே மிகவாழ்க! (20)

—ஆசிரியர்.

# வேதத்தின் பிரிவுகள்

(வேதார்த்த ரத்னாகர அக்நிஹோத்திரம் ஸ்ரீ ராமாநுஜ தாதாசாரியார், கும்பகோணம்)

இப்பொழுது வழக்கத்தில் இருந்து வரும் வேதம், வியாசர் காலத்தில் அவரால் வகுக்கப்பட்டு, நான்கு வேதங்களாகவும், அவைகளுள் பல கிளைகள் (சாகைகள்) உள்ளவைகளாகவும் காணப்படுகிறது. நான்கு வேதங்களாக வகுக்கும் காலத்திலேயே வியாசர், கர்ம தத்துவத்தின் தேவையையும் வளர்ச்சியையும் மனத்தில் கொண்டு வகுத்துள்ளார் என்று தெரிகிறது. புராணங்களும் அவ்விதமே கூறுகின்றன. வேதங்களை வகுத்ததினால் வியாசருக்குத் தனித்த பெருமை உண்டு.

அறம் பொருள் இன்பம் வீடு என்ற மனிதனுடைய குறிக்கோளை நான்கு விதமாகப் பெரியோர்கள் பிரித்துள்ளார்கள். இவைகளில் அறம் பொருள் இன்பம் மூன்றும் இவ்வுலக வாழ்க்கையைப்பற்றியது. வீடுஎன்பதுவாழ்க்கையை விட்டு வெளியேறிப் பகவானை அடைந்து அளவற்ற சுகத்தை அனுபவிப்பதாகும். வேதத்தில்காணப்படும் கருத்துக்களை இந்த அடிப்படையில் நான்கு விதமாக வகுக்கலாம். இவைகளுள் மோட்சம் என்பது விடுவதைப் பற்றிக் குறிப்பிடுவதால் அதைப் பற்றிக் குறிப்புக்கள் சுருக்கமாகவே காணப்படுகின்றன. அறம் பொருள் இன்பம் இவை பல பிரிவுகள் உள்ளவைகளாக இருப்பதால், அவைகளைப் பற்றினகுறிப்புக்கள்மிகுதியாகக் காணப்படுகின்றன. ஒன்றுக்கொன்று முரண்பட்டதும் வேறு பட்டதுமான உலக வாழ்க்கையைப் பற்றிப் பேசும் இடங்கள் கர்ம காண்டம் என்றும், ஆத்மா விடுதலையை அடைந்து மோட்சத்தை அடைய வழிகூறும் பாகத்திற்கு ஞான காண்டம் என்றும், பெரியோர்கள் பெயரிட்டார்கள். அவ்விதமே சிலர் உபாஸனா காண்டம் என்று ஒன்று தனியாக இருப்பதாக நினைக்கிறார்கள். அவ்வப்போது செய்ய வேண்டியதாயும், அந்தந்தப் பயன்களைக் குறித்துச் செய்ய வேண்டியதாயும் உள்ள சடங்குகளைச் சொல்லும் பாகங்களைக் 'கர்ம' காண்டம் என்றும், சடங்குகள் இடத்தில் அகத்தில் தியானம் செய்வதற்கு வழிகாட்டும் இடங்களுக்கு 'உபாஸனா' காண்டம் என்றும், தியானத்திற்கோ உபாஸனத்திற்கோ அவசியமில்லாமல் முடிவான பரம்பொருளைக் காட்டி அவன் உணர்வை மட்டும் உண்டாக்க ஏற்பட்டுள்ள பாகத்தை 'ஞான' காண்டம் என்றும் கூறுகிறார்கள். வேதாந்திகள் ஆன்மாவின்விடுதலையிலேயே கருத்துள்ளவர்களாதலால் அவர்கள் தங்களுடைய முயற்சிகளிலேயே ஈடுபட்டு அந்தப் பாகத்தையே முக்கியமாக விவரிக்கிறார்கள். கர்ம காண்டம் என்பது சடங்குகளைச் சொல்வது மூலமோ, அறம், பொருள், இன்பங்களை விளக்குவதின் மூலமோ, உலக வாழ்க்கையைப் பற்றிப் பேசுவதாலும், இது உலகாயதக் கொள்கையிலே அடிப்படையாய்க்கொண்டுஏற்பட்டதுஎன்று நினைக்கக் கூடாது. இங்கு சொல்லப்படும் உலக வாழ்க்கை வறட்டு நாத்திக வாதத்தின் அடிப்படையில் அமைந்தது இல்லை. தெய்விக ஆத்மீக அடிப்படையில் அமைந்த உலக வாழ்க்கையே உலகாயதமாக நினைக்கப்படும் இம்மைக்குத் தெய்விக அடிப்படையைக் கொடுப்பதே கர்ம காண்டத்தின் நோக்கம். இதைத்தான் பிரவிர்த்தி மார்க்கம், நிவிர்த்தி மார்க்கம் என்று இருவிதமாகப் பெரியோர்கள் கூறுவார்கள். தத்துவ ஞானியாக உள்ளவன் உலக வாழ்க்கையை நடத்த முற்படலாம். உலக வாழ்க்கையை விட்டுத் துறவறத்தைப் பின்பற்றி விடுதலை பெறவும் முயற்சிக்கலாம். இரண்டு வழிகளையும் வேதம் வகுக்கிறது. சுவாமி விவேகானந்தர் அவர்கள், திருவாங்கூர் மகா ராஜா அவர்களைச் சந்தித்தபோது இந்து மதத்தின் அடிப்படையான கொள்கைகளை இரண்டே வழியில் இரண்டு வரியில் குறிக்க முடியுமா? என்று கேட்டார்களாம். அதற்குச்சுவாமி அவர்கள், இந்துமதம் என்பது ப்ரவிருத்தி, நிவிர்த்தி என்று இரண்டு வகையாக இருப்பதாகக் கூறினார். நிவிர்த்தி மார்க்கத்தை உபநிஷத்துக்கள் கூறுகின்றன. ப்ரவிருத்தி மார்க்கத்தைக் கர்ம காண்டங்கள் விளக்குகின்றன. ஆத்மா, பரமாத்மா பரம்பொருளை அடையும் வழி இவைகளை விளக்குவதாலும், மெய்ஞ்ஞானத்திற்குத் தனிச் சிறப்பை உபநிடத்துக்கள் வெளியிடுவதாலும்ஞான காண்டம் என்ற பெயர் இதற்கு வந்தது. கர்ம காண்டங்களில் சடங்குகளைப் பற்றிச் சொல்லும் இடங்கள் தன் சிறப்பை இழந்து விட்டா

லும் அங்கு சொல்லப்படும் வாழ்க்கைக்குத் தேவையான அறம் பொருள் இன்பம் இவை யினுடைய சிறப்பு என்றுமே இருந்து வரு வதை நாம் பார்க்கிறோம். இவ்விதம் கர்ம காண்டம், ஞான காண்டம் என்று இரு கூறாகப் பிரித்தாலும் ஒன்றுக்கொன்று பிரிக்க முடியாமல் ஒன்றை நம்பி மற்றொன்று இருப் பதாகவே பெரியோர்கள் கூறி விட்டார்கள். வெளிச் சடங்குகளைச் செய்பவனுக்குத்தான் ஆத்ம சுத்தி ஏற்படும் என்றும், அவனே கடவுளைப் பார்க்க முடியும் என்றும், பெரி யோர்கள் கூறுகிறார்கள். சடங்குகள் வெளித் தோற்றத்தில் லோகாயதமாகத் தோன்றினு லும், தெய்விக அடிப்படையில் அமைந்திருப் பதால், கர்ம காண்டத்திலும் ஆத்மீக தத்து வம் நிறைந்து இருப்பதாகவே நினைத்து வேதம் முழுவதுமே தெய்வ மணம் கமழும் நூல் என்று ஸ்ரீராமாநுஜர் போன்ற வேதாந்தி களும் பேசுகிறார்கள். சடங்குகளைச் செய்யச் செய்யக் கடவுளிடத்தில் அன்பு பெருகும் என்பது ஸ்ரீராமாநுஜரின் கொள்கை. மேலும் கர்மாக்கள் (சடங்குகள்) விளக்கும் ப்ராமண பாகங்கள் ஞான நிலையில் உள்ளவனுக்குத் தேவையற்றவைகளாக இருந்தாலும், வேத மந்திரங்களில் முழுவதும் ஒன்றும். 'முழு உண்மை'. 'முடிவான உண்மை' 'பரம் பொருளே' சொல்லப்படுவதால் மந்திரங் களில் கர்ம காண்டம், ஞான காண்டம் என்ற வேற்றுமைகிடையாதுஎன்று அரவிந்தமகரிஷி போன்ற பெரியோர்கள் கூறுகிறார்கள். வேற் றுமையில் ஒற்றுமை என்ற வழியில் ஞான மார்க்கத்தாலோ, கர்மஞானத்தாலோ கடவுளை வழிபடும் வழியைச் சொல்வதால் வேதத்தின் ஒற்றுமையும் நிலைத்து விடுகிறது.

அடுத்தாற்போல் வேதங்களில் சொல்லப் படும் சடங்குகளைப் பற்றிக் கவனிப்போம்.

இவை மிகச் சிறியவையான அக்னிஹோத் திரம் முதல் மிகமிகப் பெருமையான சப்தி ரயாகங்கள் வரை இருந்து வருகின்றன. ஒவ் வொரு நாளிலும் காலை மாலை வேளைகளில் செய்ய வேண்டியது அக்னிஹோத்திரம். 15 நாட்களுக்கொரு தடவை பருவக் காலங் களில் நான்கு மனிதர்களின் உதவி கொண்டு செய்வதுதர்சபூர்ணமாசம் என்றுசொல்லப்படு கிறது. 5 தினங்களில் 16 மனிதர்களின் உதவி கொண்டு செய்யப்படுவது, சோம யாகம் என்று பெயர். யாகம் செய்பவர்க்கு உதவி செய்யும் மனிதர்களுக்கு ருத்விக்கள் என்று பெயர். ஒரு நாளில் செய்யும் யாகம் முதல், ஆயிரம் வருஷங்கள் வரை செய்யக் கூடிய ஸோம யாகங்களும் இருக்கின்றன. இவை களைத் தான் பெரியோர்கள் வேள்விகள் என்று குறிப்பிடுகிறார்கள். சோமயாகத்தில் சோமக் கொடியைப் பிழிந்து அதனுடைய ரசத்தை ஹோமம் பண்ணுவார்கள். முன் ருக் வேதத்தாலும், சாமவேதத்தாலும் கடவுளை வழிபடுவார்கள்.

வேள்விகளுக்குஅக்னிஅவசியமானது. அக்னி யில் ஹோமம் பண்ணுவது வேள்விகளில் முக்கியமானதாகும். அக்னியில் (நெருப்பில்) அரிசி, நெய் முதலான பலவித திரவியங்களும் ஆடு முதலியவைகளின் மாமிசங்களும் ஹோமம் செய்யப்படுகின்றன. அக்னியில் செய்ய வேண்டிய ஹோமங்களில், நெய்யினால் செய்யும் ஆகுதியே முக்கியமானது. இந்த ஹோமம் எந்த வேள்வியிலும் பரந்திருக்கிறது. மற்றவை குறிப்பிட்ட சில சந்தர்ப்பங்களில் தான் வரும். நெருப்பை வைக்கும் இடத் துக்கு ஆயதநம் என்று பெயர். ஹோமத்திற்கு ஆன திரவ்வியங்களை வைக்குமிடத்துக்கு வேதி என்று பெயர். ஹோமம் செய்வதற்கு முன்னும் பின்னும் பல காரியங்கள் செய் யப்படுகின்றன. இதைச் செய்பவனுக்கு அத்வர்யு என்று பெயர். அதே சமயத்தில் கடவுளைத் துதிக்கும் காரியத்தைச் செய்ய ஹோதாஎன்றமனிதன்ஏற்பட்டுள்ளான்இசை யோடு கடவுளை வழிபட ஏற்பட்டவனுக்கு உத்காதா என்று பெயர். பிரும்மா என்பவன் சடங்குகளை மேற்பார்வையிட ஏற்பட்டவன். யஜுர் வேதத்தினால் அத்வர்யுவும், ருக் வேதத் தினால் ஹோதாவும், சாமவேதத்தினால் உத் காதாவும், அதர்வண வேதத்தால் பிரும்மாவும் காரியங்களைச் செய்கிறான். சடங்குகளில் வேத மதத்திற்கும், பாரசீக மதத்திற்கும் நெருங்கின தொடர்பு உண்டு. அக்னியில் அவர்கள் ஹோமம் செய்யாவிட்டாலும் அக்னி இல்லாமல் ஒரு சடங்குகளையும் அவர்கள் செய்ய மாட்டார்கள். அவ்விதமே நான்கு மனிதர்களின் உதவியும்சடங்குகளுக்கு வேண் டும். சோம ரசமும் அவர்களின் சடங்கில் முக்கியமான பாகமாக இருந்து வருகிறது. வேதத்தில் சொல்லப்படும் சடங்குகள் மிகவும் விஸ்தாரமானவை. ருக் யஜுர் சாமம் என்ற மூன்று மந்திரங்களின் கோஷம் எப்போதுமே ஒலித்துக் கொண்டிருக்கும். கர்மாவின் ஒவ் வொரு அம்சமும் ஒவ்வொரு கொள்கையை அடிப்படையாகக் கொண்டுள்ளது. பண் பாட்டின் முதிர்ச்சியை வேள்விகளில் பார்க் கலாம். வேள்விகளில் யார் எங்கு எப்படிச் செய்தாலும் அவைகளின் பரந்த நோக்கம் மக்களின் நன்மையே. மழை நன்றாகப்

பெய்து சுபிட்சமாக மக்களை வாழச் செய்வதே இவைகளின் குறிக்கோள். அரசியல் பொருளாதார நன்மைகளைக் குறிக்கோளாகக் கொண்ட அநேக சடங்குகளும் இருந்து வருகின்றன. சடங்குகளின் பெருமையை உணர்ந்ததாலேயே ஆழ்வார்களும், நாயன்மார்களும் வேத வேள்விகளைப்புகழ்ந்து பேசுகிறார்கள். பகவானைப் பாடுவதுபோல் ஆங்காங்கு வேள்விகள் நடைபெறுவதையும் குறிப்பிடுகிறார்கள். ஒரு காலத்தில் வேள்விகள் மிகப் பிரபலமாக இருந்தன. கரிகாலச் சோழன் போன்ற அரசர்களும் அதைச் செய்து வந்து இருக்கிறார்கள். வேள்விகளுக்கு எவ்வளவு பெருமை இருந்தாலும் இப்பொழுது வெகு சிலரே இதைச் செய்து வருவதால் இதன்பிராபல்லியம் மங்கிவிட்டது. பொதுமக்களின் நன்மையைக் குறித்துச்செய்யப் பட்டவைகளே வேள்விகள். ஆனால் பிற்காலத்தில் அதனிடத்தில் ஆலய வழிபாடு வந்து விட்டதால் வேத வேள்விகள் மக்களுடைய கண்களுக்குத் தென்படாமல் போய் விட்டன. ஆலய வழிபாட்டுக் கொள்கையும் வேள்விக் கொள்கையோடு இணைந்துள்ளதுதான். வேள்விகள் இல்லாமல் கும்பாபிஷேகம் கிடையாது, உற்சவம் கிடையாது, பூஜை கிடையாது. ஆனால் ஆலய வழிபாட்டில் விக்ரக வழிபாடு முக்கியமானதாக விளங்குகிறது. அக்னியில் ஹோமம் பண்ணுவது அதற்கு அங்கமாகவே இருந்து வருகிறது, இந்து மதத்தைப் பூரணமாகத் தெரிந்து கொள்ள வேணும் என்பவர்களுக்கு வேள்விகளின் அறிவு இன்றியமையாதது. சைவ, வைணவ சமயாசாரியார்கள் தங்களுடைய கொள்கைகளுக்கு வேதங்களையே நம்பி நிற்பதால் வேதங்களின் முக்கியத்துவம் புதிய வழியில் திரும்பி விட்டது. யஜுர் வேதமும், ப்ராமணங்களும் வேள்விகளையே அடிப்படையாகக் கொண்டு ஏற்பட்டிருந்தாலும் ருக் வேதம் கடவுள் கொள்கைகளுக்கு ஒரு அரிய பொக்கிஷமாக விளங்கி வருகிறது. மற்ற இடங்களிலும் கடவுள் கொள்கை ஆங்காங்குக் காணப்படுகின்றன. பக்தி மார்க்கத்தில் கடவுள் கொள்கை பிரதானமாக இருப்பதால் சமயாசாரியார்கள் வேதங்களைத் தங்களுக்கு மூலப் பிரமாணமாகச் சொல்லுகிறார்கள். சமயக் கொள்கைகளைத் தெரிந்து கொள்ள வேதங்களின் உதவி அவசியமாகிவிட்டது.

ருக் வேதத்தில் 28 கிளைகளும், யஜுர் வேதத்தில் 101 கிளைகளும், சாம வேதத்தில் 1000 கிளைகளும், அதர்வண வேதத்தில் 9 கிளைகளும் இருந்ததாக நூல்கள் கூறுகின்றன. ஆனால் இப்போது ருக் வேதத்தில் ஒரு கிளையும், யஜுர் வேதத்தில் 6 கிளைகளும், சாம வேதத்தில் 2 கிளைகளும், அதர்வண வேதத்தில் 2 கிளைகளும் இருந்து வருகின்றன.

## வேண்டுகோள்

ஒப்பந்தம் முடிவு பெற்றதனுல், அச்சக மாற்றம் செய்ய நேர்ந்ததன் காரணமாகத், 'திருக்கோயில்' ஜூன் மாத இதழ் வெளிவருதலில், சிறிது காலதாமதம் ஏற்பட்டுவிட்டது. அன்பர்கள் பொறுத்தருள்வார்களாக !

—ஆசிரியர்.

# ஞான சித்தர்களும் சித்த மருந்தும்

(திரு. வி. பலராமையா அவர்கள், பி.ஏ., பி.எல்.,
பிரதம மாகாண மாஜிஸ்ட்ரேட், சென்னை-8)

அறுகம்புல் விஷத்தை முறிப்பதில் ஓர் அரிய மூலிகை என்பதைப் பற்றி முன் கட்டுரையில் எழுதியிருந்தோம். பந்தர்க்கால் நடுவதற்கு முன்னும், நூதன வியாபாரம் தொடங்குவதற்கு முன்னும், நூதன உழவுஏர் கட்டுவதற்கு முன்னும் பிள்ளையார் பிடித்து, அப்பிள்ளையாரின் உச்சித் தலையில் இந்த அறுகம்புல்லைச் செருகுவதை நாம் பார்க்கிறோம். இவ்விதம் மக்கள் ஏன் செய்கிறார்கள் என்பது நமக்குப் புலனாவதில்லை. அதேபோல் மணப் பெண்ணுக்கும், மணமகனுக்கும் நலங்கு வைக்குங்காலையில், ஒருகிண்ணத்தில்நல்லெண்ணெய் வைத்துக் கொண்டு அறுகம்புல்லை அந்த எண்ணெயில் முக்கி உச்சித் தலையில் தடவிக் குளிப்பாட்டுவார்கள். இவைகளெல்லாம் மூடப் பழக்கமென்று நாம் மிக எளிதாகப் புறக்கணித்து விடுகிறோம். நமக்குத் தெரியாத, புரியாத ஒன்றை முட்டாள்தனம் என்று சுருக்காக ஒதுக்குவது முறையாகாது. மனிதன் ஆயிரம் வருடங்கள் வரை உயிர் வாழ்ந்தாலும் இப்பரந்த உலகத்தில் அவன் அறிந்து கொள்வது ஆயிரம் ஊசி முனைகள் தான் என்பதை அறிவாளியாயிருப்பவன் உணருவான். "அவனுக்கென்னய்யா தெரியும் மடையன், முட்டாள்", என்றெல்லாம் வெகுவாக நாம் பேசி வருகிறோம். பெரியோர்கள் இப்படி பிதற்றுபவர்களைப் பார்த்துப் புன்னகை புரிவார்கள். "அந்தோ! பாபம்! அறிவீனத்தின் சிகரம்", என்றுதான் பெரியோர்கள் எண்ணுவர்.

ஆகவே நமக்கு எட்டாத கலைகள் இவ்வுலகில் பல உள்ளன. புட்டபர்த்திசாயிராம் என்பவரைப் பற்றிப் பலர் கேள்வியுற்றுஇருக்கலாம், பார்த்தும்இருக்கலாம். அதுபோல்பன்றிமலைசாமி என்பவரைப் பற்றியும் பலருக்குத் தெரிந்திருக்கும். அவர்கள் நினைத்த மாத்திரத்தில் விபூதி, குங்குமம், பூமாலைகள், தங்க நகைகள், ரூபாய் நோட்டுகள் வரும்! அந்த நகைகள் என்றும் தங்கமாகவே இருக்கும். நோட்டுகளும் செலாவணியாகக் கூடியவை. இவர்களைச் சிலர் ஏதோ ஜாலவித்தைக் காரர்கள் என்றெல்லாம் பேசுகின்றனர். அப்படிப் பட்டவர்களுக்கு நான் வக்காலத்து வாங்கிக் கொண்டு பேசவரவில்லை. அவர்கள் ஜாலவித்தைகள் செய்வதாக வைத்துக் கொண்டாலும், அந்த ஜாலவித்தைகளை நாம் ஏன் செய்தல் கூடாது? நம்மால் ஏன் செய்ய முடியவில்லையென்பதை ஆலோசித்தல் வேண்டும். அவர்களிடம் ஏதோ ஓர் சக்தி உள்ளதென்பதை யாராவது மறுக்க முடியுமா? அதுவுமன்றி அவ்வித சக்தியின் தோற்றம் எவ்விதம் அவர்களுக்குக் கிடைத்தது? நம் அறிவிற்கு எட்டாத தொன்றைப் புறக்கணிப்பது முறையன்று எனத் தோன்றுகிறது.

ஆகவே நமக்குப் புரியாத மேலோர் வகுத்த பழக்க வழக்கங்களை அப்புறத்தே தள்ளிப் போடுவது முறையன்று. அறுகம்புல்லைத் தலையில் வைப்பதற்கும் ஏதோ காரணம் இருக்க வேண்டும். 'நமசிவாய' வென்னும் பஞ்சாட்சரத்தை விளக்கி இதற்கு முன் எழுதிய கட்டுரையில் சித்தர்கள் அந்த அட்சரங்களைப் பஞ்சபூத சக்திகளைக் குறிப்பதாகுமென்றதைப் பற்றியும் எழுதியிருந்தோம். அந்த அறிவு இயங்குமிடம் உச்சி என்பதையும் விளக்கிப் படம் வரைந்து காட்டியிருந்தோம். ஆகவே இந்த உச்சியைப் பாதுகாத்து வைப்பது வெகு முக்கியமல்லவா. "உச்சி குளிர்ந்தால் உடல் குளிரும்" என்பது பெரியோர் மொழி. அந்த உச்சியைக் குளிர்ச்சியான நிலைமையில் வைப்பதற்காகவே நம் பெரியோர், பிறந்த குழந்தையின் உச்சியில் விளக்கெண்ணெய் தடவி வைப்பர். அப்பழக்கம் ஆங்கில மருத்துவம் நம் நாட்டில் தாண்டவமாட ஆரம்பித்தநாளிலிருந்தேஅநாகரிகமான பழக்கமென மக்கள் கருதலாயினர்.

அறுகம்புல்லும்நல்லெண்ணெயும்சேர்ந்தால் இருநல்லோர்கள் சேர்ந்தது போல ஆகும். அறுகம்புல்லைப் பறித்து, அம்மிக் குழி அல்லது அம்மிக்கல்லில் தட்டி, ஒரு கோப்பையிலிட்டு அது முங்குமளவுக்கு நல்லெண்ணெய் ஊற்றி வெயிலில் மூன்று நாட்களுக்கு வைக்கவும். நான்காம் நாள் எடுத்து ஓர் அகலவாயுடைய கண்ணாடிப் புட்டியில் எண்ணெயும் அறுகம்புல்லுமிட்டு வைத்துக் கொண்டு, வாரம் இரு முறை (சனி புதன் விசேடம்) தலையில்

தேய்த்து, சிகைக்காய் தேய்த்து, வெந்நீரில் குளிக்கவும். அன்று மிளகு ரசம் உபயோகிக்கவும். மோர், தயிர், விலக்கவும். இப்படி இரண்டு நாட்கள் செய்த உடனே உடல் குளிர்ச்சி யடைவதை உணரலாம். அதி குட்டினால் சிலகுழந்தைகள எலும்பும் தோலு மாக ஆகி விடுவார்கள். அப்படிப்பட்ட குழந்தைகளுக்கு மிக்க பலனைத் தரும். உடல் வன்மை பெருகும். அறிவு விருத்தியாகும். கண்கள் பிரகாசமடையும்.

சித்தர்கள் அதன் விசேடத்தைக் கீழ்க் கண்டபடி குறிப்பிட்டுள்ளனர்.

அறுகம்புல் வாதபித்து ஐயமோ டீளை
சிறுக அறுக்குமின்னுஞ்செப்பில்—அறிவுதருங்
கண்ணோ யொடுதலைநோய், கண்புகை ரத்த பித்தம்
உண்ணோய் ஒழிக்கும் உரை.

(பொருள்): அறுகம்புல் திரிதோஷம், கோழை, கண்ணோய், சிரஸ்தாபம், தூம்பிரம நோய், ரத்தபித்தம், மருந்து சூடு இவைகளைப் போக்கும். இன்னும் அறிவு தரும்.

இந்த அறுகம்புல்லின் இலை, காம்பு, வேர் எது வேண்டுமானாலும் உபயோகிக்கலாம். சமூலமாயும் (இலை காம்பு வேர்) உபயோகிக் கலாம்.

சுரத்திற்கு: 1. அறுகம்புல் ஒரு கைப்பிடி 2. துளசி ஒருகைப்பிடி 3. மிளகு ஒரு தேக்கரண்டியளவு. எல்லாவற்றையும் நைய இடித்துத் தண்ணீர் ½ படி அளவுக்கு எடுத்து ஷி இடித்த சரக்குகளைத் தண்ணீர்விட்டு ⅛ படியாகக் காய்ச்சிக் கொள்ளவும். இதை இரு வேளைகளுக்குப் பங்கிட்டு 4 மணிக்கொரு தரம் கொடுக்கவும். இப்படி நான்கு வேளைகள் கொடுத்தால் போதும். காய்ச்சல் தணிந்து விடும். சரீர வனப்புண்டாகும்.

இந்த அறுகம்புல்லை நாம் காபி போடுவதற்குக் காய்ச்சும் தண்ணீரில் கொஞ்சம் போட்டு அந்தத் தண்ணீரைக் காபி போடுவதற்கு உபயோகப் படுத்தலாம். வாசனை உருசியில் ஒரு விதமான மாறுதலும் தெரியாது.

ஆங்கில மருந்துகளால் பாதிக்கப்பட்டவர்கள் இந்த அறுகம்புல், மிளகு சேர்ந்த கியாழத்தைச் சிலநாட்கள் உபயோகித்தால் மருந்துகளால் உண்டான நஞ்சு முறியும். நீர் அடைப்பு உள்ளவர்களுக்குத் தாராளமாய்நீர் பிரியும். வேண்டுமானால் இதனுடன் நெருஞ்சில் என்னும் முள் மூலிகையையும் சேர்த்துக் கியாழமிட்டுச் சாப்பிடுதல் சாலச் சிறந்தது.

அறுகம்புல்லைச் சாப்பிட்டு ஆரோக்கியத்தைக் காப்பாற்றுங்கள்.

(தொடரும்.)

---

## மதிப்புரைகள்

### 1. இளம்பூரணர் எழுத்துரை:

தொல்காப்பியம் என்னும் செந்தமிழ்ப் பெரும் இலக்கண நூலின் எழுத்ததிகாரத்திற்கு, ஆசிரியர் இளம்பூரணர் எழுதியுள்ள உரைக்கு உரிய விளக்கமும் குறிப்புமாக இந்நூல் அமைந்துள்ளது. இதனைச் சீலத்திரு.சிவஞானபாலய சுவாமிகள் செந்தமிழ்க் கல்லூரியின் தலைவராகிய வித்துவான் திரு. அ. சிவலிங்கனர் அவர்கள், இயற்றியுள்ளார்கள். காஞ்சி தொண்டை மண்டல ஆதீன குருமகாசந்நிதானம் ஸ்ரீஞானப்பிரகாசதேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள், இந்நூலுக்கு அணிந்துரை வழங்கியுள்ளார்கள். தமிழ் இலக்கணம் பயிலும் வித்துவான் வகுப்பு மாணவர்களுக்கு இந்நூல் பெரிதும் பயன்படும். ஆசிரியரின் கலைபயில் தெளிவும், கற்பிக்கும் திறனும், ஆராய்ச்சி உணர்வின் நுட்பமும் இந்நூலில் நன்கு இனிது புலனாகின்றன. விலை ரூபா மூன்று. கிடைக்குமிடம்: மாணிக்கம் பதிப்பகம், 43, முருகப்ப முதலி தெரு, புரசைப்பாக்கம், சென்னை-7.

### 2. திருவலம்புர மாலை:

இந்நூல் திருவலம்புரம் என்னும் தலத்திலுள்ள சிவபெருமானைப் பரவிப் போற்றும் பாமாலையாக அமைந்தது. திருவலம்புரம் செந்தமிழ்ச் சைவப் பெரியார் திரு. பொன். முத்துவேலாயுத முதலியார் அவர்களால், இயற்றப் பெற்றது. நூலாசிரியர் அவர்கள் திருப்பாதிரிப் புலியூர் ஞானியார் சுவாமிகள், வண்ணக் களஞ்சியம் காஞ்சி நாகலிங்க முனிவர் போன்ற சைவப் பெரும் சான்றோர்களின் அன்பும் மதிப்பும் ஆசியும் பெற்ற பெரும் புலவர். இப்பெருந்தகையார் இயற்றிய இந்நூல் திருவலம்புரம் பற்றிய செய்திகளை யெல்லாம் தொகுத்து விளக்கிச் சொல்லும் தோத்திர நூலாகச் சொற்பொருட் சுவை நலங்கள் மிகுந்து திகழ்கின்றது. 67 பாடல்கள் கொண்டது. விலை குறிக்கப் பெறவில்லை. கிடைக்குமிடம்: முதுபெரும் புலவர் திரு. பொன். முத்துவேலாயுத முதலியார், மேலப்பெரும்பள்ளம், பூம்புகார், தஞ்சை மாவட்டம்.

—ஆசிரியர்